# தொல்காப்பியம்

## மெய்ப்பாட்டியல், உவமையியல்

தொகுதி - 3

தமிழண்ணல்

# தொல்காப்பியம்

மாணவர்களுக்கு என முதன்முதலில் எழுதப்பெற்ற
புதியமுறை எளியவுரை

❀ தொல்காப்பியம்

1. எழுத்ததிகாரம்
2. சொல்லதிகாரம்
3. பொருளதிகாரம் – அகத்திணையியல், புறத்திணையியல்
4. களவியல், கற்பியல், பொருளியல்
5. மெய்ப்பாட்டியல், உவமையியல்
6. செய்யுளியல், மரபியல்

( ஆறு தனிநூல்கள்)

❀ தொல்காப்பியமூலம் முற்றிலும் நல்ல பாடமாக அமைக்கப் பெற்றுள்ளது.

❀ 'இயல் கருத்து நிரல்' என்பது முற்றிலும் புதிய முயற்சி. நூற்பா வரிசைப்படி,கருத்து நிரல் தரப்பெற்றிருப்பதால், அவ்வியலின் உள்ளடக்கம் முழுமையாய் விளங்கும்.

❀ நூற்பாக்கள் தோறும் தந்துள்ள தலைப்புக்கள் வாக்கியமாகத் தரப்பட்டுள்ளன. இது தொல்காப்பியம் நன்கு விளங்க வேண்டும் என்பதற்கான முயற்சி.

❀ நூற்பாக்களுக்குக் கருத்துரை, அருஞ்சொற்பொருள், புதிய – இக்கால – நடைமுறை எடுத்துக்காட்டுகள் தந்திருப்பது, இந்நூல்களின் தனிச் சிறப்பு.

புதிய முறை எளிய உரை

# தொல்காப்பியம்

## பொருளதிகாரம்

தொகுதி - 3

**மெய்ப்பாட்டியல், உவமையியல்**

**தமிழண்ணல்**

விற்பனை உரிமை

**மீனாட்சி புத்தக நிலையம்**

மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு, மதுரை - 625 001.

தொலைபேசி: அலுவலகம் : 2345971 வீடு : 2560517

ஈமெயில்: meenakshiputhakam@hotmail.com

முழுவதும் திருத்திய முதற் பதிப்பு : நவம்பர், 2010.

திருவள்ளுவர் ஆண்டு : 2041, கார்த்திகை

உரிமை : உரையாசிரியர்க்கு

விலை உரூவா : **35.00**

## நூல் விவரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தொல்காப்பியம் பொருளதிகாரம் தொகுதி - 3 |
| உரையாசிரியர் பெயர் | : | தமிழண்ணல் |
| முதற்பதிப்பு | : | நவம்பர், 2010 |
| நூலின் தன்மை | : | இலக்கண விளக்கம் |
| நூல் அளவு | : | 14 x 22 செ.மீ. டெம்மி |
| தாள் | : | வெள்ளைத்தாள் |
| அச்சு எழுத்து அளவு | : | 12 புள்ளி |
| பக்கங்கள் | : | 72 |
| நூலின் விலை | : | உரூவா. **35.00** |
| அச்சிட்டோர் | : | மோனார் கிராபிக்ஸ், சென்னை. |
| ஒளி அச்சுக் கோர்வை | : | ஆதவன் பிரிண்டர்ஸ், மதுரை. |
| வெளியீடு | : | சிந்தாமணிச் செல்வம் |

SELLING RIGHTS

**MEENAKSHI PUTHAKA NILAYAM**

Mayura Complex 48, Dhanappa Mudali Street, Madurai - 625 001.

☎ Off : 2345971 Resi : 2560517

E-Mail. meenakshiputhakam@hotmail.com

# நூன்முகம்

**தொ**ல்காப்பியம் தமிழர்களின் அரிய செல்வம். அதனை இலக்கண நூலாக மட்டும் கருதுவது தவறு. அதன் வழி அறியப்படும் எழுத்து, சொல் இலக்கணக் கூறுகளிற் பல, உலக மொழிகளுக்கும் பொருந்தக் கூடியவை. பொருளதிகாரமோ, வேறு எம்மொழியிலும் காணப்படாதது. அதனை இலக்கியத்திற்கு இலக்கணம் எனலாம். இலக்கியம் படைப்பது எவ்வாறு என்பதை விளக்குவது அது.

பொருளதிகாரத்தில் இலக்கியக் கொள்கைகள் பலவுள. அவை தமிழுக்கே உரியவை. இன்னும் உலகம் அறியாதவை. தமிழர்களே இவற்றில் இன்னும் கருத்துச் செலுத்துவதில்லை.

தமிழ்ப் புலவர்கள், தமிழாசிரியர்கள் கூட இவற்றை அறிந்தின்புற முயல்வதில்லை.

நாம் இவற்றைத் தெளிவுபட அறிந்தாலல்லவா, இவற்றை உலகோர்க்கு எடுத்துச் சொல்ல முடியும்?

பொருளதிகாரம் நான்கு தொகுதிகளாக வெளியிடப்படுகின்றது. இந்நூல் மூன்றாம் தொகுதி. சிறிய அளவினதாயின் படிக்கத் தூண்டும். மெய்ப்பாடு, உவமை இரண்டையும் இலக்கியக் கோட்பாடுகளாகவே தொல்காப்பியர் விளக்குகிறார். மாணவர்களும் குறிப்பாகத் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்பிக்கும் பேராசிரியப் பெருமக்களும் இந்நூலை ஊன்றிப் படிக்க வேண்டும் என்பது எம் வேணவா; வேண்டுகோள்.

இத்தொகுதிக்குப் பேராசிரியர் உரை மிகச் சிறந்தது; மிகவும் போற்றிப் படிக்க வேண்டியது. இளம்பூரணர் உரையிற் காணப்படும் நுட்பங்களும் பல. மெய்ப்பாட்டியலுக்கு கணக்காயர் ச.சோ.பாரதியார் எழுதிய புதியவுரை உளது. பிற பல ஆய்வுரை, தெளிவுரை, விரிவுரைகளும் உள. அவை அனைத்தையும் தேடிப் பயில, இம் மாணவர் பதிப்பு, ஒரு தூண்டுகோலாகும்.

சதாசிவ நகர், **தமிழண்ணல்**
மதுரை - 625 020.

## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | மெய்ப்பாட்டியல் முன்னுரை | 5 |
| | இயல்கருத்துநிரல் | 9 |
| | மெய்ப்பாட்டியல் | 12 |
| 2. | உவமையியல் - முன்னுரை | 40 |
| | இயல்கருத்துநிரல் | 42 |
| | உவமையியல் | 46 |
| | நூற்பா முதற்குறிப்பு அகரநிரல் | 72 |

# மெய்ப்பாட்டியல்

## முன்னுரை

மெய்ப்பாட்டியலும் உவமையியலும் பாடலில் அமையும் 'அணி நலன்' பற்றியவை. இவையே அடிப்படை அணிகளாகும். பிற எல்லாம் தொல்காப்பியரால் பொருள் உறுப்புக்கள் என்று, அங்கங்கே கூறப்படும்.

மெய்ப்பாட்டைச் 'சுவையணி' எனப் பிற்காலத்தார், மிகச் சுருக்கி விடுவர். அது அதன் மிகுசிறப்பை அறியாததால் வந்தது.

உவமையை மட்டுமே தொல்காப்பியர் அணி வகைகளில் தலைமையானதாக, சிறப்புடையதாகத் தனி இயலில் விளக்குகிறார். அவர் 'அணியியல்' என ஓர் இயல் வகுக்கவில்லை: வகுக்க விரும்பவில்லை.

உள்ளுறை, இறைச்சி, பொருள்கோள்வகை, பயன், எச்சம், முன்னம், முரண்தொடை, அங்கதம், வண்ணம், வனப்பு என அவர் கூறுவன பல இலக்கிய அணி சார்ந்தவையே. அவற்றை எல்லாம் அவர் பாட்டுப் பொருளைச் சிறப்பிக்க வரும் 'உறுப்புக்களாகக்' கருதுகிறார். இதனைப் பேராசிரியர் தமது உவமையியல் உரை இறுதியில் நன்கு விளக்குகிறார்.

பேராசிரியர் 'மெய்ப்பாடு என்பது பொருட்பாடு' என்பார். அதாவது பாடலில் அதன் பொருள் படிப்பவனுக்கு வெளிப்படும் நிலை. பொருள் + பாடு = பொருள் தோன்றுதல். படுதல் – தோன்றுதல். மெய் – பாட்டுப் பொருள். மேலும் அவர், "மெய்ப்பாடு என்பது பொருட்பாடு. அஃதாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோர் ஆற்றால் வெளிப்படுதல்" என்பார். உள்ளத்திலிருப்பது உடலிலே தோன்றுவதென்பதால், இலக்கியமோ. நாடகமோ உள்ளத்துள் விளைவிக்கும் சுவை அவ்வாறே உடம்பில் வெளிப்பட்டுப் புறத்தார்க்குப் புலனாகிறது. இங்கேதான் நாடக மெய்ப்பாடும், இலக்கிய மெய்ப்பாடும் ஒன்றாகின்றன.

இதை உணர்ந்து 'பண்ணைத் தோன்றிய' (நாடகத்தில் தோன்றிய) என்று தொடங்கி, இலக்கிய மெய்ப்பாட்டை, ஓர் இலக்கியக் கொள்கையாக்கிய திறம், உலகறிந்து போற்றுதற்குரிய அரிய திறனாகும்.

மெய்ப்பாடு என்பது நாடக நாட்டியத்திற்குரியதல்லவா? அஃது எவ்வாறு இலக்கியத்திற்குப் பொருந்தும்? மெய்ப்பாடு – என்பதன் பொருள் யாது?

இலக்கிய மெய்ப்பாடு இருவகையாக மெய்ப்பாட்டியலில் வகுத்துக் கூறப்படுகிறது. ஒருவகை : பொதுவான மெய்ப்பாடு என்ற கோட்பாடு. மெய்ப்பாட்டியல் முதல் 12 நூற்பாக்கள், இதன் இறுதி நூற்பா (27), செய்யுளியலில் முதல் நூற்பாவில் செய்யுளுறுப்புக்களில் ஒன்றாக எண்ணப்படுவது, பின்னர் அதுபற்றி இரு சூத்திரங்களில் (1460, 1461) கூறப்படுவது, இவற்றின் உரை விளக்கங்கள் யாவும் பொதுவகையால் **'மெய்ப்பாடு' எனும் கோட்பாட்டை, உலக இலக்கியமனைத்திற்கும் பொருந்தும் வகையில் விளக்குவன.**

மெய்ப்பாடு என்பதை அகத்திணைக்குரியதாகவே கூறுவன பிறிதொருவகை. மெய்ப்பாட்டியல் 27 நூற்பாக்களில், முன்னே சுட்டிய 13 நூற்பாக்கள் தவிர ஏனைய 14 நூற்பாக்களும் அகம் பற்றியன.

நாடக மெய்ப்பாடு 32ஆக இருந்து, 16 ஆகி, 8 ஆக நிறைவுறும். பேராசிரியர் நாடக நூற்படி தரும் விளக்கம் இது. காண்போன், காணப்படுபொருள், அதனால் அவன் உள்ளத்து நிகழும் குறிப்புணர்வு, அஃது அவனது உடம்பில் வெளிப்படும் விறல் (சத்துவம்). இந்நான்கையும் சுவை எட்டுடன் பெருக்க 32 ஆகிறது. இவற்றில் காண்பவனது பொறியுணர்வும் காணப்பட்ட பொருளும் கலந்த வழியே சுவை நிகழும். உள்ளத்துள் தோன்றும் உணர்வே உடம்பில் வெளிப்படும். ஆகவே நான்கு எனப்பட்டது இரண்டாகி, சுவை எட்டுடன் பெருக்கப் பதினாறாகிறது. ஆக முடிந்த பயன் சுவைத் தோற்றமேயாதலால் மெய்ப்பாடாக – மெய்யில் தோன்றுதலின் இவை எட்டெனவே அடங்கும்.

செயிற்றியம் ஒரு நாடக நூல். மறைந்த அந் நூலின் சில நூற்பாக்கள் மட்டும் உரையாளர்களால் காட்டப்படுகின்றன.

நாடகத்தில் ஒருவன் புலிகண்டு நடுங்குவதாக நடித்தால், காண்போரும் அச்சச் சுவை பெறுதலும் கூடும். அல்லது அவலமோ, கருணையோ பிறக்கக் கூடும்.

செயிற்றியனார்,

**உய்ப்போன் செய்தது காண்போர்க்கு எய்துதல்**
**மெய்ப்பா டென்ப மெய்யுணர்ந் தோரே**

என்று மிக எளிதாகக் கூறிவிடுகிறார். இது நாடகத்திற்கே உரியது. உய்ப்போன் - நடிப்பவன். அவன் அனுபவிப்பது அல்லது நடிப்பது அப்படியே காண்பவரிடத்தும் விளைந்தால். அதுவே உண்மையான. இயல்பான நடிப்பு. மேலும் அவர்,

'இருவகை நிலத்தின் இயல்வது சுவையே' என்றார். அது காண்போனும் காணப்படுபொருளும்; பாடலைப் பாடுபவனும் அதைக் கேட்பவனும்; இலக்கியத்தைப் படைப்பவனும் அதைப் படிப்பவனும் என எவ்வாறும் எடுத்துக் கொள்ளலாம். இதனால் பிறப்பதே சுவை.

இவ்வாறு இலக்கிய மெய்ப்பாடு எண்சுவையுள் அடங்கும் என்பதை, இருவகையாலும் (நாடகவழக்கு, இலக்கியவழக்கு) நிறுவுவர் நம் முன்னோர்.

படைப்பவன் எண்சுவைபட எவ்வளவு திறமையாகப் படைத்தாலும், படிப்பவன் 'கண்ணினும் செவியினும் உலகைக் கண்டும் கேட்டும்' திண்ணிதின் உணர்ந்த நல்ல பட்டறிவு மிக்கவனாக இருக்க வேண்டும்; திறமைசாலியாக இருக்க வேண்டும். அத்துணை உணர்வுடைய மாந்தர்கட்கு அல்லாமல், நல்ல பாட்டின் சிறந்த கூறுகளாகிய நன்னயப் பொருளை அறிந்து அனுபவித்தல் இயலாது.

**கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்**
**உணர்வுடை மாந்தர்க்கு அல்லது தெரியின்**
**நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே**

மெய்ப்பாட்டியலின் இவ் இறுதி நூற்பா மிக முக்கியமானது; மிகச் சிறந்தது. மெய்ப்பாடு என்பது பொருள் கோள் - பாட்டுப் பொருளை அறிந்து கொள்வது (பொருள் + கோள்= பொருளைக் கொள்வது), அறிந்து சுவையை அனுபவிப்பது என இது பகர்கின்றது. நாடகத்தில் கண்ணாற் காண்பதால் சுவை பிறக்கிறது; இலக்கியத்தைப் படிப்பதால் அல்லது கேட்பதால் சுவை பிறக்கிறது.

சுவைஞன் திறமையும் அறிவுமுடையவனாய், இவ்வாறு சுவைக்க வேண்டுமெனில், படைப்பவன் அதைத்திறமையோடும் படைப்பாற்றலோடும் சுவை பொருந்தப் படைக்க வேண்டாமா? அதனைச் செய்யுளியலில் கூறுகிறார். தொல்காப்பியர்.

**உய்த்துணர்வு இன்றித் தலைவரு பொருளான்**
**மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டாகும். (1460)**

ஒரு பாடலை மிக ஆராய்ந்து பொருளுணர வேண்டி இருந்தால் அது சுவை பயக்காது. தத்துவம், நீதி, சட்டவிதிகள், அறிவியல் அவ்வாறிருக்கலாம். இலக்கியம் உய்த்து உணர வேண்டாது, மேற்போக்காகப் படித்த அளவிலேயே வெளிப்படையாகப் பொருள் அமையப் பாடப் பட வேண்டும். மெய்ப்பட - மெய்ப்பாடு உண்டாக என்றும் பொருளுணர்வு தோன்ற என்றும் பொருள்படும்.

"கவிப்பொருள் உணர்ந்தால் அதனானே சொல்லப்படும் பொருள் உய்த்து வேறு கண்டாங்கு அறிதல் மெய்ப்பாடு.. அது தேவருலகம் கூறினும் அதனைக் கண்டாங்கு அறியச் செய்தல் (ஆகிய) செய்யுளுறுப்பு..." "தலைவரு பொருளான் எனவே நோக்குறுப்பால் உணர்ந்த பொருட்பிழம்பினைக் காட்டுவது மெய்ப்பாடு..." இக் கருத்தினாற் 'கவி கண்காட்டும்' என்றும் சொல்லுப". மெய்ப்பாடு - சொல் கேட்டார்க்குப் பொருள் கட்புல னாதல்.

இவ்வாறு பேராசிரியர் தரும் விளக்கங்கள் தொல்காப்பியக் கருத்துடன் ஒட்டியவை. இவற்றால் தொல்காப்பியர் ஓர் இலக்கணி மட்டுமல்லர்; ஓர் இலக்கியக் கோட்பாட்டாளரும் ஆவார் என்பது மெய்ம்மைப் படுகிறது. அவர் தமது காலத்திற்கொத்த நடையில் விளக்கியுள்ளார். அவற்றை நாம் நமது காலத்திற்கொப்ப எடுத்துக் கொள்ள வேண்டும்.

இயற்கைப் புணர்ச்சி காதலர் மனமொன்றியபின் முதன்முதற்கூடுவது. இஃது ஊழால் நிகழ்வதால் தெய்வப் புணர்ச்சி என்றும் கூறப்படும். இதில் புணர்வதற்கு முன்பு நிகழ்பவை நான்கு நான்கு மெய்ப்பாடுகளாக மூன்று படி நிலைகள் கூறப்படுகின்றன. இதில் பன்னிரண்டு மெய்ப்பாடுகள் உள.

கூடியபின் நிகழ்வனவற்றையும் மூன்று படிநிலைகளாகப் பன்னிரண்டு மெய்ப்பாடுகள் கூறப்படுகின்றன. முழுவதும் பாலியல் உளவியல் சார்ந்த மெய்ப்பாடுகள் இவை.

களவின்கண் பிரிந்திருக்க நேரும்போது தோன்றும் இருபது மெய்ப்பாடுகள் ஒருவகையாகவும் திருமணத்திற்குத் தூண்டுவனவாக எட்டுவகை மெய்ப்பாடுகள் ஒரு தொகுதியாகவும் திருமணம் முடிந்தபின் நிகழும் பத்து மெய்ப்பாடுகள் ஒரு வகையாகவும் ஆக 38 அகக்காதல் மெய்ப்பாடுகள் கூறப்படுகின்றன. இவை பெரிதும் தலைவியிடம் நிகழ்வனவாகவே காணப்படுகின்றன.

இத்தகைய மெய்ப்பாடுகள் எல்லோரிடமும் தோன்றிவிடா. சிறந்த உயர்ந்த மாந்தரிடையேதான் இவை நிகழும். மேலும் இவை எல்லாமும் எல்லாரிடமும் நிகழா. இவற்றுள் சிலவோ, பலவோ காதல் மாந்தரிடம் நிகழுமெனல் உறுதி.

இத்தகைய நாகரிகம் மிக்க பண்பாடுள்ள பாலியல் சார்ந்த மெய்ப்பாடுகள் தோன்ற வேண்டுமேல் அவர்களிடம் இருக்க வேண்டிய நற்பண்புகள் யாவை? பத்து வகைப் பொருத்தங்கள் யாவை? அவர்களிடம் இருக்கக் கூடாத குணங்கள் எவை?

பத்துவகைப் பொருத்தம் கூறி, பன்னிரண்டு வகைப் பொருந்தாப் பண்புகளையும் கூறுகிறார். இவற்றின்படி நடந்தால் நல்ல குடும்பம் அமையும். ஒற்றுமை ஓங்கும். மணமுறிவுகளே ஏற்படா. குடும்பம் சிறந்தால் உலகம் சிறக்கும்.

இன்று பத்துவகைப் பொருத்தம் கணியத்தின் (சோதிடம்) வழி பார்ப்பது. அன்றும் இருந்ததோ, என்னவோ? தொல்காப்பியர் கூறும் பத்துவகைப் பொருத்தங்களே உலகியல் சார்ந்தவை. உளவியலுக்கு ஒத்தவை.

அகத்திணைக் காதலர் மிகவுயர்ந்த பண்பாளர்கள்; குறிக்கோள் மாந்தர்கள்; ஒழுக்கம் மிக்கவர்கள். ஆயினும் குற்றங்குறைகளே செய்யாதவர்கள் என்று கூற இயலாது; குற்றம் ஏற்படுமேல் அவற்றுக்காக நாணுபவர்கள்; மானவுணர்ச்சி மிக்கவர்கள்.

இவ்வாறு காதல் வழி, மானுடம் வெல்ல வழிகாட்டுகிறது தொல்காப்பியம்.

### இயல் கருத்து நிரல்

**நாடக மரபு இலக்கிய மரபாதல்**

நாடகங்களில் தோன்றும் 32 வகைமைகள், அவற்றின் புறத்தே 16 ஆக அடங்கும். காண்போன், காணப்படுபொருள், உள்ளக்குறிப்பு, உடம்பில் வெளிப்படல் - எனும் நான்கும் இரண்டாகும். காண்போனும் கண்டபொருளும் கலந்தவழி தோன்றுவதே சுவை; உள்ளக்குறிப்பே உடம்பில் தோன்றுதலால் இரண்டும் ஒன்றாகும். சுவை 8. இவற்றின் முன்னைய நான்குடன் பெருக்கினால் 32. அவற்றையே இரண்டாகச் சுருக்குதலால் அதன்படி பெருக்க 16 ஆகும்.

அப் பதினாறும் வெளிப்பட உடம்பில் தோன்றுவதை வைத்தே அறியப்படுதலால் எட்டெனவே அடங்கும்.

நகை, அழுகை (அவலம்), இளிவரல், மருட்கை (வியப்பு), அச்சம், பெருமிதம் (வீரம்), வெகுளி (சினம்), உவகை (காதலின்பம்) என்பன எண் சுவைகள்.

நகைச்சுவைக்கு நான்கு அடிப்படை : எள்ளல், இளமை, பேதைமை, மடம்.

அழுகைச் சுவைக்கு நான்கு அடிப்படை : இளிவு, இழவு (இழப்பு), அசைவு (ஏற்றத்தாழ்வு), வறுமை.

இளிவரல் (அவமானம்) நான்கு அடிப்படை உடையது: மூப்பு, பிணி, வருத்தம் (உடல் நோகுமாறு வேண்டாத உழைப்பு), மென்மை (ஆற்றலின்மை).

மருட்கைச் சுவை அடிப்படைகள் : புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் (ஒன்று மற்றொன்றாதல்).

அச்சச் சுவை அடிப்படைகள் : அணங்கு (தெய்வம்), விலங்கு, கள்வர், தம்இறை (தெய்வம் அல்லது அவரவர்க்கு மேலுள்ள அதிகாரிகள்).

பெருமிதச் சுவை தோன்றுமிடங்கள் : கல்வி, தறுகண் (வீரம்), இசைமை (புகழ்), கொடைப் பண்பு.

வெகுளிச்சுவை பிறக்குமிடங்கள் : உறுப்பறை (உடலை வெட்டுதல் போல்வன), குடிகோள் (மக்களைத் துன்புறுத்தல்), அலை (அலைத்து வருத்தல்), கொலை.

உவகைச் சுவை தோன்றும் அடிப்படைகள் : செல்வம், புலன் (நுகர்ச்சி), புணர்வு (காதலர் கூடுதல்), விளையாட்டு.

இவை 32 தவிர, மக்களின் மனவுணர்வு வெளிப்பாடுகளாக, பிறிதொரு 32 மெய்ப்பாடுகள் கூறப்படுகின்றன. அவை செல்வம் உடைமையால் வரும் பொலிவு உட்பட, மனம் நடுங்குதல் வரை நிரல்படக் கூறப்படுகின்றன.

**இயற்கைப் புணர்ச்சி, காதலரின் முதற்கூட்டம். உடலுறவுக்கு முன்பு நிகழும் பாலியல் உளவியல் சார்ந்த மெய்ப்பாடுகள் மூன்று வகையின.**

புகுமுகம் புரிதல் முதலிய நான்கு

கூழைவிரித்தல் முதலிய நான்கு

அல்குல் தைவரல் முதலிய நான்கு

உடலுறவுக்குப் பின்பு நிகழ்வன மூன்று வகையின

பாராட்டு எடுத்தல் முதலிய நான்கு

தெரிந்து உடம்படுதல் முதலிய நான்கு

புறஞ்செயச் சிதைதல் முதலிய நான்கு

இவை போலும் மெய்ப்பாடுகள் பலவும் நிலைபெற்ற திருமணம் எனும் கற்புவாழ்வுக்கு இட்டுச் செல்லும் முன் அறிகுறிகளாகும்.

உயிர் மெலிவது போன்று காம வேட்கை மிகுமிடத்து, இம் மெய்ப்பாடுகள் இன்றியும் கூட்டம் நிகழும். திருமணமும் நடைபெறும்.

**களவுக்காலப் பிரிவு மெய்ப்பாடுகள்**

மேலே கூறியவை தவிரப் பின்வரும் மெய்ப்பாடுகளும் நிகழ வாய்ப்புளது.

இன்பமானவற்றை வெறுக்கத் தோன்றுதல், பசி வருத்தவும் உண்ணாதிருத்தல், உடல்மெலிதல் போல 20 மெய்ப்பாடுகள் கூறப்படுகின்றன. இவை பெரிதும் களவுக்காலத்துப் பிரிவில் நிகழ்வன. கற்புக்காலப் பிரிவிற்கும் இவற்றுள் பல பொருந்தும்.

**திருமணத்திற்குத் தூண்டும் மெய்ப்பாடுகள்**

களவில் கூட இயலாது தடை ஏற்படும் போது தலைவனைத் தலைவி கடிந்து பேசுவாள். இது முதலாக எட்டு மெய்ப்பாடுகள் 'அழிவில் கூட்டம்' எனப்படும். துன்பமில்லாத கற்புக்காலப் புணர்வுக்கு வழிவகுக்கும்.

**திருமணமானபின் நிகழ்வன**

பிறை தொழுதல் முதலாயவை, நல்ல கணவன் வாய்க்கத் தொழுபவை. திருமணத்திற்கு என ஒரு தலைவனைக் காதலித்த அன்று முதலே, தலைவி பிறைதொழத் தயங்கி, அஞ்சுவாள். இல்லற நெறியைத் தெளிவாள். இவை போலும் பத்து மெய்ப்பாடுகள் கற்புக் காலத்தே தலைவிபால் நிகழ்வன.

**தலைவன், தலைவியர் பொருத்தம் (10)**

நல்ல குடும்பத்தில் பிறத்தல், சிறந்த குடி மகனாகவும் மகளாகவும் விளங்குதல் (குடிச் சிறப்புக்கேற்ற குணநலன்கள் உடைமை), ஆளுமை, அகவைப் பொருத்தம், உரு எனும் வடிவ ஒப்புமை, உடற்கட்டுக்கேற்ற காம உணர்விலும் ஒப்புமையுடைமை, மனத்தைக் கட்டுப்படுத்தும் நிறையுடைமை, அருளுடைமை, நல்ல உணர்வுடைமை,

திருவுடையராகும் மன மகிழ்ச்சியுடைமை - இவை பத்தும் மணமக்களாதற்குத் தகுதியுடைய பத்துப் பொருத்தங்களாகும்.

**மணமக்களிடம் இருக்கத் தகாத தீய குணங்கள் (12)**

பொறாமை, கொடுமை, தன்னைத்தான் வியத்தல், புறங்கூறல், வன்சொல் பேசுதல், ஒருவர் மற்றவர்க்குச் செய்ய வேண்டிய கடமையை மறத்தல், சோம்பல், தன்குடி உயர்வு எனப் பேசுதல், தானே இன்புற நினைத்தல், அறிவின்மை (அல்லது வறுமை), மறதி, ஒருவர் மற்றவரைப் பிறருடன் ஒப்பிடுதல் - இவை கூடாத தீய பண்புகள்.

மெய்ப்பாடு என்பது, 'நல்நயப் பொருள்கோள்' - அதாவது இலக்கியத்தின் நல்ல நயம்மிக்க பொருளைக் கண்டு கொள்ளும் திறமை. அதற்கு நல்ல புலன் அனுபவம் வேண்டும். கண்ணாலும் செவியாலும் (ஏனைய உடல், வாய், மூக்கினாலும் கூட), நன்கு உறுதிப்பட உலக இன்ப துன்பங்களை அறியவல்ல அனுபவ உணர்வுள்ள மாந்தர்களுக்கு மட்டுமே. இலக்கியச் சுவைகளையும் உணர்ந்து இன்புற முடியும். மற்றவர்களால் இதை எண்ணிப் பார்க்கவும் இயலாது.

## மெய்ப்பாட்டியல்

### கூத்திலும் நாட்டியத்திலும் தோன்றும் மெய்ப்பாட்டு வகைகள்

**பண்ணைத் தோன்றிய எண்நான்கு பொருளும்**
**கண்ணிய புறனே நால்நான்கு என்ப. (1195)**

*நாடக மெய்ப்பாடுகள் இலக்கிய மெய்ப்பாடுகளாதல்*

நாடக அரங்கில் தோன்றிய 32 பொருளும், சிந்திக்குமிடத்து அதன் சுருக்கமாக 16இல் அடங்கும். காணப்படு பொருளும் காண்பவனது கண், செவி முதலிய பொறியுணர்வும் கலப்பதால் சுவை தோன்றும். அப்போது அவனது மனத்துள் எழும் குறிப்புணர்வே மெய்யின் கண் வெளிப்படும். இவற்றை நான்காகக் கொண்டு நகை, அழுகை முதலான எண் சுவையுடன் பெருக்கினால் 32 ஆகும். மேலே குறித்தவாறு நான்கும் இரண்டாகி ஒன்று கலப்பதைக் கொண்டு, எண் சுவையுடன் பெருக்கினால் 16 ஆகும். நாடகத்தில் நான்காகும் இது பார்வையாளரால் சுவைக்கப்படும் பொழுது, 'உய்ப்போன் செய்தது காண்போர்க்கு எய்துதல்' எனும் செயிற்றியப் படி இரண்டாகி, எண் சுவையுடன் சேர்ந்து 16 ஆகிறது.

பண்ணை – விளையாட்டு ஆயம். இன்பம் நுகரும் ஆட்டபாட்டம். ‘முடியுடை வேந்தரும் குறுநில மன்னரும் முதலாயினார் நாடக மகளிர் ஆடலும் பாடலும் கண்டும் கேட்டும் காமம் நுகரும் இன்ப விளையாட்டு’ என்பது பேராசிரியம். நாடகத்தில் 32 என்பது, அதனைச் சுருக்கி எண்ணும்போது 16 என அடங்கும்.

இதில் பேராசிரியர் கருத்து ஏற்புடையது; சுவைக்கப்படு பொருள்; அதனையுணரும் சுவைப்பவனது பொறியுணர்வு, அது மனத்துட்பட்ட போது உள்ளத்துள் தோன்றும் குறிப்பு, அதனால் உடலில் தோன்றும் கண்ணீரரும்பல் மெய்ம் மயிர் சிலிர்த்தல் முதலான வேறுபாடுகள். இவை நான்கையும் எண்வகைச் சுவையுடன் பெருக்க 32 ஆகும். இவற்றுள் காணப்படு பொருளும் காண்போன் பொறியுணர்வும் சேர்ந்துதான் சுவை பிறக்கும்; மனக்குறிப்பும் அதன் உடல் வெளிப்பாடும் ஒருங்கு இணைந்தவையே. இதனால் 32 என்பது 16 என ஆகின்றது.

### 32-16 ஆகி - அதுவும் 8 - ஆதல்

**நால்இரண்டு ஆகும் பாலுமா ருண்டே. (1196)**

முன்பு பதினாறு எனினும், இலக்கியத்தைப் பொறுத்தவரை இது எட்டெனவே படும். இலக்கியத்தில் தோன்றும் சுவைக்குப் படைத்தவன் உட்படப் பல காரணிகளிருப்பினும், பாடலால் படிப்பவனிடம் விளையும் சுவையே வெளிப்பட நிற்பதால், இங்கு எட்டு என்பது பொருந்தும்.

மெய்ப்பாடு என்ற சுவைக் கோட்பாடு, நாடகம் கூத்து ஆடல்பாடல் நாட்டுப்புறக் கலைகளிலிருந்துதான் இலக்கியத்திற்கு வந்தது என்பதைத் தொல்காப்பியர், ‘பண்ணைத் தோன்றிய’ (நாடக அரங்கு வகைகள்) எனத் தொடங்கியதால் நிறுவியுள்ளார்.

இஃது எட்டாய் அடங்கும் பகுதியும் உண்டு. மனத்துள் பிறந்த குறிப்பே, சத்துவமாய் - மெய்ப்பாடாய் வெளியே பிறக்கிறது. வெளியே தோன்றும் மெய்ப்பாட்டினாலேயே, உள்ளத்துள் நிகழ்ந்த சுவையுணர்வு அறியப்படும். எனவே பதினாறையும் இச் சுவை எட்டினுள் அடக்கலாம்.

இவை முன்னைய உரையாளர்களின் விளக்கங்களின் சுருக்கமாய் ஏற்புடையன. நாடகத்தில் 32 என்பது 16 ஆகும். இலக்கியத்தில் அது இன்னும் சுருங்கி எட்டாகும். எண் சுவையுள்ள பாட்டு எனில், அதை விளைவித்த பாட்டும் அதன் பொருளும் படைத்தவனும் சுவையாலேயே

அறியப்படுகின்றனர். தொல்காப்பியர், நாடக வழக்காகவிருந்த உலக வழக்கினின்றே, இலக்கியம் படைக்கப்பட்ட தென்பதை இதன் மூலம் விளக்கி விடுகிறார்.

### எட்டுவகை மெய்ப்பாடுகள் அல்லது சுவைகள்

**நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று**
**அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப. (1197)**

தொல்காப்பியர் இன்று நாம் சுவை என்பதை மெய்ப்பாடு என்பார். உள்ளத்திலும் உடலிலும் மெய்ம்மயிர் சிலிர்த்தல், கண்ணீர் அரும்பல், வியர்த்தல் என வெளிப்படும்போதுதான், அவை புறத்தார்க்குப் புலனாகின்றன. அவ்வாறு புலனாகும் சுவைகள் எட்டு; நகைச் சுவை, அழுகைச் சுவை (அவலம்), இளிவரற் சுவை, மருட்கைச் சுவை (வியப்பு), அச்சச் சுவை, பெருமிதச் சுவை (வீரம் என்னாது மேம்படுதல் எனும் பொருளில் ஆளுதல் காண்க), வெகுளிச்சுவை (கடுஞ்சினம்), உவகைச் சுவை (காதலின்பம் தலையாயது) என்பன அம் மெய்ப்பாடுகள்.

நகை - சிரிப்பு. இளிவரல் - தனது மானம் இழந்த ஓர் எளியநிலை. மருட்கை - வியப்பு. பெருமிதம் - வீரம். பிறரினும் ஒப்ப நில்லாது மேம்பட்டுப் 'பேரெல்லையாக நிற்றல்'. வெகுளி - கடுங்கோபம். உவகை - இன்ப நுகர்ச்சி.

### நகைச்சுவை தோன்றுமிடங்கள்

**எள்ளல் இளமை பேதைமை மடன் என்று**
**உள்ளப்பட்ட நகை நான்கு என்ப. (1198)**

*சுவைகள் தோன்றும் அடிப்படைகள் அல்லது சூழல்கள்*

நகை மெய்ப்பாடு அல்லது சுவை தோன்றும் சூழல்கள் : பிறருடைய ஏளனத்திற்கு ஒருவர் ஆளாதல் அதாவது எள்ளி நகையாடப்படுதல். இளமையால் மடம்பட நடந்து சிரிக்கப்படுதல். பேதைமை - அறிவின்மையால் பிறர் சிரிக்கும்படி நேர்தல். மடன் - ஒன்றை மற்றொன்றாக மாற்றியுணர்தல். பழுதைப் பாம்பென நடுங்குவதைக் கண்டவர் சிரிப்பர்.

நகை - சிரிப்பு மட்டுமன்று; ஏளனமாகச் சிரிப்புக்கு ஆளாதல். எள்ளப்படுதல் - எள்ளி நகையாடப் படுதல். இளமை காரணமாகத் தோன்றுவன. சிறு பிள்ளைகள் பேச்சும் செயலும் சிரிப்பை விளைவிக்கும்.

பேதைமை - அறிவின்மை. மடன் - அறிந்தும் அறியாதது போல ஆதல், ஐயுறுதல், ஒன்றை மற்றொன்றாக உணர்தல். பேதைமை - முழு அறியாமை. இவை நகைச் சுவையை விளைவிப்பன.

### அழுகைச்சுவை தோன்றுமிடங்கள்

**இளிவே இழவே அசைவே வறுமை என**
**விளிவில் கொள்கை அழுகை நான்கே. (1199)**

அழுகை எனும் அவலச் சுவை தோன்றக் காரணமானவை; பிறரால் தாழ்வுபடுத்தப்பட்டு எளியராய் நிற்றல். இழவு - பொருள் இழப்பு, உயிரிழப்புப் போல்வன. அசைவு - செல்வராக இருந்த நிலை கெட்டு வறியராதல், உயர்ந்த நிலையிலிருந்தவர் தாழ்வுபடுதல். வறுமை. இவை அவலம் தோன்ற அடிப்படைக் காரணங்கள்.

அழுகை - அவலம். இளிவு - பிறரால் தாழ்வு படுத்தப்பட்டு எளியராய் நிற்கும் அவல நிலை. இழவு - உயிரிழப்பு, பொருள் இழப்பு. அசைவு - முன்னைய நல்ல நிலைமை கெட்டு, வேறுபட நிற்றல், தன்னிலையில் தாழ்தல். வறுமை - வறியராதல்; 'போகம் துய்க்கப் பெறாத பற்றுள்ளம்' என்பது பேராசிரியம்.

விளிவு இல் கொள்கை - உலகில் இவை தீராதவை. என்றும் உள்ள இயல்பு.

### இளிவரல் சுவை தோன்றுமிடங்கள்

**மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு**
**யாப்புற வந்த இளிவரல் நான்கே. (1200)**

*இளிவரல் :* இளிதல் - நேர்பொருள். பிறரால் அவமானப் படுத்தப்படுதல்; தாழ்வு படுத்தப்படுதல். மூப்பு - வயது முதிர்ந்தவர்களை - முதுமையை இகழ்வோடு பார்ப்பவர் பலர். தீராத பிணியால் ஒருவன் இழிவாக நடத்தப்படுவான். வருத்தம் - பயனற்ற முயற்சிகளால் இளிவுற நேரும். வலிமையின்றித் தோற்பதால் இளிவுண்டாகும். (இளிவு - மானம் இழத்தல்.இழிபு - தாழ்வுபடுதல். இளிந்தவன் இழிவு படுத்தப்படுவான் - நுண்ணிய பொருள் வேறுபாடு உண்டு.)

இளிவரல் - நிலையில் தாழ்தல், பிறரால் தாழ்வு படுத்தப்படுதல். மூப்பு - முதுமை. பிணி - தீராத நோய். வருத்தம் - பயனற்ற முயற்சியில் கடுமையாக உழைத்தல். மென்மை - வலிமையின்மை; பகையை எதிர்கொள்ள இயலாமை. யாப்பு உற - தொடர்புற.

### மருட்கைச் சுவை தோன்றுமிடங்கள்

**புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு**
**மதிமை சாலா மருட்கை நான்கே. (1201)**

*வியப்பு :* புதுமை என முன்பு காணாததைக் கண்டாலும் மனம் மருளும் வியப்புண்டாகும். அளவுகடந்து பெரிதாயிருப்பன, மிகமிக நுண்ணிதாய் இருப்பன, ஒன்றனிடம் காணப்படும் புதிய ஆக்கம், மாற்றம். இவை அறிவுக்கு எட்டாத அளவு முன்பு காணாதவையாய்ப் புதிதாய்க் காணப்படின் வியப்புத் தோன்றும்.

மருட்கை - வியப்பு. மதிமை சாலா - முன்பு அறியாத, அறிவுக்கு எட்டாததாலும் வியப்பு ஏற்படும். புதுமை - முன்பு காணாதது. பெருமை - எல்லை கடந்து பெரியனவாய்க் காணப்படுதல். சிறுமை - மிக மிக நுண்ணிதாய்க் காணப்படுதல். ஆக்கம் - ஒன்று மற்றொன்றாதல், ஒன்றன் பரிணாமம் அல்லது வளர்ச்சி மாற்றம்.

### அச்சச்சுவை தோன்றுமிடங்கள்

**அணங்கே விலங்கே கள்வர் தம்இறை எனப்**
**பிணங்கல் சாலா அச்சம் நான்கே. (1202)**

*அச்சம்* : தெய்வம் எனவும் பேய் எனவும் நம்பி அஞ்சுதல். சிங்கம் புலி கரடி வெறி நாய்களுக்கு அஞ்சுதல். திருடர்களுக்கு அஞ்சுதல். தமக்கு மேலதிகாரிகளுக்கு அஞ்சுதல். 'தம் இறை' என்றதன் நுட்பம் அவரவர் அவர்களுக்கு மேலேயுள்ளவர்களுக்கு அஞ்சநேரும் என்பதாம்.

அணங்கு - தெய்வம், பேய் முதலியன. விலங்கு - சிங்கம், புலி, கரடி முதலியன. கள்வர் - திருடுவோர், தீயோர். தம் இறை - தமக்கு மேலே உள்ளவர், மேலாளர், பெற்றோர், அரசர், அதிகாரி போல்வார். தமக்கு மேலேயுள்ள அதிகாரிபால் தமக்கு அச்சம் வருதலே உலகியலும் உளவியலும் - இதை உணர்ந்து 'தம் இறை' என்றார் நம் தொல்லாசான். பிணங்கல் சாலா அச்சம் - சிறிதும் வேறுபடாது பிறரால் தோன்றும் அச்சம்.

### பெருமிதச்சுவை தோன்றுமிடங்கள்

**கல்வி தறுகண் இசைமை கொடைஎனச்**
**சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே. (1203)**

*பெருமிதம்* : பிறரெலாம் வீரம் என்றதைத் தொல்லாசான் பெருமிதம் என்றார். பிறருடன் ஒப்ப நில்லாது, அவர்களைவிட மேம்படுதல். கல்வியால், வீரத்தால் (தறுகண்), புகழால், கொடையால் பெருமிதம் தோன்றும்.

பெருமிதம் - வீரம். வீரம் மட்டுமன்று; பிறருடன் ஒப்ப நில்லாது எதிலும் மேம்பட நிற்றல். கல்வி - படிப்பறிவு, நூலறிவு. தறுகண் - போரில் காட்டும் வீரம், ஆண்மை, அஞ்சத்தகும் எதற்கும் அஞ்சாமை. இசைமை - புகழ், பழியொடு வருவன செய்யாமை. கொடை - ஈதல் மட்டுமன்று; உயிரும் உறுப்பும் அனைத்தும் வழங்கும் தன்னீக முடைமை.

**வெகுளிச்சுவை தோன்றுமிடங்கள்**

**உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற**
**வெறுப்ப வந்த வெகுளி நான்கே. (1204)**

வெகுளிச் சுவை கடுஞ்சீற்றம். கைகால்களை வெட்டுதல் போன்ற துன்புறுத்தும் செயல்களால் ஒருவன் சீற்றங்கொள்ள நேரும். குடிமக்களை வருத்துதல், அவர்கள் செல்வத்தை வரி அது இது என்று கொள்ளுதற்கு அதிகாரிகளும் அரசுகளும் முயலுதல். அலைத்தல் - தடிகொண்டு அடித்தல், வைதல் முதலியன. கொலை - கொல்ல முயலுதல். இவற்றால் பிறப்பது சீற்றமெனும் மெய்ப்பாடு.

வெகுளி - கடுஞ்சினம். உறுப்பறை - கை கால்களை வெட்டுதல் போல்வன. குடிகோள் - குடிமக்களிடம் கொள்ளை அடித்தல், தம் கீழுள்ள குடிமக்களை நலிதல், பொதுவாக குடிகெடுத்தலுமாம். அலை - தடிகொண்டு அடித்தல், அலைய விடுதல், வைதல், துன்புறுத்தல். கொலை - கொல்ல முயலுதல், செய்ந்நன்றி கொல்லுதல் போல அறிவு திறமையைக் கொல்லுதலுமாம். வெறுப்ப வந்த - இக் கடுங்கோபம் வெறுப்பையே விளைவிக்கும்.

**உவகைச் சுவை தோன்றுமிடங்கள்**

**செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என்று**
**அல்லல் நீத்த உவகை நான்கே. (1205)**

உவகைச் சுவை இன்ப நுகர்ச்சி. பிறரைத் துன்புறுத்தி அடையும் மகிழ்ச்சியல்லாத, இயல்பான நெறிப்பட்ட மகிழ்ச்சி இது. இது செல்வமுடைமையாலும் அதனை நுகர்தலாலும் வரும். புலன் - ஐம்புல

நுகர்ச்சிகள். அரிய காட்சிகள், இசை கேட்டல் போல்வன. புணர்வு - காம இன்ப நுகர்ச்சி. விளையாட்டு - ஆறும் குளமும் காவும் சென்று துணையுடன் ஆடிப்பாடி மகிழ்தல். பொதுவான விளையாட்டுக்களும் இதிலடங்கும்.

உவகை - இன்ப நுகர்ச்சி. அல்லல் நீத்த உவகை - பிறரைத் துன்புறுத்தியோ, பிறர் பொருளைச் சுருட்டியோ வருவன பலவும் உவகை ஆகா. யாருக்கும் அல்லல் இல்லாத, அல்லற்படுத்தாத உவகையே, உண்மையான உவகை. செல்வம் - செல்வ நுகர்ச்சி. புலன் - ஐம்புல நுகர்ச்சி. புணர்வு - காதலர் இன்பம் நுகர்தல். விளையாட்டு - ஆறும் குளமும் காவும் சென்று துணையுடன் விளையாடுதல். புலன் என்பதைக் கல்விப் பயனாகிய இன்ப நுகர்ச்சி என்பார் பேராசிரியர். விளையாட்டு - பொதுவாக இன்றைய விளையாட்டால் ஏற்படும் மகிழ்ச்சியையும் குறிக்கும் எனலாம்.

## பல்வேறு மனவுணர்வு வெளிப்பாடுகள்
## மெய்ப்பாட்டிற்குரிய பிற நிலைக் களன்கள்

**ஆங்கு அவைஒரு பாலாக ஒருபால்**
**உடைமை இன்புறல் நடுவுநிலை அருளல்**
**தன்மை அடக்கம் வரைதல் அன்பு எனாஅக்**
**கைம்மிகல் நலிதல் சூழ்ச்சி வாழ்த்தல்**
**நாணுதல் துஞ்சல் அரற்று கனவு எனாஅ**
**முனிதல் நினைதல் வெரூஉதல் மடிமை**
**கருதல் ஆராய்ச்சி விரைவு உயிர்ப்பு எனாஅக்**
**கையாறு இடுக்கண் பொச்சாப்பு பொறாமை**
**வியர்த்தல் ஐயம் மிகைநடுக்கு எனாஅ**
**இவையும் உளவே அவை அலங் கடையே. (1206)**

முன்னர்க் கூறியவை நாடக வழக்கை ஒட்டியன. 'ஆங்கு அவை ஒருபாலாக, ஈங்கு இன்னொரு பால்' (பகுதி) என்று, மீண்டும் ஒரு முப்பத்து இரண்டு மெய்ப்பாடுகள் கூறப்படுகின்றன. இவை உலக வழக்கைப் பெரிதும் தழுவியன. மக்களின் மனநிலைகளின் வெளிப்பாடுகள்; உள்ளுணர்வின் புறத் தோற்றங்கள்; அதாவது உள் மன நிலைகள்: கண்ணிலும் முகத்திலும் உடலிலும் வெளிப்படுவன.

*மனஉணர்வு மெய்ப்பாடுகள்*

1. உடைமை - செல்வம் உடைமையால் வரும் தோற்றம்.

2. இன்புறல் – மனம் இன்புறுதலால், கண்ணிலும் முகத்திலும் வெளிப்படும் இனிய மலர்ச்சி.
3. நடுவுநிலை – மனம் விருப்பு வெறுப்பின்றி நடுவு நிலையோடிருப்பதைக் காட்டும் கண்ணும் முகமும்.
4. அருளல் – அருளுடைமையைக் காட்டும் கனிவு.
5. தன்மை – ஒருவரது தன்மை. அவரது இயல்பைக் காட்டும் இது குடிப்பிறப்பில் அமையும் சாயலின் வெளிப்பாடு.
6. அடக்கம் – அடக்கமுடைமையைக் காட்டும் தோற்றமும் செயலும்.
7. வரைதல் – வேண்டாதவற்றை அறவே விட்டுவிலகும் மன உறுதி.
8. அன்பு – அன்புடைமையைக் காட்டும் கண்ணீர் அரும்பல் முதலியன.

1. கைம்மிகல் – எதிலும் எல்லை கடத்தல், அடக்கமின்மையின் அடையாளங்கள்.
2. நலிதல் – பிறரை நலியும் மனப்போக்கு.
3. சூழ்ச்சி – சிந்தித்தல் என்பது பழம் பொருள். எழுத்தாளர் சிந்திப்பதுபோல் கன்னத்தில் கைவைத்துப் படம் எடுப்பதில்லையா.
4. வாழ்த்தல் – பிறரை வாழ்த்தும் தோற்றமும் பேச்சும்
5. நாணுதல் – பண்புடையாரிடம் காணப்படும் நாணம் –வெட்க வுணர்வு, கூச்சப்படுதல்.
6. துஞ்சல் – நடந்து வரும்போதே உறங்குவது போன்ற தோற்றம்.
7. அரற்று – வாய் விட்டுக் கதறிப் புலம்புதல்.
8. கனவு – கனவு கண்டு வாய் வெருவுதல்.

1. முனிதல் – எந்நேரமும் வெறுப்புணர்வே முகத்தில் காணப்படுதல். சிலர் முகம் கனிவு காட்டாது.
2. நினைதல் – முன்னே நடந்ததொன்றை நினைவுக்குக் கொண்டுவர முயலும் முகத் தோற்றம்.
3. வெரூஉதல் – திடீரெனத் தோன்றும் திகைப்பு.
4. மடிமை – சோம்பல். சிலரிடம் அது குடி கொண்டிருக்கும். அவர்களைப் பார்த்தாலே அது தெரிந்துவிடும்.
5. கருதல் – உட்கருத்து, ஆழ்மனக் கருத்துள்ளவரையும் இனங்காணலாம். அதிகம் பேசமாட்டார்கள்.
6. ஆராய்ச்சி – சிலர் கண் சும்மா இராது. வீட்டினுள் புகுந்தால் அனைத்தையும் துழாவிப் பார்க்கும்.

7. விரைவு - சிலர் எதிலும் வேகமாக இருப்பார்கள். எந்நேரமும் ஒரு துடிதுடிப்பாகவே இருப்பர்.
8. உயிர்ப்பு - பெருமூச்சு விடுதல். ஆசை மிக்கவர் பெருமூச்சுவிடுவது. கடுமுழைப்பால் மூச்சொலி மிகுவதும் உண்டு.

1. கையாறு - செயலற்று வருந்துதல்
2. இடுக்கண் - வெளிவர முடியாதது. இருபக்கமும் இடிபடுவது. கண் இடுங்கும்படியான துன்பம் அது.
3. பொச்சாப்பு - கடமை மறதி. மிகக் கவனமாக இருக்க வேண்டியவற்றில் மறதி ஏற்படுவது. எதையும் 'அலட்சியப் படுத்தும் போக்கும்' அதுவே. இன்று தேர்தலில் வெற்றி பெறும் அரசியல் வாதிகள் பலர் பொச்சாப்பின் திருவுருவம்.
4. பொறாமை - கண்ணும் முகமும் சொல்லி விடுதலால் இதுவும் ஒரு மெய்ப்பாடு
5. வியர்த்தல்- கரைகடந்த வருத்த மிகுதி போன்றவற்றில் உள்ளும் புறமும் வியர்க்கும். உடல் வெம்மை அடைதல்.
6. ஐயம் - எதிலும் சந்தேகப் பார்வை, எதையும் நம்பாத் தன்மை. இவ்உளவியலுடையார் தெளிவின்றிக் காணப்படுவர்.
7. மிகை - செருக்கு.
8. நடுக்கு - குளிரால் நடுங்குவது போல் உடல் அசைதல். அளவுகடந்த அச்சத்தாலோ, துன்பத்தாலோ ஏற்படுவது. இவை யாவும் மனநிலை வெளிப்பாடுகளாய் இலக்கியத்தில் படம் பிடித்தாற்போல் பாடப்படும்.

மேலே வகைப்படுத்தியவை தவிர, அவற்றுள் அடங்கியும் அடங்காதும் எத்தனையோ மனித மனநிலை மெய்ப்பாடுகள் உள. சங்கப் பாடல்கள் புறவுலக இயற்கையைப் படம் பிடிப்பன. 'அதுபோல் மாந்தர்தம் அகவுணர்வு மனநிலைகளையும் படம் பிடிப்பன. அவை யலங்கடை இவையும் உள' எனுமாறு, பிறிதொரு மெய்ப்பாட்டுப் பட்டியலையும் தருகிறார் தொல்காப்பியர். இவை முன் மாதிரிகள் என்றே கொள்ள வேண்டும். இவற்றுட் பல ஒன்றின் ஒன்று மேவி வருவன. ஆங்கு அவை - முன்னே விரித்தவை. ஒரு பாலாக - ஒரு பகுதியாக. ஒரு பால் - மற்றொரு பட்டியலாக. இவை இலக்கியத்திற்குச் சிறப்புரிமை உடையன. பலவகை மனவுணர்வுப் படப்பிடிப்புகள்.

உடைமை - செல்வமுடைமையால் வரும் மனமகிழ்ச்சி; அதனால் வரும் உடல் வேறுபாடு. இன்புறல் - நினையுந் தோறும் ஏற்படும் மன மகிழ்ச்சி முகத்தில் தோன்றுதல். நடுவுநிலை - பிறர் 'சாந்தம்' என்றனர். மனம் சமநிலையில் நிற்றல். துன்பம் கண்டு துவளாமையும் இன்பங்கண்டு ததும்பாமையும். அருளல் - அருளுடையாரிடம் தோன்றும் முகப் பொலிவும் கனிவும். தன்மை - குடிப்பிறப்பாலும் பரம்பரையாலும் ஒருவரிடம் காணப்படும் சாயல் இயல்பு. அடக்கம் - ஒருவரிடம் காணப்படும் அடக்க முடைமையின் அடையாளங்கள்; பணிவுடைமைக்கான தோற்றம். வரைதல் - வேண்டாதவற்றை வெறுத்து ஒதுக்கும் ஒரு மன நிகழ்ச்சி. அன்பு - அன்புடையார்க்குக் கண்களிலும் முகத்திலும் பேச்சிலும் வெளிப்படும் தோற்றம். இவை எட்டும் மனவுணர்வுகளின் வெளிப்பாடு என்பர்.

கைம்மிகல் - எல்லை கடக்கும் பண்புகள், பழக்கங்கள் இவை. இயல்பான நிலையின் வேறுபடுதலின் இவை மெய்ப்பாடு ஆகும். நலிதல் - பிறரை வருந்தவைத்தல். அதுவே சிலர்க்கு இயல்பாகக் காணப்படும். சூழ்ச்சி - சிந்தனை (ஒரு படைப்பாளரின் தோற்றம் போல்வது இது.) இச்சொல் முன்பு நல்ல பொருளில் வழங்கியது. வாழ்த்தல் - பிறரை வாழ்த்தும் மனப் பண்பு; ஆசி கூறுதல். நாணுதல் - ஒருவரது நாணப்படும் தன்மை அவரிடம் வெளிப்படுதல். பெரியோர் பழிக்கு நாணுவர். அப்பண்பு அவர்தம் தோற்றத்திலும் வெளிப்படும். துஞ்சல் - தூங்கிவழியும் தன்மை. 'அது நடந்து வருகின்றான் கண்ணும் விளங்கத் தோன்றுதலின் அதுவும் மெய்ப்பாடெனப்பட்டது' என்பர் பேராசிரியர். அரற்று - வாய்விட்டுக் குறை கூறிப் புலம்புதல். கனவு - உறக்கத்தில் கனவு கண்டு வாய்வெருவுதல். இதுவும் ஒருவரது உள்ளத்து உணர்வை வெளிப்படுத்தலின் மெய்ப்பாடாகும். இவை எட்டும் ஒருவகையின.

முனிதல் - வெறுப்புணர்ச்சி. எந்நேரமும் முகம் கனிவின்றிக் காணப்படும். இது சினத்தின் வேறுபட்டது. நினைத்தல் - முன்னை நடந்ததொன்றை நினைத்துப் பார்த்தல்; நினைவுக்குக் கொண்டுவர முயலும்போது நிகழும் தோற்றம். வெரூஉதல் - திடீரெனத் திகைத்துத் தோன்றி மறையும் ஒரு மனநிகழ்ச்சி வெருவுதலாகும். இது துணுக்குறுதல் எனப்படும். அச்சத்தின் வேறுபட்டது இது. பழுதைப் பாம்போ என நினைத்ததும் தோன்றி மறைவது. மடிமை - சோம்பல். சிலரைப்

பார்த்ததுமே அவர் ஒரு 'சோம்பேறி' என்பது விளங்கும். கருதல் – மன உட்குறிப்பு. எவ்வளவு மறைத்தாலும் ஆழ் மனக்குறிப்பு கண்ணிலும் முகத்திலும் வெளிப்பட்டுவிடும். ஆராய்ச்சி – எதையும் பகுத்துப் பார்க்கும் பார்வை. 'நோட்டமிடுதல்' என்பர். நல்ல வயிரக் கற்களைத் தேர்ந்தெடுப்பது போன்றது இது. விரைவு – இயல்பாக அல்லாமல் எதிலும் விரைகின்ற – வேகப்படுகின்ற ஒரு மன நிகழ்வும் செயலும். உயிர்ப்பு – பெருமூச்சுவிடுதல். 'நெட்டுயிர்ப்பு' என்பர் இலக்கியத்தில். ஒன்றைப் பெறாத வழி தோன்றும் இது. இவை எட்டும் ஒரு வகை எனப் பிரித்தோதப்படுகின்றன.

கையாறு – செயலற்று நிற்கும் நிலை. எல்லாம் இழந்தது போலும் மனநிலை. இடுக்கண் – வெளிவர முடியாத துன்பத்தில் அகப்பட்ட மனநிலை. அதைக் கண்கள் வெளிப்படுத்துதலால் 'இடுக்கண்' என்றே பெயராயிற்று. துன்பத்தின் மிகுதி இது. பொச்சாப்பு – கடமை மறதி. மிகக் கவனமாக இருக்க வேண்டியதில் 'அலட்சியப் புத்தியால்' இடையே மறந்து தடுமாறுதல். பொறாமை – பிறர் செல்வமும் ஏற்றமுங்கண்டு பொறாமைப்படுதல். அழுக்காறு என்பர். இது அவரது குறிப்பாலும் கூற்றாலும் வெளிப்படும். வியர்த்தல் – மனப் புழுக்கம். கரை கடந்த மன அழுத்தத்தாலும் உள்ளும் புறமும் வியர்க்கும். குருதிக் கொதிப்பனையது இது, ஐயம் – மனத் தடுமாற்றம். எதனையும் சந்தேகப் பார்வையுடன் பார்க்கும் மனப்பழக்கம். மிகை – தன்னை மிகைப்படுத்தி எண்ணிக் கொள்ளும் ஒருவிதச் செருக்கு; பிறரை மதியாமை. நடுக்கு – உள்ளமும் உடலும் நடுங்குதல். இடி கேட்ட வழி நடுங்குதல். அச்சம், வெருவுதலோடு தொடர்புடையதாயினும் கிடுகிடு வென நடுங்குமிது வேறு பிரித்துக் கூறப்பட்டுள்ளது. இவை எட்டும் ஒருவகையின.

இவை முப்பத்திரண்டும் இலக்கிய வழக்கு மட்டுமன்றி உலக வழக்கும் நோக்கிக் கூறப்பட்டன. இதுகாறும் கூறப்பட்டவை அகத்திற்கும் புறத்திற்கும் பொது. எனவே இவற்றிற்கான எடுத்துக் காட்டுக்களை, நாடக வழக்கைக் கொண்ட இலக்கியத்தில் மட்டுமன்றி, உலக வழக்கிலும் கண்டுகொள்ள வேண்டும் என்பர் பேராசிரியர்.

## அகன் ஐந்திணையில், களவின்கண்
## இயற்கைப் புணர்ச்சிக்கு முன் நிகழும் மெய்ப்பாடுகள்
## முதலில் நிகழ்வன

**புகுமுகம் புரிதல், பொறிநுதல் வியர்த்தல்**
**நகுநயம் மறைத்தல், சிதைவு பிறர்க்கு இன்மையொடு**
**தகுமுறை நான்கே ஒன்றென மொழிப. (1207)**

முதன் முதலிற் கூட்டம் நிகழும் போது தலைவி எவ்வாறு நடந்து கொள்வாள். முற்றிலும் பாலியல் உளவியல் சார்ந்த மெய்ப்பாடுகள். இவை நாடக வழக்கிற்கும் உலக வழக்கிற்கும் பொதுவானவை. மிக நுட்பமாய் உணர்ந்து சொல்லப்பட்டுள்ள இவை, இவைபோல நடக்கும் அனைத்து மெய்ப்பாடுகளுக்கும் பொருந்தும். இவற்றை ஆறு படிநிலைகளாகச் சொல்கிறார் தொல்காப்பியர். முதல் மூன்று நிலைகள் புணர்ச்சி நிகழுமுன் தலைவிபால் தோன்றுபவை; பின் மூன்று நிலைகள் புணர்ச்சி முடிந்தபின் நிகழ்பவை. தலைவன்பால் நிகழ்வனவற்றை வரையறைப்படுத்த இயலாமையின், அவை பற்றிக் கூறிற்றிலர்.

1. புகுமுகம் புரிதல் - மனம் இசைந்ததை முகமலர்ச்சியால் காட்டுதல். கண்ணொடுகண் நோக்கி ஒன்று பட்டதும், மலரத்துடிக்கும் முகைமொட்டுப் போலப் புன்னகை பூத்தல்
2. பொறி நுதல் வியர்த்தல் - நாணத்தால் நெற்றியில் புள்ளி புள்ளியாக வியர்வைத் துளிகள் அரும்புதல்.
3. நகுநயம் மறைத்தல் - அன்பின் வெளிப்பாடாகச் சிரிக்கத் தோன்றுவதை மறைக்க முயலுதல். மறைக்க முயலுகிறாள் என்பதும் ஒரு மெய்ப்பாடாவதில், எவ்வளவு நுட்பம் உளது?
4. சிதைவு பிறர்க்கு இன்மை - தன் உறுதிப்பாடு சிதைந்ததை, மனத்திண்மை கலங்கி விட்டதைப் பிறர் அறியாதபடி மறைக்க முயலுதல்.

இவை முதல்நிலை மெய்ப்பாடுகள். தலைவன் இதுகாறும் உள்ளப் புணர்ச்சியோடு பலநாள் பழகியபின், தலைவியின் 'மெய் தொட்டுப்' பயில, நெருங்கிய அளவில் நிகழ்வன. இவை ஒவ்வொன்றும் பாலியல் கலைச் சொற்கள் போல் விளங்குவதைப் பார்த்தால், இவ்வகை இலக்கிய வளர்ச்சியின் முதிர்ச்சி புலனாகிறது. திருவள்ளுவர் காமத்துப்பால், எழுதும்பொழுது தாம் ஒரு தலைவிபோல் ஆகி விடுகிறார். தொல்காப்பியர் இங்கு பெண்மையின் இயல்புகளை முழுதுமறிந்து, பழுதற எழுதுகின்றமை வியப்பைத் தருகிறது.

இயற்கைப் புணர்ச்சிக்கு முன் தலைவியிடம் நிகழும் பாலியல் மெய்ப்பாடுகள், முகம் மலர்தல் விருப்பத்தைப் புலப்படுத்தும். புகுமுகம் – இசைவு தோற்றும் முகம். நாணத்தால் புள்ளி புள்ளியாக நெற்றி வியர்த்தல். பொறி – புள்ளி. புன்னகையை மறைக்க முயலுதல். நயம் – நயப்பு, அன்பு . மனம் சிதைந்ததைப் பிறர் அறியாது மறைத்தல். இவை நான்கும் முதன் முதலில் நிகழும் மெய்ப்பாடுகள்.

### இரண்டாம் நிலையில் நிகழ்வன

**கூழை விரித்தல், காதொன்று களைதல்,**
**ஊழணி தைவரல், உடைபெயர்த் துடுத்தலொடு**
**கெழீஇய நான்கே இரண்டென மொழிப. (1208)**

தலைவன் காதலியைத் தொட்டுத் தழுவுகின்றான். அந்நிலையில் அவள் தன்வயம் இழக்கின்றாள்.

1. கூழை விரித்தல் – அவளது அடர்ந்த கூந்தல் அவிழ்ந்து விரிகிறது; கட்டிய கூந்தல்; கலைந்து விழுகிறது
2. காது ஒன்று களைதல் – அன்று காதின் துளைகளில் தோடு எனப் பூவோ, பொன்னோ அணியாக வெறுமனே செருகப்பட்டிருக்கும். திருகாணி இராது. அவ்வகையான தோடு தானே கழன்று விழும். காது ஒன்று என்பது காதிலுள்ள ஒன்றும் எனப் பொதுவாகவே பொருள்படும். தன்னையறியாது தலைமுடி அவிழ்தலும் காதணி கழன்று விழுதலும் நிகழும்.
3. ஊழணி தைவரல் – ஏனைய வளையல், விரற்செறி (மோதிரம்) போல் பலவையும் கழன்று விழுவன போல் உணர்வேற்படுதலால், அவற்றைத் தடவி மீண்டும் இறுகச் செறிவிக்க முயலுவாள். கைவளை திருத்துபு கடைக்கணின் நோக்குவது போன்ற நிலை இது.
4. உடைபெயர்த்து உடுத்தல் – உடையும் நெகிழ்வது போல் உணர்வேற்படும். அதனால் அதை அவிழாது மீட்டும் மீட்டும் இறுகப் பற்றி உடுத்திக் கொள்ள முயல்வாள்.

இவை நன்கு தழுவியதும் தன்னை மறந்து, 'பரவசம்' என்கிறார்களே, அது போன்ற நிலையில், நிகழ்வன. 'நங்கை தன்னை இழந்தாள்: தலைவனுக்குத் தலைப்பட்டாள்' என்பது இதன் பொருள்.

இரண்டாம் நிலையில் நிகழ்வன. கூழை – கூந்தல். முயங்குங்கால் கூந்தல் தானே அவிழ்தல். காதில் முன்பு தோடு எனச் செருகி இருப்பர். திருகாணி இராது. தோடுகள் கழன்று விழுதல். பாலியல் புணர்ச்சியில்

உறுப்பொடு உறவுடைய கூந்தலும் தொடர்புடைய தோடும் நெகிழ்தலால் விளைவன இவை. ஊழ் அணி - முறைப்படி அணிந்த வளையல், மோதிரம் போல்வன. அவ் அணிகளைத் தடவுதலும் மீண்டும் மீண்டும் செறித்தலும் (அவையும் நெகிழ்வது போல் உணர்தலால் இறுகப் பொருத்துதற்குத் தடவுதல்.) உடையும் நெகிழ்தலால், அதை மீண்டும் மீண்டும் இறுக உடுக்க முயலுதல்.

**மூன்றாம் நிலையில் நிகழ்வன**

**அல்குல் தைவரல், அணிந்தவை திருத்தல்**
**இல்வலி யுறுத்தல், இருகையும் எடுத்தலொடு**
**சொல்லிய நான்கே மூன்றுஎன மொழிப. (1209)**

1. அல்குல் தைவரல் - புணர்வு நிகழுமுன், முன்பென்றும் இல்லாத புது அனுபவத்தால் தலைவி தன் மறைவிடத்தை மறைத்துக் காத்துக் கொள்வாள் போலக் கைகளால் முயல்வாள்.
2. அணிந்தவை திருத்தல் - இடையிலும் கழுத்திலும் பிறவாறும் அணிந்துள்ளவற்றைத் திருத்துவது போல் கவனத்தை வேறு பக்கம் திருப்பிக் கொள்வாள். காதலனுக்கு விட்டுக் கொடுக்கும் நிலை இது.
3. இல் வலியுறுத்தல் - மனம் இசைந்தும், இசையாதது போல் மறுக்கவும் தடுக்கவும் அரிதின் முயலுதல். இவள் அங்ஙனம் இசையாதாள் போல் (இசைவு இருந்தும் இல்லாதது போல்) இவள் மறுக்க மறுக்க, அவனால் இறுகத் தழுவப்படுவாள்.
4. இருகையும் எடுத்தல் - தன்னையிழந்து இருகைகளையும் கூட்டத்திற்கு இசைவாக மேலே தூக்குதல். தன்னை மறந்து தலைவனைத் தழுவ இருகைகளையும் உயர்த்துதல்.

மூன்றாம் நிலையில் நிகழ்வன: அல்குல் - வயிற்றுக்குக் கீழ் உள்ள பகுதி, மறைவிடம். தன்னைப் பேணிக் கொள்ள முயலுதல். உடை பெயர்த்து உடுத்தவள் அதன்பின் ‘அற்றம்’ மறைக்க முயல்வது. அணிந்தவை - இடையிலும் பிறவாறும் அணிந்தவை குலையாது திருத்துதல். இல் - இல்லாத ஒன்று, மனம் இசைந்தும் இசையாதது போல, வலியுறுத்திக் காட்டமுயலுதல். வேறு வழியின்றி இரு கைகளையும் மேலே தூக்குதல். இது புணர்ச்சி உடம்பாடு. முற்காலத்திற்கு ஏற்ப நிகழ்ந்தவை இவை போல்வன எனக் கொள்ள வேண்டும். கால வேறுபாட்டுக்கும் உடை, அணி போல்வனவற்றின் மாறுதலுக்கும் ஏற்ப, இம்மெய்ப்பாடுகள் மாறும். எனினும் இவை முன் உதாரணங்கள். இவை போல நிகழுமெனக் கருத்திற்கொள்க.

## இயற்கைப் புணர்ச்சிக்குப்பின் முதலில் நிகழ்வன

**பாராட்டு எடுத்தல், மடம் தப உரைத்தல்**
**ஈரமில் கூற்றம் ஏற்று அலர் நாணல்,**
**கொடுப்பவை கோடல், உளப்படத் தொகைஇ**
**எடுத்த நான்கே நான்கென மொழிப. (1210)**

புணர்ச்சிக்குப்பின் நிகழும் மெய்ப்பாடுகள்

1. பாராட்டு எடுத்தல் – தலைவி தலைவன் மீது பெருமைப்பட எண்ணுதல். உயர்த்தி நினைத்தலை எடுத்தல் என்றார்.
2. மடம் தப உரைத்தல் – இதுவரை அடக்கமாய்ப் பேசாதிருந்தவள் அது (மாறும்படி), தலைவனிடம் சிலவற்றைப் பேசத் தொடங்குவாள்.
3. ஊரார் மனத்தில் சிறிதும் ஈரமின்றிப் பேசும் பழிப் பேச்சுக்களைக் கேட்டு நாணி வருந்துதல்.
4. கொடுப்பவை கோடல் – தலைவன் தரும் தழையுடை, கண்ணி, மாலைகளை ஏற்றுக் கொள்ளுதல்.

இயற்கைப் புணர்ச்சிக்குப் பிறகு, முதலில் – நான்காம் நிலையில் நிகழ்வன இனி வருவன. முன்னர் நிகழும் பன்னிரண்டும் மூன்று படிநிலைகள் ஆனது போல, பின்னர் நிகழும் பன்னிரண்டும் மூன்று படிநிலையின. அவற்றுள் முதல் நிலையில் நிகழ்வன வருமாறு. உள்ளத்துள் தலைவி தலைவன்மீது பெருமைப்பட நினைத்தல். பாராட்டு – உள்ளம் தலைவன்பால் பெருமை கொள்ளும் குறிப்பு. எடுத்தல் – உயர்வாக நினைவு கொள்ளுதல். மடம் – இளமைத் தன்மையால் அறியாதாள் போல் இருந்தமை. அது கெடுமாறு தலைவனிடம் பேசுதல். ஈரம் – நெஞ்சிற் கருணை. கூற்றம் – கூற்று– ஊரார் பழிச் பேச்சு. அலருக்கு நாணுதல். கொடுப்பவை – தலைவன் தரும் தழையுடை, மாலை, கண்ணி முதலாயின.

### அடுத்த நிலையில் நிகழ்வன

**தெரிந்து உடம்படுதல், திளைப்பு வினைமறுத்தல்,**
**கரந்திடத்து ஒழிதல், கண்டவழி உவத்தலொடு**
**பொருந்திய நான்கே ஐந்தென மொழிப. (1211)**

1. தெரிந்து உடம்படுதல் – இது தவறோ என முதலில் எண்ணியவள், பிறகு நன்கு சிந்தித்து, மீண்டும் மீண்டும் காண உடம்படுதல்.

2. திளைப்பு வினை மறுத்தல் - தோழியருடன் ஆடிப்பாடி இன்பத்தில் திளைப்பதே பொழுது போக்காய் இருந்தவள், இப்போது அதை வெறுத்து ஒதுங்குதல்.
3. கரந்திடத்து ஒழிதல் - மறைவான இடம் தேடித் தனித்திருக்கவே முயலுதல்
4. தலைவனைக் கண்டதும் கரை கடந்து மகிழ்தல். இவை இரண்டாம் நிலையின.

ஐந்தாம் நிலையில் நிகழ்வன. பலரும் இதனைப் பழித்துப் பேசுவர். இஃது இன்றும் உலகியல். மாந்தரின் உளவியலுமாம். ஆயினும் இதனைத் 'தவறு செய்து விட்டோமோ' என அஞ்சிய தலைமகள், பின்னர் நன்கு ஆராய்ந்து இதற்கு இசைவுடையளாதல். தெரிந்து - ஆராய்ந்து. திளைப்பு வினை - தோழியருடன் கூட்டமாய் இதுகாறும் ஆடிப் பாடி மகிழ்ந்தமை. இப்போது அதில் ஈடுபாடு இராது. கரந்திடத்து - மறைவான இடத்திற்கு. ஒழிதல் - ஆயத்தை நீங்கிச் சென்று மறைவாக இருத்தல். தலைவனைக் கண்டதும் மகிழ்தல்.

## இறுதி நிலையில் நிகழ்வன

**புறஞ்செயச் சிதைதல், புலம்பித் தோன்றல்,**
**கலங்கி மொழிதல், கையறவு உரைத்தலொடு**
**புலம்பிய நான்கே ஆறென மொழிப. (1212)**

1. புறஞ்செயச் சிதைதல் - தலைவன் தலைவிக்குத் தொய்யில் எழுதியும் மாலை சூட்டியும் அலங்கரிக்கும் போது, அவனைப் பிரிய நேருமோ எனத் தலைவி கலங்குவாள்.
2. புலம்பித் தோன்றல் - தலைவன் பிரிவால் தலைவி தனிமை வருத்தத்தோடு காணப்படுதல்.
3. கலங்கி மொழிதல் - மனக் கலக்கமுற்றுத் தடுமாறிப்பேசுதல்.
4. கையறவு உரைத்தல் - செயலற்ற நிலையை வாய்விட்டு உரைத்தல்.

இனித் திருமணம் நிகழ்தல் வேண்டுமே என்ற அச்சம் பிடித்துக் கொள்ளும். அதன் விளைவுகள் இவை.

தொல்காப்பியர் இம் மெய்ப்பாடுகளையுமா கூற வேண்டும் எனச் சிலர் வெறுப்பவர் போலப் பேசுவர். இன்று பள்ளி அளவிலேயே பாலியற்கல்வி வேண்டுமென்பார் இதன் சிறப்பை அறிந்து போற்றுவர்.

இங்ஙனம் இயற்கைப் புணர்ச்சிக்கால மெய்ப்பாடுகளை மட்டும் தொல்காப்பியர் வகுத்துரைத்தாலும் இவை ஏனைய கால நிலைகளிலும் சிற்சில பொருந்திவரும். தொல்காப்பியம் உலக வழக்கையும் இலக்கிய வழக்கையும் அடிப்படையாகக் கொண்டது. 'வழக்கும் செய்யுளும் ஆ இரு முதலின்' என்பது பாயிரம். இங்குக் கூறப்பட்டவை இருவகை வழக்கிலும் அங்கங்கு பொருந்தியவை இடம் பெற்று வரும்.

ஆறாம் நிலையில் நிகழ்வன. புறம்செய - தலைவன் தலைவிக்குத் தொய்யில் எழுதியும் மலர் சூட்டியும் அழகுபடுத்துதல். சிதைதல் - மனம் சிதைதல். புலம்பித் தோன்றல் - தலைவன் பிரிவால் தனிமை வருத்தத்தில் மூழ்கிக் காணப்படுதல்; கலங்கி மொழிதல் - தடுமாறிப் பேசுதல். 'கையொடு பட்ட கள்வரைப் போலச் சொல்லுவனவற்றைத் தடுமாற்றம் தோன்றச் சொல்லுதல்' என்பர் பேராசிரியர். கையறவு - செயலற்றநிலை. இனித் திருமண நிகழ்வே இதற்குத் தீர்வு. ஊரார் பழியாலும் தலைவனைக் கணமும் பிரிதலாற்றாமையாலும் இவை நிகழும்.

### திருமணமாகிக் கற்பொழுக்கம் ஏற்பட<br>இவை நிமித்தங்களாகும்

**அன்ன பிறவும் அவற்றொடு சிவணி**
**மன்னிய வினைய நிமித்தம் என்ப. (1213)**

மேலே குறித்த 24 மெய்ப்பாடுகளும் தவிர, அவை போன்ற பிறவும் பலவுள. அவ்வாறு உட்கூறுகளாக வரும் அனைத்தும் இவ்விருபத்து நான்குடன் இணைந்து நிகழ்தற்குரியனவாகும். இவை உலகில் நிலையாக நிகழ்ந்துவரும் காமவொழுக்கத்திற்கு நிமித்தமானவை என்று அறிஞர்கள் கூறுவர்.

அன்ன பிறவும் - மேலே கூறப்பட்ட இருபத்து நான்கும் தவிரப் பிறவும். மன்னிய வினை - உலகில் நிலைபெற்ற காதல் ஒழுக்கம். நிமித்தம் - அவற்றிற்குக் காரணமான உட்கூறுகளும். சிவணி - இவையாவும் கலந்து, பொருந்தி. மன்னிய வினைய என்பதற்கு, உலகத்தில் நிலைபெற்றுவரும் காதல் ஒழுக்கத்திற்குக் காரணமானவை; அல்லது நிலைபெற்ற திருமணம் நிகழ்வதற்குரியனவுமாம்.

### உயிர் மெலிவது போல் ஆகுமிடத்து இம் மெய்ப்பாடுகள்<br>இன்றியும் கூட்டம் நிகழும் - திருமணம் நடைபெறும்

**வினையுயிர் மெலிவிடத்து இன்மையும் உரித்தே. (1214)**

உயிர் மெலிவது போலும் புணர்ச்சி வேட்கை மிகுமிடத்து, மேலே கூறிய 24 மெய்ப்பாடுகள் முழுவதுமோ, சிலவோ இல்லாமலும் கூட்டம் நிகழ்தலும் கூடும். முற்கூறிய மெய்ப்பாடுகள் அனைத்தும் நிகழவேண்டுமென்பதோ, வரிசைப்படி நிகழவேண்டுமென்பதோ இல்லை. காம வேட்கை மிகுமிடத்து இவை சில இன்றியும்கூடக் கூட்டம் நிகழ்ந்து விடும்.

**உயிர் மெலிவிடத்து - உயிர் போவது போலக் காம வேட்கை மிகுந்து, மெலிந்தவிடத்து. வினை - மேலே கூறிய மெய்ப்பாடுகள். இன்மையும் உரித்து - நிகழாமலும் புணர்ச்சி நிகழும். இம்மெய்ப்பாடுகள் நிகழ்ந்தே தீரவேண்டுமென்பதில்லை; ஒன்றன்பின் ஒன்றாக வரிசைப்படி நிகழ வேண்டுமென்பதுமில்லை. உயிர் மெலிவதுபோல், காம வேட்கை மிகும் சூழல்களில் இவை இல்லாமலும், அல்லது சில மட்டும் நிகழ்ந்தும் கூட்டம் நிகழ வாய்ப்புண்டு.**

**களவுகற்பில் வரும் கூற்றுக்கள் முன்பு கூறப்பட்டன**
**அச்சூழல்களில் நிகழும் பிற மெய்ப்பாடுகளும் உள**

**இவையும் உளவே அவையலங் கடையே. (1215)**

அவை அனைத்தும் களவில் நிகழும் 24 மெய்ப்பாடுகள். அவை தவிரவும், பின்னே வருவனவும் அவற்றின் தொடர்ச்சியாகக் களவொழுக்கத்தில் நிகழ்தல் கூடும். முன்னவை எதுவுமே நிகழாது இவை நிகழுமென்பதும் இல்லை; முன்னவற்றின் தொடர்ச்சியாக இவை நிகழுமென்பதே மிகவும் பொருந்தும். ஏனெனில் களவுப் புணர்ச்சி முடிந்ததும் தலைவியின் பொறுப்பு மிகுகிறது. தன் கற்பைக் காத்துக் கொள்ள வேண்டும். சிறு பிரிவும் பெருந்துன்பமாகத் தோன்றும். தலைவனைத் தன்னவனாக ஆக்கிக் கொள்ள அவள் செய்யும் தவம் போல இம்மெய்ப்பாடுகள் உள. களவில் சந்திக்கும் நேரம் தவிரப் பிரிந்திருப்பதே கூடுதலாகும்.

**அவையலங்கடை - மேலே சொன்னவை மட்டுமல்லாமல் அவற்றைத் தவிர்த்தும். இவையும் உள - இனிவருவனவும் களவுக் காலத்தே நிகழும். களவுக் காலத்தில், முதல் புணர்ச்சிக்கண் நிகழும் பாலியல் மெய்ப்பாடுகளை இதுகாறும் கூறியவர், அக் களவுக் காலத்தே, பொதுவாக நிகழும் மெய்ப்பாடுகளை மேலே எடுத்து மொழிகிறார். முன்னதின் தொடர்ச்சியே இது.**

## களவுக்கால மெய்ப்பாடுகள்

### பொதுவாகப் பிரிவில் இவை நிகழும்

**இன்பத்தை வெறுத்தல், துன்பத்துப் புலம்பல்,**
**எதிர்பெய்து பரிதல், ஏதம் ஆய்தல்,**
**பசியட நிற்றல், பசலை பாய்தல்,**
**உண்டியிற் குறைதல், உடம்பு நனி சுருங்கல்,**
**கண்துயில் மறுத்தல், கனவொடு மயங்கல்,**
**பொய்யாக் கோடல், மெய்யே என்றல்,**
**ஐயம் செய்தல், அவன்தமர் உவத்தல்,**
**அறன் அழித்துரைத்தல், ஆங்கு நெஞ்சழிதல்,**
**எம்மெய் யாயினும் ஒப்புமை கோடல்,**
**ஒப்புவழி உவத்தல், உறுபெயர் கேட்டல்,**
**நலத்தக நாடின் கலக்கமும் அதுவே.** (1216)

பொதுவாக இவற்றைப் பிரிவுக்கால மெய்ப்பாடுகள் எனலாம்.

1. இன்பத்தை வெறுத்தல் – இன்பத்துக்குக் காரணமான தென்றல் பூ மதி எதைக் கண்டாலும் வெறுத்துப் பேசுதல்.
2. துன்பத்துப் புலம்பல் – பிரிவுத் துன்பத்தால் புலம்புதல்
3. எதிர்பெய்துபரிதல் - தலைவனது உருவ வெளிப்பாடு கண்டு வருந்துதல்.
4. ஏதம் ஆய்தல் - தலைவன் தன்னைக் கூடுதற்குத் தடையாக வருவனபற்றி ஆராய்தல்.
5. பசி அட நிற்றல் – பசி வருத்தவும் உண்ணாதிருத்தல்.
6. பசலைபாய்தல் – பசலை நோயால் மேனிநிறம் கருத்தல்.
7. உண்டியிற்குறைதல் – முன்பு உண்டதை விட உணவு சுருங்குதல்.
8. உடம்பு நனி சுருங்கல் – உடல் மிகவும் மெலிதல்.
9. கண்துயில் மறுத்தல் – கண்கள் உறங்க மறுத்தல்.
10. கனவொடு மயங்கல் – கனவு கண்டு மயங்குதல்.
11. பொய்யாக் கோடல் – மெய்யைப் பொய்யென மறுகுதல்.
12. மெய்யே என்றல் – பொய்யை மெய்யே என மயங்குதல் (கார்காலம் வருமுன்பே வந்ததாக மயங்குதல் போல்வன)
13. ஐயம்செய்தல் – தலைவன் தன்னைப் பிரிவானோ என ஐயுறுதல்.
14. அவன்தமர் உவத்தல் – தலைவனின் சுற்றத்தார், உறவினர் வரக் கண்டு மகிழ்தல்.
15. அறனழித்து உரைத்தல் - வருத்த மிகுதியான் அறத்தையே பழித்துரைத்தல்.

16. நெஞ்சழிதல் - அவ்வாறு பழித்ததற்காக நெஞ்சுருகுதல்.
17. எம் மெய்யாயினும் ஒப்புமை கோடல் - காதலர்தம் உறுப்புக்களோடு ஒத்தவை எவை கண்டாலும் அதையுணர்ந்து சொல்லுதல்.
18. ஒப்புவழி உவத்தல் - அவ்வாறு ஒப்புமை கண்டவழி அவனையே கண்டதுபோல் மகிழ்தல்.
19. உறுபெயர் கேட்டல் - அவன் புகழ் கேட்டு இன்புறுதல்.
20. கலக்கம் - மனக் கலக்கமுறுதல்.

பிரிவின்போது மனம் கலங்கி மொழிவதால் நேர்வனவே. முற்கூறிய பத்தொன்பதும் என்பதால். இவ் இருபதாம் மெய்ப்பாடாகிய 'கலக்கத்தைத்' தனியே பிரித்துக் கூறியுள்ளார்.

களவுக் காலக் கூற்றுக்கள் முன்பு கூறப்பட்டன. அக்களவு தொடங்கும் இயற்கைப் புணர்ச்சிப் பாற்பட்ட மெய்ப்பாடுகள், இதன் முன் விளக்கப்பட்டன. பின்னர் அக் களவுக் காலத்தே பெரிதும் தலைவியைச் சார்ந்து தோன்றும் பொதுவானவை இந்நூற்பாவில் கூறப்படுகின்றன. இன்பத்துக்குரிய பொருள்களான பூவும், சந்தனமும் பிறவும் கண்டவழி வெறுத்தல், பிரிவுத் துன்பத்தால் புலம்புதல், தலைவன் தன் எதிரே தோன்றுவதாகக் கருதி, உருவ வெளிப்பாடு கண்டு வருந்துதல், தலைவனைக் கூடுதற்குத் தடையாக வரும் இடையூறுகள் பற்றி ஆராய்தல், பசி வருத்தவும் உண்ணாதிருத்தல், பசலை நோயால் உடல் நிறம் மாறுதல், உண்ணும் உணவைச் சுருக்குதல், உடம்பு மிகவும் மெலிதல், உறங்காதிருத்தல், கனவு கண்டு மயங்குதல், மெய்யைப் பொய்யென மறுகுதல், பொய்யை மெய்யே எனக் கொள்ளுதல், தலைவன் தன்னைப் பிரிவானோ என ஐயுறுதல், அவனுடைய பாங்கன், பாணன், உறவுடையாரைக் கண்டு மனம் மகிழ்தல், அறத்தை, 'அது பொய்யோ' என மனம் அழிந்து கூறுதல், அப்போது அவ்வாறு அறத்தைப் பழித்ததற்காக மனம் நொந்து புலம்புதல், எப்பொருளைக் கண்டாலும் தலைமகனோடு அவற்றுக்குள்ள ஒப்புமையைக் காண முயலுதல், ஒப்புமை ஏதும் கண்டவழி, அவனையே கண்டதுபோல் மகிழ்தல், அவன் புகழ் அல்லது பெயரைக் கேட்டு இன்புறுதல், அவனைக் காணவில்லையே எனக் கலங்குதல் ஆகிய இவை யாவும் முற்கூறிய களவுக் கால மெய்ப்பாடுகளே. கலக்கத்தைப் பிரித்து, 'நலத்தகை நாடின் கலக்கமும் அதுவே' என்றது, முற் கூறிய, யாவும் களவுப் புணர்ச்சிக்குப் பின் ஏற்படும் மனக் கலக்கத்தின் விளைவுகளே என்பதை உணர்த்தவேயாம். இவை பொதுவாகப் பிரிவினால் ஏற்படுதலும் உண்டு.

**களவுக்கால மெய்ப்பாடுகள் - வரைவுக்குத் தூண்டுபவை**

**முட்டுவயின் கழறல், முனிவுமெய்ந் நிறுத்தல்,**
**அச்சத்தின் அகறல், அவன்புணர்வு மறுத்தல்,**
**தூதுமுனிவு இன்மை, துஞ்சிச் சேர்தல்,**
**காதல் கைம்மிகல், கட்டுரை இன்மை என்று**
**ஆயிரு நான்கே அழிவில் கூட்டம். (1217)**

தலைவனைத் திருமணத்திற்குத் தூண்டும்
நிமித்தமான மெய்ப்பாடுகள்

திருமணத்திற்கு முன்பு நிகழும் கூட்டங்களில் அச்சமும் கலக்கமும் இருக்கும். திருமணமானபின் கூடுவது முழு மனமகிழ்ச்சியொடு கூடும் கூட்டம். 'அழிவில் கூட்டம்' என்பார் தொல்காப்பியர். மனம் அழிதல் இல்லாத - கலக்கமெதுவுமில்லாத கூட்டம் என்பர் உரையாசிரியர். இனி வருவன 'வரைந்து (மணந்து) எய்தும் கூட்டத்திற்கு ஏதுவான மெய்ப்பாடுகள்' என்பார் பேராசிரியர்.

1. முட்டுவயின் கழறல் - கூட்டத்திற்கு முட்டுப்பாடு - தடை ஏதும் ஏற்பட்ட வழி தலைவி கடிந்து கூறுவாள்.
2. முனிவுமெய்ந் நிறுத்தல் - தன் உள்ளத்து வெறுப்பெல்லாம் மெய்ப்பாடு மூலம் தலைவனுக்கு உணர்த்துவாள்.
3. அச்சத்தின் அகறல் - அலராலும் தலைவன் வரும் வழியில் உள்ள இடையூறு பற்றியும் அச்சமுற்று அவனை வராதே என தடுக்கமுயல்வாள்.
4. அவன்புணர்வு மறுத்தல் - அவன் கூட விரும்புவதை நேரே மறுத்துரைப்பாள்.
5. தூது முனிவின்மை - அடிக்கடி பறவை முதல் பாணன் வரை தூதுவிட முயலுதலை வெறுக்காமல் மேற்கொள்வாள்.
6. துஞ்சிச் சேர்தல் - சோர்வுற்ற வழி வருந்தி அவனிடம் செல்வாள்.
7. காதல் கைம்மிகல் - காதலுணர்வு எல்லை கடக்கவே வருந்துவாள்.
8. கட்டுரை இன்மை - பிறர் பேசவும் தான் எதிர்பேசாது மோனம் சாதிப்பாள். இவை எட்டும் தலைவனை 'இனிக் களவு நீட்டிக்காதே: விரைவில் மணந்துகொள்' எனத் தூண்டுவனவாகும்.

**திருமணமாகிக் கூடுதற்காக ஏங்கி உரைப்பன இனி வருபவை. வரைந்தெய்தும் கூட்டத்திற்கு ஏதுவாகிய மெய்ப்பாடு என்பார் பேராசிரியர். அழிவில் கூட்டம் - தடையின்றிக் கூடும் கூட்டம்.**

திருமணத்திற்குப் பின் நிகழ்வது. அதற்கு நிமித்தமாகத் தலைவியிடம் நிகழும் மெய்ப்பாடுகள் இவை. கூட்டத்திற்குத் தடை வந்துழித் தலைவி, தலைமகன் கேட்பக் கழறுதல் - கடிந்து கூறுதல். தலைவன் வந்தபோது, தன் உள்ளத்து வெறுப்பை மெய்ப்பாடு மூலம் தலைவனை உணரச்செய்தல், அலராலும் பெற்றோர் காப்பால் ஏற்படும் அச்சத்தாலும் தலைமகன் வரும் வழிக்கு அஞ்சியும் அவனை அணுகவிடாது நீக்குதல், அவன் கூட விரும்புவதை மறுத்துரைத்தல் இரவுக்குறி, பகற்குறி யாவும் மறுத்தல், பறவை மேகம் போல்வன கண்டு திரும்பத் திரும்பத் தூதுவிடுதலை விரும்புதல் (வெறாமை என்பது விரும்புதல்), சோர்ந்து வருந்தி அவனிடம் செல்லுதல், காதலுணர்வு எல்லை கடக்க வருந்துதல், பிறர் பேசவும் தான் எதுவுமே விடை பகராது மௌனம் சாதித்தல். இவை எட்டும் கற்புக்கு - வரைவுக்கு வற்புறுத்தும் குறிப்புக்களாகும்.

### வரைந்தெய்திய பின் நிகழ்பவை

**தெய்வம் அஞ்சல், புரை அறம் தெளிதல்,**
**இல்லது காய்தல், உள்ளது உவர்த்தல்,**
**புணர்ந்துழி உண்மை, பொழுது மறுப்பாக்கம்,**
**அருள்மிக உடைமை, அன்புதொக நிற்றல்,**
**பிரிவாற்றாமை, மறைந்தவை உரைத்தல்**
**புறஞ்சொல் மாணாக் கிளவியொடு தொகைஇ**
**சிறந்த பத்தும் செப்பிய பொருளே. (1218)**

*திருமணமாகியபின் நிகழும் மெய்ப்பாடுகள்*

'வரைந்தெய்திய பின்னர்த் தலைமகள் மனத்து நிகழ்வன இவை' - என்பது பேராசிரியம்.

1. தெய்வம் அஞ்சல் - குல தெய்வம், வழிபடு தெய்வத்திற்கு அஞ்சுதல். வாழ்வு சிறக்கப் பழிபாவம், குற்றங்குறை தொடராது காக்க வேண்டுமென அஞ்சி நடத்தல். தொல்காப்பியரே 'வழிபடு தெய்வம் நிற்புறங்காப்ப' எனப் புறநிலை வாழ்த்தில் கூறுகிறார். தமிழர் பண்பாட்டில் வீட்டினுள்ளும் தெய்வம் உறைவதாக, விளக்கேற்றி வழிபடுதல் பெருவழக்கு.
2. புரை அறம் தெளிதல் - மேலான இல்லறத்தைத் தெளிந்து வாழ முற்படுதல்.

3. இல்லது காய்தல் – தலைவனிடம் இல்லாத குறையையும் இருப்பதாகச் சொல்லிச் சினந்து ஊடுதல். திருக்குறள் புலவி நுணுக்கத்தில் இதைக் காணலாம். இது இல்லற இன்பத்தை மிகுவித்தற்பொருட்டுத் தலைவி தன் உரிமையைக் காத்துக் கொள்ளுதல்.

4. உள்ளது உவர்த்தல் – தலைவனிடம் உண்மையாக உள்ள தலையளியையும் நம்பாதாள்போல வெறுத்துப் பேசுதல். இதுவும் மனைவியின் உரிமை பற்றியதே; உண்மையான வெறுப்பன்று.

5. புணர்ந்துழி உண்மை – முற்சுட்டிய இரண்டையும் தலைவன் தவிர்க்க முயன்று, அன்பு காட்டிப் புணர்ந்தவழி, அவனுடன் உண்மையான அன்பைக் காட்டி மகிழ்வித்தல்.

6. பொழுது மறுப்பாக்கம் – களவுக் காலத்தில் இன்ன பொழுதென்று முடிவு செய்ய இயலாத வாழ்வாக இருந்தது. இப்போது பொழுதை வரையறுத்து வாழக் கூடிய வாய்ப்பு நேர்ந்தமை

7. அருள்மிக உடைமை – இல்லற வாழ்வு பற்றித் திருவள்ளுவர் 'அன்பும் அறனும் உடைத்தாயின்' – நன்றென்பார். இல்வாழ்வார் உலகர் எல்லோர்க்கும் துணையென்பார். அதனையே அருள்மிக உடைமை என்றும்

8. அன்பு தொக நிற்றல் என்றும் தொல்லாசான் கூறுகிறார். தொக நிற்றல் – பொருந்தியிருத்தல்

9. பிரிவாற்றாமை – களவில் பிரிவை வெளிப்படுத்த இயலாது. கற்பு வாழ்வில் தலைவி பிரிவாற்றாது வருந்துவாள்.

10. மறைந்தவை உரைத்த புறஞ்சொல் மாணாக்கிளவி – தலைவனது மறைவான குறைகளை ஊரார் பழித்துப் பேசும் அலராகிய புறங்கூறும் மாட்சிமையற்ற பேச்சுப் பற்றியது. அதனை மிகாது தடுத்துத் தலைவன் பெயர் கெடாது காக்கவே தலைவி முயலுதல். சிறப்புடைய இவை பத்தும் இல்லற வாழ்வில் தலைவிக்குரியன.

திருமணத்திற்குப் பின் நிகழும் பத்து மெய்ப்பாடுகள்; குல தெய்வம் காக்க என அஞ்சி நடத்தல். புரை – மேலான. இல்லது – தலைவனிடம் இல்லாத குறையை உள்ளதுபோற் கொண்டு ஊடுதல். உள்ளது – தலைவனிடம் உண்மையாகவுள்ள தலையளியை. உவர்த்தல் – வெறுத்துப் பேசுதல். புணர்ந்துழி – கூடும்போது, உண்மை – உள்ளவாறு கூறி மகிழ்தல். முன்பு ஊடுதலின்போது மாற்றிப் பேசியதுபோல் பேசாது. பொழுது மறுப்பு ஆக்கம் – களவில் நேரத்தை மாற்றிமாற்றிக்

கூடியதுபோலாது, இன்பம் துய்க்கும் ஆக்கம். அருள் - புரை அறம் எனப்பட்ட இல்லறமாதலின், எல்லோரிடமும் அருளுடையளாதல். அன்பு உள்ளத்தில் மறைந்து நிற்கத் தலைவனிடம் பழகுதல். கற்பில் பிரிவாற்றாமை மிகுதி. மறைந்தவை - களவுக் காலத்துப் பிறர் அறியாது மறைவாக நடந்தவை. புறஞ்சொல் - அலர், ஊரார் கூறும் பழிச்சொல். மாணாக் கிளவி - அதன் பொல்லாப்பைக் கூறித் தலைவனுக்குப் பழி ஏற்படாது காத்தல்.

இதுகாறும் கூறிய மெய்ப்பாடுகள் சமுதாயத்தில், உயரிய மாந்திரிடையேதான் தோன்றும். இத் தலைமக்கள் அல்லது மணமக்கள் பத்துவகைப் பொருத்தமுடையவர்களாகத் திகழவேண்டுமெனக் கூறுகிறார், தொல்காப்பியர்.

## மெய்ப்பாட்டுக்குரிய தலைவன் தலைவியரின் ஒப்புமைகள் - பத்துவகைப் பொருத்தம்

**பிறப்பே, குடிமை, ஆண்மை, ஆண்டோடு,**
**உருவு, நிறுத்த காம வாயில்,**
**நிறையே, அருளே, உணர்வொடு, திருஎன**
**முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே. (1219)**

1. பிறப்பு - நற்குடிப் பிறந்தவர்களாக இருக்க வேண்டும்.
2. குடிமை - பிறந்தால் போதாது, அந்நற்குடிக் கேற்ற நல்லொழுக்கம் இருவரிடமும் இருக்க வேண்டும். பிறப்பு வேறு, குடிமை வேறு எனப் பிரிக்கிறார்.
3. ஆண்மை - இருவரிடமும் ஆண்மை - ஆளுமை ஒத்திருக்கவேண்டும்.
4. ஆண்டு - அகவை ஒப்புமை வேண்டும். காலத்திற்கு ஒப்ப வயது ஒப்புமை பார்க்க வேண்டும்.
5. உருவு - வடிவ ஒப்புமையும் வேண்டும். பார்ப்பவர் பொருத்தமான சோடி என்னும்படி உயரம், பருமன் இருக்கவேண்டும்.
6. 'நிறுத்த காம வாயில்' என்பது தொல்லாசான் சிந்தித்துச் சொன்ன அரிய கருத்து. உடலில் அமைந்த காம நுகர்வுக்கான உடல், உள்ளக் கூறுகள். ஒருவர் மிக்க காமவெறியுடையவராகவும் மற்றவர் அளவாகத் துய்ப்பவராகவும் இருந்தால் ஒத்துவராது.
7. நிறை - மனத்தைத் திருமணமானபின் கண்டவாறு ஓடவிடாது தடுத்து நிறுத்தல். நிறுத்துதல் நிறை. மறை பிறர் அறியாது நிறுத்தல். இது மன நிறை, அடக்குதல், தடுத்து நிறுத்துதல் யாவும் அடங்கும்.

8. அருள் - அருளுடைமையும் அதன் அடிப்படையான அன்பும் உடையவர்களாக இருவரும் திகழ வேண்டும்.
9. உணர்வு - ஒருவரை ஒருவர் அறிதல்; புரிந்து கொள்ளுதல்; உலகியலறிதல் வேண்டும்.
10. திரு - செல்வம். செல்வமுடைமையால் வரும் மன மகிழ்ச்சியே திரு. என்றும் எந்நிலையிலும் திருவுடையார் போன்ற மன நிறைவு அது. செல்வம் என்பது சிந்தையின் நிறைவே.

இப் பத்துப் பொருத்தமுமே மிக இன்றியமையாதன. இவை பற்றியே முதலில் எண்ணவேண்டும். ஏனையன பற்றி எண்ணுவது இரண்டாம் பக்கமே; அவை தேவையற்றவையும் கூட.

மேற்கூறிய மெய்ப்பாடுகள் நிகழவேண்டுமேல், தலைவன் தலைவியர் ஒப்புமையுடைய உயர்குடியினராதல் வேண்டும். மணமக்களாதற்குரியாரிடம் காணப்பட வேண்டிய பத்து ஒப்புமைகள் இங்கு கூறப்படுகின்றன. நற்குடியிற் பிறத்தல், குடிமைச்சிறப்பு அதாவது நற்குடிக்கேற்ற ஒழுக்கம். திருக்குறளில் குடிமை அதிகாரம் காண்க. ஆண்மை - ஆளுமை, இஃது இருவர்க்கும் வேண்டும். ஆண்டு - அகவை ஒப்புமை. முன்பு பெண்ணுக்குப் பன்னிரண்டு ஆண்டும் ஆணுக்குப் பதினாறு ஆண்டும். இற்றைக்கு ஏற்றவாறு கொள்க. உருவு - வடிவத் தோற்ற ஒப்புமை. நிறுத்த காமவாயில் - உடலில் அமைந்த இன்ப நுகர்வுக்கான காமவுணர்வுக் கூறு. அதிலும் ஒப்புமை வேண்டும். நிறை - மனத்தை ஓடவிடாது ஒருவழி நிறுத்தல், மறை பிறர் அறியாது நிறுத்தலுமாம். நிறுத்துதல் நிறை, இங்கு மனத்தை நிறுத்துதல், அருள் - எல்லா உயிரிடத்தும் அருளுடைமை. அருளுடைமை கூறவே அன்பும் அடங்கும். இருவரும் இணைந்து வாழ அன்பும் அருளும் துணைசெய்யும். உணர்வு - ஒருவர் உணர்வை ஒருவர் அறியும் உணர்வொப்புமை. அறிவுடைமை, உலகியலை அறிந்து நடத்தலும் வேண்டும். திரு - இன்பம் துய்த்து இல்லறம் நடத்துதற்கு வேண்டும் செல்வமுடைமை. அது மட்டுமன்று. 'எஞ்ஞான்றும் திருத்தகவிற்றாயதோர் உள்ள நிகழ்ச்சி' என்பர், பேராசிரியர். என்றும் திருவுடையார் போலவிருக்கும் மனமகிழ்ச்சி. சிலர் 'திரு' இருந்தும், அதற்கேற்ற மனமகிழ்ச்சியின்றி, வறியரினும் கீழாக இருப்பர். இவை முறையாக இருவர் பாலும் அமைய வேண்டிய ஒப்புமையாகும். இன்று கணியம் (சாதகம்) பார்ப்பார் பத்துவகைப் பொருத்தம் பார்ப்பார்கள். இவற்றுள் பெரும்பாலான பொருத்தமிருந்தால் போதுமென்றும்,

முக்கியமானவை பொருந்தியிருந்தால் போதுமெனவும் கணியர் (சோதிடர்) கூறுவர். தொல்காப்பியரும் பத்துவகைப் பொருத்தம் கூறுகிறார். இவையும் பெரிதும் ஒத்திருந்தாலே வாழ்வு சிறக்கும். பகுத்தறியும் பொருத்தங்கள் இவை.

**அவர்களிடம் அமையக்கூடாத குணங்கள்**

**நிம்பிரி, கொடுமை, வியப்பொடு, புறமொழி,**
**வன்சொல், பொச்சாப்பு, மடிமையொடு, குடிமை,**
**இன்புறல், ஏழைமை, மறப்பொடு, ஒப்புமை**
**என்றிவை இன்மை என்மனார் புலவர். (1220)**

பத்துப் பொருத்தம் கூறியவர் அம் மணமக்களிடம் அமையக் கூடாத தீய குணங்கள் என்ற ஒரு பன்னிரண்டு குணங்களைப் பட்டியலிட்டுக் கூறுகிறார்.

1. நிம்பிரி – ஒருவர் மீது ஒருவர் பொறாமைப்படுவது கூடாது.
2. கொடுமை – ஒருவர் மீது ஒருவர் தீமை செய்ய நினைக்கும் கொடுமை.
3. வியப்பு – ஒருவர் மற்றவரிடம் தம்மைப் பற்றி வியந்து பேசுதல்.
4. புறமொழி – ஒருவர் மற்றவரைப் பற்றிப் புறங்கூறுதல்.
5. வன்சொல் – கடுஞ் சொற்களால் திட்டுதல்.
6. பொச்சாப்பு – ஒருவர் மற்றவருக்குச் செய்ய வேண்டிய கடமையை மறத்தல்.
7. மடிமை – இல்லறக் கடமைகளைச் செய்யாது சோம்பியிருத்தல்.
8. குடிமை – ஒருவர் பிறர் குடியினும் தம் குடி மேலென நினைத்துப் பேசுதல்.
9. இன்புறல் – ஒருவர் மற்றவரைவிடத் தாமே இன்புறுவதாக எண்ணிக்கொள்ளுதல். சேர்ந்தின்புறாது, தனித்து இன்பங் காணுதல்.
10. ஏழைமை – அறிவின்மை, வறுமையுமாம்.
11. மறப்பு – ஒருவர் மற்றவரை மறந்துவிடுதல்.
12. ஒப்புமை – கணவன் மனைவியைப் பிற மகளிரோடு ஒப்பிடுதலும் மனைவி கணவனைப் பிற ஆடவரோடு ஒப்பிடுதலும் கூடாது. இது தவறான நினைவுகளுக்கும் தீய ஒழுக்கங்கட்கும் கொண்டுபோய் விடும்.

கணவனுக்குத் தன் மனைவியே, பிற மகளிர் அனைவரிலும் மேம்பட்டவள்; அழகானவள்; நல்லவள். அதே எண்ணம் மனைவிக்கும் கணவனைப் பற்றி இருக்க வேண்டும். பிறருடன் ஒப்பிடுதற்குரியரல்லர் என்ற இவ்வுளவியலைச் சுட்டிய தொல்காப்பிய நுட்பம் காலத்தால் மாறாதது.

தலைவன் தலைவியரிடம் இருக்கக் கூடாத குணங்களையும் தொல்காப்பியர் பட்டியலிடுகிறார். நிம்பிரி - ஒருவர் மீது ஒருவர் பொறாமைப்படுதல். கொடுமை - தீமை செய்ய நினைக்கும் உள்ளம். வியப்பு - ஒருவர் ஒருவரினும் பெரியரெனத் தம்மைத் தாமே வியந்து கொள்ளுதல், தலைமக்கள் தம்மை வியந்து பேசி, மற்றவர் மனம் புண்படச் செய்தல். புறமொழி - ஒருவரைப் பற்றி ஒருவர் புறங்கூறுதல். வன்சொல் - கடுஞ் சொற்களால் ஒருவரை ஒருவர் வசை கூறுதல். பொச்சாப்பு - ஒருவர் ஒருவருக்குச் சொன்ன சொல்லையோ, செய்ய வேண்டிய கடமையையோ மறத்தல். அது மனவேற்றுமையில் கொண்டுவிடும். மடிமை - இல்லற முயற்சி, பொருள் முயற்சிகளில் சோம்பியிருத்தல். குடிமை இன்புறல் - தத்தம் குடிச்சிறப்புக்கருதி இன்புறுதல். நான் பெரிய குடும்பத்தில் பிறந்தவள் என்பதுபோலப் பேசி இன்புறுதல். ஏழைமை - நுழைபுலமில்லா அறிவின்மை. மறப்பு - ஒருவரை ஒருவர் மறந்து ஒழுகும் தன்மை. பிரிந்த இடத்தில் நினைவே இன்றி மறத்தல் போல்வன.

ஒப்புமை - தலைவன் தலைவியைப் பிற மகளிரோடு ஒப்பிடுதலும் தலைவி தலைவனைப் பிற ஆடவரோடு ஒப்பிடுதலும் தவறு. ஒப்பிட்டால் மனம் பிறழ வாய்ப்புளதாகும். இவை யாவும் இல்லாத குடும்பம் சீரும் சிறப்புமாய் இணை பிரியாது திகழும்.

## இலக்கிய மெய்ப்பாடுகளைச் சுவைத்தற்குரிய திறனாளிகள்

**கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்**
**உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்**
**நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே.** (1221)

மெய்ப்பாடு எனும் சுவையை உணர, சுவைஞனுக்கும் அதுபற்றிய முன் அனுபவம், கூரிய அறிவு, பொறி புலனுணர்வு வேண்டும். கண்ணாலும் செவியாலும் ஏனைய உடல், மூக்கு, நா ஆகிய பொறிகளாலும் உலகைக் கூர்த்து அறிந்து அனுபவிக்கும் உணர்வுடைய மாந்தருக்கே, இலக்கிய இன்பமும் புலனாகும். மெய்ப்பாடு என்பது நல்ல சிறந்த நயம் மிக்க பாட்டுப் பொருளை உணர்ந்து (பொருள்கோள் - பொருள் கொண்டு) அனுபவிப்பது. அது முன்னே சொன்னவாறு ஐம்புல உணர்வுள்ள மக்களுக்கே இயைவதாகும். மற்றவர்களால் இச்சுவையுணர்வை எண்ணிப் பார்க்கவும் முடியாது.

**உய்த்துணர்வு இன்றித் தலைவரு பொருளான்**
**மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டாகும். (1463)**

என்று செய்யுளியலில், இலக்கியத்தைப் படைப்பவனின் திறமையை வலியுறுத்துவார். இங்கு அவ் இலக்கியத்தை நுகர்பவனும் அனுபவமும் ஐம்புல உணர்வும் பொருள் கொள்ளும் திறனும் உடையவனாதல் வேண்டும் என்று கூறுகிறார்.

**நல்நயப் பொருள்கோள் - நல்ல நயம்மிக்க பாட்டுப் பொருளை, இலக்கியப் பொருளை உணர்தலே இலக்கிய மெய்ப்பாடு. இஃது ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்பது. நாடகத்தில் மெய்ப்பாடு என்பதே இலக்கியத்தில் பொருள்கோள், பொருள் கொள்ளும் திறன். 'மெய்ப்பாடென்பது பொருட்பாடு' எனப் பேராசிரியர் தொடங்கியதும் காண்க. கண்ணாலும் செவியாலும் ஏனைய புலன்களாலும் உலகைத் திண்ணிதாக அறியும் உணர்வுள்ள மாந்தர்களால் மட்டுமே இலக்கிய நயத்தை அனுபவிக்க முடியும். மற்றவர்களால் இதை எண்ணிப் பார்க்கவும் இயலாது. படைப்பவன் எவ்வளவு திறமையுடன் படைத்தாலும் படிப்பவனது திறனைப் பொறுத்தே அனுபவித்து இன்புறமுடியும்.**

# உவமையியல்

## முன்னுரை

அறிந்த ஒன்றனைக் கூறி, அறியாத ஒன்றனை விளக்குவது உவமை. மாலை நேரம் ஆலமரக் கிளைகளில் பறவைகளின் ஓசை, சந்தை இரைச்சல் போலிருந்தது. உவமையால் அந்த ஆரவார ஒலி நினைவிலோடி, செவிப்புலனாவது போல் உளது. மெய்ப்பாடு போல உவமத்தானும் 'பொருள் புலப்பாடே' கூறப்படுகிறது என்பார் பேராசிரியர்.

'செம்பவளம் போல் வாய்திறந்து' காதலி பேசியதாக வரும்போது, ஓர் அணியழகாய், கேட்கும் காதலிக்கு அது இன்பம் செய்ய வல்லதாகிறது. ஆக உவமை பொருள் புலப்பாட்டிற்கும் அணி அழகாய் இன்புறுத்தற்கும் கூறப்படும் என்றாகிறது. இளம்பூரணர் 'புலன் அல்லாதன புலனாக்குதலும் அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயத்தலும்' என இருவகைப் பயனைக் குறிப்பிடுவார்.

உலக வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் உவமையே மிகுதியும் ஆளப்படுவது. உவமை, உவமம், உவமானம் - தமிழ்ச் சொற்கள். உவப்பு என்பது ஒப்பு என ஆகும். உவத்தல் - ஒத்தல். தொல்காப்பியர் உவமை ஒன்றையே அணியாகக் கூறிப் பிற யாவற்றையும் இலக்கியத்தில் வரும் பல்வேறு பொருளுறுப்புக்களாக ஆங்காங்குக் கூறிச் செல்கிறார்.

உவமையியல் முதல் பத்து நூற்பாக்களில் உவமையின் இயல்பு கூறப்படுகிறது. இரண்டாம் பிரிவு ஏழு நூற்பாக்களில் உவம உருபுகள் பற்றிக் கூறுகிறது. மூன்றாம் பிரிவு ஐந்து நூற்பாக்களில் உவமையை எங்ஙனம் நன்கு விளங்கிக் கொள்வதென விளக்குகிறது. நான்காம் பகுதி உள்ளுறை பற்றியது. ஐந்தாம் பிரிவில் ஆறு நூற்பாக்களில் உவமையில் சிறிது வேறுபட்டு அதன் கிளை வகைகளாக வருவன பற்றி விளக்கப்படுகிறது.

தொல்காப்பியர் குறிப்பிடும் 36 உவம உருபுகளையும் அவற்றுடன் இயைபுபட, உரையாசிரியர்கள் கூறும், மேலும் பல உருபுக்களையும் அவை இந்த

இந்தப் பொதுமைப் பண்புக்கு இந்த இந்த உருபு வருமென்று கூறுவனவற்றையும் பிற விளக்கங்களையும் பயில்வார், தமிழிலக்கியம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இத்துணைச் செறிவும் பொலிவும் விரிவும் கொண்டதாக இலங்கியதைக் கண்டு வியவாமலிரார்.

தொல்காப்பியர் 'இலக்கிய இயல்' பற்றி, இவ்வளவு விரிவாகக் கூறியவர், வடமொழி முதலாய பிற உலக இலக்கியக் கொள்கைகள் போல 'அணியியல்' என ஒன்றை வகுத்திலர். உவமையைத் தனி இயலாக வகுத்த அவர், அதை 'அணி' என்றும் கூறவில்லை. செய்யுள் அல்லது இலக்கியத்தின் 34 உறுப்புகளைக் கூறியவர், அதில் ஓர் உறுப்பாகக் கூட உவமையைக் கூறவில்லை. இஃது ஏன்? தொல்காப்பியர் தெரியாமல் விட்டுவிட்டாரா? தெரிந்தும் 'அணி' என்பதை ஏற்க விரும்பாமல் விட்டு விட்டாரா?

உவமையியல் இறுதியில், பேராசிரியர் தமது உரையில் இது பற்றிக் கேள்வி எழுப்பிக்கொண்டு, விடை தரும் விளக்கம் இங்கு நினைக்கத் தக்கது.

தொல்காப்பியர் நான்குவகைப் பொருள்கோளில் நிரல்நிறை அணியைக் குறிப்பிடுகிறார். ஏந்தல் வண்ணம் என்பதில் சொற்பொருட் பின்வருநிலையணியைக் கூறுகிறார். அவர் கூறும் முரண் தொடை, அங்கதம், வாழ்த்தியல் எல்லாம் பின்பு அணியெனப் பட்டன. உவமை, உள்ளுறை, இறைச்சி, எச்சம், பயன், களம் என்பன பலவும் அவர் அணிகள் எனக் கூறாவிட்டாலும் இலக்கியத்தை அணி செய்வனவே. வண்ணமும் வனப்பும் 'அணி' என்பதன் மறு பெயர்களே.

தொல்காப்பியர் 'அணி' என்பதை 'பொருள் உறுப்பு' என்று கூறுகிறார். ஒரு பாட்டின் பொருள், கேட்பவரைச் சென்றடைய வேண்டும். அதனுட் பொதிந்த பொருள் படிப்பவர்க்குப் 'புலப்பட வேண்டும்'. அவ்வாறு செய்யுளுட் பொதிந்தன எல்லாம் ஒருவர்க்குப் புலனாக, அச்செய்யுளில் வரும் பொருள் தரும் உறுப்பெல்லாம் அழகு தருவனவே. உண்மையில் ஒவ்வொரு பாட்டும், அதனதன் அமைப்பில், அதனதன் அழகிய தனிச்சிறப்புடையதே. எனவே அணிகள் ஒவ்வொரு பாடலுக்கும் தனித்தனி உண்டு; அதில் வரும் ஒவ்வோர் உறுப்புக்கும் தனிப் பொலிவுண்டு. அவை எல்லாம் எண்ணப் புகுந்தால் வரம்பின்றி விரியும்.

'அணி' என்பது, ஒருவர் தனியே எடுத்து, அணிந்து, பிறகு கழற்றிவைப்பது. தேவைக்கேற்பப் பூணப்படுவது. அது உடலினின்றும் வேறுபட்டது. பாடலில் வருவன அத்தகையன அல்ல. பாடலோடு இரண்டறக் கலந்திருப்பன; அவை அப்பாடலாகவே விளங்குவன. அவற்றை அப்பாட்டினது

வண்ணம் வனப்பு அம்மை அழகு என்று எப்படி வேண்டுமானாலும் கூறலாம். இறைச்சி, உள்ளுறை உவமை, உவமை எல்லாம் பாடலே; பாடலுள் பொதிந்த அதன் உட்பொருளே. அவற்றை அணி - அலங்காரம் எனல் தொல்காப்பியர்க்கு உடம்பாடில்லை. அணிகலன் பிரிக்கக் கூடியது. வண்ணம் வனப்பு பிரிக்க முடியாதவை.

பிற்காலத்தார் அலங்காரமுள்ள பாடல்கள் என்றும் இவையிவை அலங்காரமென்றும் வேறு பிரித்துக் காட்ட முயன்றனர். திறனாய்வுக்காக அவை அங்ஙனம் பகுத்துப் பார்க்கப்பட்டன. ஆனாலும் அணி எனப் பிரித்துப் பார்ப்பதிலும், பொருள் தரும் உறுப்பு; பொருளை அழகுபடுத்தும் வண்ணம்; பாட்டுக்குப் பொலிவு தரும் வனப்பு, பாடலின் பொருளில் உட்கலந்திருக்கும் உவமை என இவ்வாறு பார்க்கும் முறையே மேலானது எனப்படுகிறது. இன்றைய ஒப்பியலார் அணிகளைப் 'புலப்பாட்டு நெறி' (Rhetorics) என்பர்.

தொல்காப்பியப் பார்வை காலங்கடந்தும் நிற்கிறது.

## இயல் கருத்து நிரல்

**உவமை வகைகள்**

**பொதுப் பண்புகளால் வருவன**

உவமை வினை (செயல்), பயன், மெய் (வடிவம்), உரு (நிறம்) என்னும் நான்கு அடிப்படைகளில் - பொதுப் பண்பு காரணமாகத் தோன்றும்.

இவை நான்கும் தனித்தனியே அல்லாமல் இரண்டும் மூன்றும் என இவ்வாறு கலந்தும் வரும்.

பொதுப் பண்பு காரணமாக உவமையாக வருவது, அப் பொதுமையில் உயர்ந்ததாக இருத்தல் வேண்டும். உயர்ந்ததையே உவமிக்க வேண்டும்.

**எதற்காக உவமை கூறவேண்டும்?**

ஒன்றன் சிறப்பைப் புலப்படுத்தவும் அழகை விளக்கவும் காதலன்பைக் காட்டவும் வலிமையை உணர்த்தவும் உவமை கூறத் தோன்றும் நான்கு மனஉணர்வு நிலைக்களங்களாகும்.

ஒன்றன் கீழ்மையை - இழிவைத் தெரிவிக்கவும் உவமை கூறுவர். அதனொடு இது ஐந்தாகும்.

## முதலும் சினையும் உவமிக்கப்படும் நெறிமுறை

முதல், சினை என்னும் இரண்டும் உவமை கூறும்போது, இடம் நோக்கி அமையும். முதலொடு முதல், சினையொடு சினை, முதலொடு சினை, சினையொடு முதல் என இவ்வாறு இடம் நோக்கி - பொருத்தம் நோக்கி வரும்.

உவமைக்கான பொதுப் பண்பையும் உருபையும் சுட்டிச் சொல்லாத உவமையில் உவமையையும் பொருளையும் (உவமேயத்தையும்) எதிரெதிரே சேர்த்து நிறுத்தி, அவை இரண்டையும் பொருந்திய வகையில் அறிய வேண்டும்.

உவமையும் உவமிக்கப்படும் பொருளும் பொதுப்பண்பில் ஒத்திருக்க வேண்டும்.

## உருவகமும் ஒருவகை உவமையே

பொருளையே (உவமேயத்தையே), உவமமாக்கி - ஒன்றாக்கி உரைத்தாலும், அதுவும் குற்றமற்ற சிறப்பினையுடைய உவமையாகும்.

உவமை கூறும்போது, பெரிய ஒன்றனுக்குச் சிறியதையும் சிறிய ஒன்றனுக்குப் பெரியதையும் உவமை கூறலாமா? கூறலாம். சொல்வோனது குறிப்பின் வழிப்பட்டன அவை.

## உவம உருபுகள்

அன்ன ஏய்ப்ப முதலாக 36 உவம உருபுகள் கூறப்படுகின்றன. இவை ஆறு x ஆறு ஆகக் கூறப்படுவதால் தொல். காலத்தில் இவற்றுள் ஏதேனும் இயைபு இருந்திருக்கக் கூடும். இவை தவிர, 'அன்ன பிறவும்' என்று சொல்வதால், இவை போல வேறு உருபுகளும் இருந்திருக்க வேண்டும். உரையாசிரியர்கள் சிலவற்றைக் கூறியுள்ளனர். இவை 'பல் குறிப்பின' எனப்படுவதால், இவ் வுவம உருபுகள் பயன் படும்போது பலவகைப் பொருட்குறிப்பைத் தருவனவாய் உள்ளன.

பொதுப்பண்பாக வினை அடிப்படை உவமை உருபுகள் அன்ன ஆங்க தொடங்கி எட்டு ஆகும்.

'அன்ன' என்பது பிற பயன், வடிவம், நிறம் போலும் பொதுமைகளிலும் வரும்.

எள்ள, விழைய முதலான எட்டும் 'பயன்' பொதுமைக்குரியதாய் வரும் உவம உருபுகள்.

கடுப்ப ஏய்ப்ப முதலான எட்டும் மெய் பொதுமைக்குரிய உவம உருபுகள் (மெய் – வடிவம்)

போல மறுப்ப முதலான எட்டும் 'உரு' (நிறம்) பற்றிய, பொதுமைக்குரிய உவம உருபுகள்.

உவம உருபுகளுக்கும் அவ்வவற்றின் மரபிற்கு ஏற்பப் பொருளுண்டு. அதாவது ஏய்ப்ப, வெல்ல, மருள என்றால் சொற்பொருளும் உடன்தோன்றும்.

உவமைகள் சுவை அடிப்படையில் 'நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை' எனும் மெய்ப்பாடு எட்டின் அடிப்படையிலும் வகைமைப் படுத்தப்படும். இது நகை உவமை, இது அச்ச உவமை என அழைக்கப்படும்.

பெருமை, சிறுமை என்பன உவமையாகும் போது, சொல்பவனது குறிப்பின்வழிக் கூறப்படும் என முன்னர்ச் சுட்டினார் (1231). இங்கு அவ்வாறு பெரியதைச் சிறியதற்கும் சிறிய ஒன்றைப் பெரியதற்கும் உவமை கூறும்போது, அவை முற்கூறிய எட்டு மெய்ப்பாடுகளை விளக்குமுகமாகத் தோன்றும் என்று கூறுகிறார்.

உவமத்தைக்கொண்டு, அதனால் உணரப்படும் (உவமேயப்) பொருளிற்குப் பொருந்தி வருவனவற்றை உணரலாம். இவ்வாறு தெளியத்தக்க பகுதிகளும் உவமை கூறுவதில் உள.

அங்ஙனம் உவமையால், உவமிக்கப்பட்ட பொருளின் திறமெலாம் அறியும்போது, தொன்றுதொட்டுப் பொருந்திவரும் வழக்கின்படி கொள்ள வேண்டும்.

### உள்ளுறை உவமை

(அ) உவமை இரட்டையாயின், உவமிக்கப்படும் பொருளும் இரட்டையாதல் வேண்டும்.

(ஆ) இரு பொருள்படக் கூறும் கூற்றாயின் பொருள் கொள்ளும்போது, வெளிப்படையான ஒரு பொருளுடன், உள்ளுறையாகவுள்ள பிறிதொரு பொருளையும் அறிதல் வேண்டும்.

## உள்ளுறை உவமையை அறியும் முறை

உள்ளுறை உவமத்தை உணர, அதனை அறியுமளவு இலக்கிய மரபு தெரிந்திருக்க வேண்டும். ஏனெனில் அது குறிப்புப் பொருளாக முன்னைய மரபின்படி கூறப்படும். பிற பொதுமைப் பண்புகளை மட்டும் நோக்காது உவமை பொருளிடையே பிறப்பியல்பால் அவற்றின் சொந்த இயல்பால் அமையும் பொதுமை நோக்கியே, குறிப்பாய்க் கூறப்படும்.

அஃதாவது உள்ளுறையில் உவமைக்கும் பொருளுக்கும் பிறவியியல்பு போன்ற ஒப்புமை வேண்டும். உவமிப்பதும் உணர்ந்துகொள்வதும் மரபுப்படி அமைய வேண்டும்.

## உள்ளுறை உவமை வகைகள்

உள்ளுறை உவமை - உவமம் போன்றிருக்கும் உவமப் போலி ஆகும். அஃது ஐந்து வகைப்படும்.

அதன் குற்றமற்ற சிறப்புடைய தன்மையை ஆராய்ந்தால், வினை, பயன், உறுப்பு (மெய்), உரு, பிறப்பு எனும் ஐந்தன் அடிப்படையில், ஐந்து வகையாக வரும்.

## அகமாந்தர் உவமை கூறும் முறை

தலைவி அவள் அறியுமாற்றலால் மட்டுமே உவமை சொல்வாள். தோழி தான் வாழும் நிலத்திற்குள் உள்ளவற்றையே உவமை சொல்வாள். அதற்கு அப்பாற்பட்டவற்றை அவள் உவமை கூறாள்.

அஃதாவது அகப்பாடல் புனைபவன் தான் அறிந்தபடி, தலைவி, தோழி ஆகியவர்கள் உவமை சொன்னதாகப் படைக்க முடியாது; கூடாது. அவர்கள் அறிந்த அளவில் கூறியதாகப் பாடினால்தான், மாந்தர் படைப்பில் தவறு நேராது. ஓர் இடைக்குலப் பெண் படைக்கப்பட்டால், தானறிந்த தன் சூழலுக் கேற்றவற்றை மட்டுமே உவமை கூறியதாகப் படைத்தால் தானே, அவ் உவமை அவள் கூற்றாதற்குப் பொருந்தும்.

தலைவன் தன் அறிவாற்றலுக்கு ஏற்ப உவமை கூறுவான். பிற மாந்தர்க்கு எல்லாம் இவ்வாறுதான் கூற வேண்டுமென்ற வரையறை இல்லை.

உவமை கூறுவதில் மகிழ்ச்சிதரும் கூற்றும் உண்டு. வருத்தத்தை அல்லது ஊடலை வெளிப்படுத்தும் கூற்றும் உண்டு. அகப்பாடலில் அமையும் முறை இது.

தலைவி முன்சொன்ன இனிதுறு கிளவி, துனியுறு கிளவி ஈரிடத்தும் உவமை அல்லது உள்ளுறை உவமை கூறுவாள்.

தலைவன் உவமைகள் கூறுவதற்கு, இன்ன சூழலில் என வரையறை இல்லை. சங்கப் பாடல்களில் தலைவன் உள்ளுறை உவமை கூறுமிடம் மிக அரிதாகும். எனவே 'வரைவின்று' – இடம் குறிப்பிடப் படவில்லை என்றும் பொருள் சொல்லலாம்.

தோழியும் செவிலியும் உள்ளுறை உவமையைப் பொருந்தும் இடம் நோக்கிக் கூறுவர்.

**ല வடிவங்களில் உவமை அமைதல்**

உவமை பல்வேறு வடிவங்களிலும் கூறப்படும். அவ்வாறு வரும்போது, இங்கு கூறிய வழியிலேயே, கொள்ளும் முறையறிந்து கொள்க.

இதற்கு இது உவமையாகுமோ என மறுப்பது போலக் கூறுதலும் தொன்றுதொட்டு வரும் ஓர் உவமை மரபேயாகும்.

உவமை போலவே கூறாமல், அத் தன்மைப்படச் சொன்னாலும் அஃது ஒரு வழியில் உவமையின் பயனை விளைவிக்கும். அஃதும் உவமையின் ஒரு பகுதியேயாகும்.

இதுவோ அதுவோ இதனை ஒத்தது என ஐயப்பட்டுத் தடுமாறுவது போலச் சொன்னாலும் அதுவும் நீக்கப்படாது, உவமையாகவே ஏற்கப்படும்.

உவமைக்கு உவமை என அடுக்குவதைக் கைவிட வேண்டும்.

ஆனால் உவமையை நிரல்படி அடுக்கும்போதும் உவமையையும் பொருளையும் முறையே நிரல் நிறுத்து அமைக்கும்போதும், 'சுண்ணம' என உவமை, பொருள் இரண்டையும் பிரித்து, மாற்றியமைத்துப் படிப்பவர் இடம் மாற்றி உணருமாறு கூறும்போதும் மட்டும் அடுக்கி வரலாம். இவை அல்லாத இடங்களில் எல்லாம் அடுக்கிவருதல் கூடாது.

## உவமையியல்

### ஒப்புமைப்படுத்துதற்குரிய பொதுப் பண்புகள்

**வினை பயன் மெய் உரு என்ற நான்கே**
**வகைபெற வந்த உவமத் தோற்றம். (1222)**

**உவமையைத் தோற்றுவிக்கும் பொதுமைகள்**

உவமைக்கும் (உவமிக்கப்படும்) பொருளுக்கும் சில பொதுத் தன்மைகள் இருந்தால்தான், ஒன்றை மற்றதனோடு உவமிக்கமுடியும். அப்பொதுமைகளை நான்காக அடக்கலாம்.

வினை - (செயல்) குயில் போலப் பாடினாள்.

பயன் - பேரறிவாளன் செல்வம் ஊருணி நீர் நிறைந்தது போன்றது.

மெய் - தாமரை போன்ற முகம்.

உரு - பால் போலும் வெண்ணிலா

இப் பொதுமைகளாலேயே உவமைகள் தோன்றுகின்றன. அதனால் இவை அடிப்படையில் **வினையுவமம்**, **பயனுவமம்** வடிவம் அல்லது **மெய்யுவமம்**, நிறம் அல்லது குணம் பற்றிய **உருவுவமம்** என நான்கு வகைப்படுகின்றன.

உவமை நான்கு பொதுப் பண்புகளால் கூறப்படும். அவை வினை (செயல்), பயன், மெய் (வடிவம்), உரு (நிறம், குணம்) என்பனவாம். மெய் வாய் கண் மூக்கு செவி எனும் ஐம்புலன்களாலும் மனத்தினாலும் அறியப்படும் வகைகளும் உள என்பார் இளம்பூரணர்.

**பொதுப்பண்புகள் விரவியும் வருதல்**

**விரவியும் வரூஉம் மரபின என்ப. (1223)**

இப்பொதுமைகள் ஒன்றற்கு ஒன்றே வருமென்பது இல்லை; கலந்தும் வரும்.

பிறைபோலும் நெற்றி - வடிவமும் நிறமும் பொதுமைகள். கயல் போலும் கண்கள் - வடிவமும் பிறழ்தலும் பொதுமைகள்.

விரவியும் - மேலே கூறப்பட்ட நான்கும் தனித்தனி வருவது மட்டுமன்றிக் கலத்தும் வரும்.

புலிபோலப் பாய்ந்தான் (வினை)

மழை அன்ன வண் கை (பயன்)

துடி நிகர் இடை (வடிவம்)

பவளம் போல் வாய் (நிறம்)

பிறை போலும் நெற்றி (வடிவமும் நிறமும்)

### பொதுப்பண்பில் உயர்ந்தவையே உவமையாக வரும்

**உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை. (1224)**

இப் பொதுமை பற்றி உவமை கூறும்போது, உவமையாக வருவது அப்பொதுமைப் பண்பில் உயர்ந்ததாக இருக்க வேண்டும். வினை, பயன், மெய், உரு எனும் பொதுமையில் அவை சிறந்தவையாக இருக்கவேண்டும். புலிபோலப் பாய்ந்தான் எனலாம். நாய் போலப் பாய்ந்தான் எனல் தவறு. நாய் போல நன்றி மிக்கவன் எனலாம். ஏனெனில் நன்றியறிதலில் அது சிறந்தது. பொதுப் பண்பில் உயர்ந்ததையே உவமிக்கவேண்டும்.

உயர்ந்ததன் மேற்று - உவமை கூறும்போது, அவ் உவமைகள் மேற்கூறிய வினை முதலியவற்றில் உயர்ந்தனவாய் இருக்க வேண்டும். பால் போலும் வெண்மை என்றால் வெண்மையில் பால் மிகச் சிறந்தது. அவ்வப் பண்பில் உயர்ந்ததே உவமையாக வரும்.

### உவமை கூறத்தோன்றும் நிலைக்களன்கள்

**சிறப்பே நலனே காதல் வலியொடு**
**அந்நாற் பண்பும் நிலைக்களம் என்ப. (1225)**

*உவமை சொல்லவேண்டிய சூழல்கள் யாவை?*

சிறப்பு, நலன், காதல், வலி - இவை நான்கின் அடிப்படையில் உவமை கூறுவர். ஒன்றைச் சிறப்பிப்பதற்காக உவமை சொல்லலாம்; அருந்ததி அன்ன கற்புடையாள் - கற்பின் சிறப்பைக் கருதிக் கூறப்பட்டது. அழகு என்பதை 'நலன்' என்றார். நல்லெழில், நற்பண்பு எல்லாம் அடங்கும். புள்ளி வைத்த கோலம் போலும் நீலவானம். காதல் - அன்பு, பாசம், காதல் எல்லாம் அடங்கும். கிளி போலும் அழகினாள், குயில் போலும் குரலினாள். வலிமை - ஒருவரது வலிமை மிக்க தன்மை. 'அரிமா அன்ன அணங்குடைத் துப்பின்' (சிங்கம் போன்ற பிறரை வருத்தும் வலிமையுடைய கரிகாலன்' - பட்டினப் பாலை.)

ஒன்றைச் சிறப்பிப்பதற்காக உவமை கூறுவர். ஒன்றன் நலன் - அழகை விளக்குவதற்காக உவமை கூறப்படும். ஒன்றன்பாலுள்ள அன்பாலும் பாசத்தாலும் காதலாலும் உவமை கூறுவது ஒருவகை. 'பாவை அன்ன பேரெழில்' என்றால், அங்கு காதலுணர்வால் அது கூறப்பட்டதென்பது புலனாகிறதல்லவா? ஒன்றன் வலிமையைச் சிறப்பிக்கு முகத்தானும் உவமை கூறுவர். சிங்கம் போலும் மறவன்,

விடுதலைப்புலி போலும் வீரமுடையான் என்பன அவற்றின் வலிமையை வியந்தவர் கூற்றுக்களாகும். நிலைக்களம் - மனிதர்தம் உணர்வுகள்தான் உவமை கூறவைக்கும் அடிப்படைகளாகும்.

**ஒன்றன் இழிவைப் புலப்படுத்தவும் உவமை கூறப்படும்**
**கிழக்கிடு பொருளோடு ஐந்தும் ஆகும். (1226)**

கிழக்கிடு பொருள் - கீழ்ப்படுக்கப்படும் பொருள். இழிவு படுத்துவது. ஒன்றை இழிவு படுத்தவும் உவமை வரும். இதனைச் சேர்த்து உவமை சொல்லத் தூண்டும் சூழல் ஐந்தாகும். 'பன்றி அனைய பகைவர்', 'அரசியலில் அரக்கிகளும் அரக்கர்களும் போன்றவர்களே மிகுதியாயினர்' - இவ்வாறு வருவன இழிவின் மிகுதியைப் புலப்படுத்த வருவன.

கிழக்கிடு பொருள் - கீழ்ப்படுக்கப்படும் பொருள். சிலரின் பண்பைக் காட்ட பரிசு பதவிக்காக மோப்பம் பிடிக்கும் 'நாயினைப் போல் அலைபவர்கள்' எனவும் 'எருமை போல உணர்வற்ற தமிழர்களும் உளர்' எனவும் வரும்போது, கீழ்மையை உணர்த்தும் நோக்குடன் அவை கூறப்படுகின்றன. இவையே 'கிழக்கிடு பொருள்' எனப்பட்டன.

### முதலும் சினையும் உவமையும் பொருளுமாக வரும் விதங்கள்

**முதலும் சினையும் என்று ஆயிரு பொருட்கும்**
**நுதலிய மரபின் உரியவை உரிய. (1227)**

*எதற்கு எதை உவமை சொல்வது*

முதல் என்பது முழுமைப் பொருள். சினை என்பது அதன் உறுப்பு. மரமும் கிளையும் - முதலும் சினையும், மனிதனும் கையும் - முதலும் சினையும். இவற்றை உவமை கூறும்போது முதலுக்கு முதலை உவமை கூறுவர்; சினைக்குச் (உறுப்புக்கு) சினையை உவமை கூறுவர். இவற்றை மாற்றியும் கூறுவர். ஆனால் வழிவழியாகச் சொல்லப்பட்டு வந்த மரபுப்படிதான் சொல்லவேண்டும். அப்போதுதான் படிப்பவனுக்கு நாம் சொல்வது விளங்கும். அரண்மனை போன்ற வீடு (முதலுக்கு முதல்); கடல் அலை போலும் கருங்கூந்தல் (சினைக்குச் சினை); நீலக்கடல் போலும் கருவிழிகள் (முதல் சினைக்கு); 'கருங் கூந்தல் போன்று அலையும் கார் முகில்' (சினை முதலுக்கு). இவ்வாறு பழம் மரபை ஒட்டியே உவமை கூறத் தோன்றும்.

உவமை கூறும் போது எவ்வெவ்வாறு கூறலாம்?

முதல் - முதற்பொருள், மரம். சினை - உறுப்புப் பொருள், கிளை. மரம், முதல் என்றால் கிளை சினை. கிளை முதலென்றால் கொம்பு சினை. உவமை கூறும்போது முதலுக்கு முதலை உவமை கூறுவதுண்டு (மலை போன்ற யானை). சினைக்குச் சினையை உவமை கூறுவதுண்டு (மலரிதழ் போன்ற இமைகள்). முதல் சினைக்கு உவமையாதலுண்டு (முழுமதி போலும் முகம்). சினை முதலுக்கு உவமையாகக் கூறப்படுதலுண்டு (கண்ணுள் மணி போலும் காதலி). நுதலிய மரபின் - இதுகாறும் கூறப்பட்டு வரும் வழிவழி மரபுப்படி.

## உருபு இன்றியும் உவமை வருதல்

**சுட்டிக் கூறா உவம மாயின்**
**பொருளெதிர் புணர்த்துப் புணர்ந்தன கொளலே. (1228)**

*உவமை சொல்வதற்கான சில நெறிமுறைகள்*
*சுட்டிச் சொல்லாமல் சொல்லும் உவமை*

பொருள் - உவமிக்க எடுத்துக்கொண்ட பொருள். முகம் - இது உவமேயம் எனவும் கூறப்படும். உவமம் அல்லது உவமை - தாமரை - இது உவமானம் என்றும் கூறப்படும். தாமரை போலும் முகம் என்று, போலும் என்ற உவமை உருபை வைத்துச் சொல்வது சுட்டிக் கூறும் உவமம். தாமரைமுகம் என்றே சொல்லிவிட்டால், அங்கு உவம உருபு சுட்டிக் கூறப்படவில்லை. தாமரை போலும் அழகிய முகம் - இதில் உவமை உருபும் பொதுப்பண்பும் சுட்டிச் சொல்லப்பட்டுள்ளன. இவை யாவும் அடங்கத் தாமரை முகம் என்றே கூறிவிடுவது **சுட்டிக் கூறா உவமமாகும்**. உவமத்தைப் பொருளுக்கு எதிரே கொணர்ந்து சேர்த்து, பொருந்தியனவாகிய உருபு, பொதுமை போல்வனவற்றை இணைத்து முழுமைப்படுத்தித் தெரிந்துகொள்ள வேண்டும். பிற்காலத்தில் இதை **'எடுத்துக்காட்டுவமையணி'** என ஓர் அணிவகையாக்கினர். **'மோப்பக் குழையும் அனிச்சம் (அதுபோல) முகம் திரிந்து, நோக்கக் குழையும் விருந்து'** - இதில் அதுபோல என்பதை எடுத்துக்காட்டி, இதனை உவமை என உணரவேண்டியுளது.

**இன்று உவமேயம் என்பது, இடைக்கால வடமொழித் தாக்கத்தால் உருவான தமிழ்ச்சொல். ஒருவர் விளக்க நினைப்பது எது? அது 'பொருள்' - விளக்க எடுத்துக் கொண்ட 'பொருள்'. பொருளை - இன்று உவமேயம் என்று கூறுகிறோம். அதை விளக்க வருவது உவமை அல்லது உவமானம்.**

சுட்டிக் கூறா உமமம் : 1. 'அதுபோல' என இடையே சுட்டிச் சொல்லாத உவமை. மலர் முகம் - மலர் (போன்ற) முகம். இடையே உவம உருபு வராவிட்டாலும் அதை வருவித்துக்கொள்ள வேண்டும். 'அகரமுதல எழுத்தெல்லாம் (அதுபோல) ஆதி பகவன் முதற்றே உலகு'. இளம்பூரணர் கருத்துப்படி இது உவம உருபு வராததால் 'சுட்டிக் கூறா உவமம்'. பிற்காலத்தார் இதை எடுத்துக்காட்டுவமை அணி என்றனர்.

2. 'முல்லை மலர் அன்ன வெண்பல் வரிசை' என்பதில், வெண்மை நிறம் என்ற பொதுத் தன்மை வருதலால், இதுசுட்டிக் கூறிய உவமம். இப்பொதுமைப் பண்பைக் கூறாமல் 'முல்லைப்பல் வரிசை'யினால் முறுவலித்தாள் - என வந்தால், அது சுட்டிக் கூறா உவமம். இது பேராசிரியர் கருத்து.

பொதுப் பண்பும் உவம உருபும் வராமலும் உவமை வருமென்பதே இதன் கருத்து.

பொருள் எதிர் புணர்த்து - பொருளை (உவமேயத்தை) உவமையின் எதிர் நிறுத்திச் சேர்த்து. புணர்ந்தன - அங்கு இடையே இணைத்தற்குரியவற்றை இணைத்து. அதாவது உவம உருபையும் பொதுப்பண்பையும், இவையே சுட்டிக் கூறாதவை.

**உவமையில் பொதுப்பண்பு சமமாக ஒத்திருக்க வேண்டும்**

**உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும். (1229)**

உவமையும் உவமிக்கப்படும் பொருளும் தம்மின் ஒப்புமையுடையன என உலகம் ஒப்ப வேண்டும். உலகத்தார் ஏற்குமாறு உவமை சொல்வதே மரபு. உவமையைக் கேட்டு உலகத்தார் மகிழவேண்டுமென்பார் பேராசிரியர். ஒப்புமைகண்டு சொல்வது ஓர் அரிய திறமையாகும்.

பொருள் - உவமிக்கப்படும் பொருள், உவமேயம். ஒத்தல் வேண்டும் - அஃது உவமையுடன் ஒப்புமை உடையதாதல் வேண்டும். ஒப்புமையுடையது என உலகம் ஒப்பவேண்டும். 'புலிபோலப் பாய்ந்தான்' என்பது ஒப்பக் கூடியது. 'பூனை போலப் பாய்ந்தான்' எனில் கேட்பவர் மனம் ஒப்பாது. இதை, "உவமானமும் பொருளும் தம்மில் ஒத்தனவென்று உலகத்தார் மகிழ்ச்சி செய்தல் வேண்டும்" என்பார், பேராசிரியர்.

**உருவகமும் உவமையே**

**பொருளே உவமம் செய்தனர் மொழியினும்**
**மருளறு சிறப்பினஃது உவம மாகும். (1230)**

பொருளை (உவமேயத்தை), உவமமாக ஆக்கி, உவமையை உவமேயமாம் பொருள் போலச் செய்து சொன்னாலும் அது குற்றமற்ற சிறப்பினையுடைய உவமையாகவே கொள்ளப்படும். தாமரை போன்ற அழகிய முகம் என்பதை மாற்றி மகளிர் முகம் போலப் பொலிவு தரும் தாமரை எனச் சொன்னாலும், அது 'முகத்தின் சிறப்பையே இன்னும் மிகுவிக்கும்'. உவமை என்பது உயர்ந்ததாக இருக்கவேண்டுமென்பதுதானே, முன் சொன்ன விதி. இதைச் சுருக்கி முகத்தாமரை என்பதும் அதுவே. பவளவாய் என்பதை வாய்ப்பவளம் என்பதும் அவ்வாறு வருவதே. இவ்வாறு வருவனவற்றைப் பிற்காலத்தார் 'உருவகம்' என ஓர் அணியாக்குவர். தொல்காப்பியர் அதுவும் உவமையே, உவம வகைகளுள் ஒன்றே என்று கூறுகிறார்.

வடநூலார் ரூபகம் என்பர். உருவகம் என்பதில் இரண்டாம் எழுத்து 'ரு'வுடன் முதல் 'உ' சேர்ந்து, 'ரூ' ஆகும். அதாவது உருவகமே ரூவகம், ரூபகம் ஆகும். ரூபகம் உருவகம் என மொழிநூல் முறைப்படி ஆகாது. இலது - லேது என ஆவது போல்வது இது. இதை 'உயிரிடம் பெயரல்' என்பர். வடமொழிக்கே உரியன எனச் சாதித்துத் தமிழ் கடன் பெற்றது என்பார் நடுநிலையாகச் சிந்திக்க என்றுமே முன் வந்ததில்லை. தமிழறிஞர்களிலேயே காலக்கோட்பட்டுப் பிறழ உணர்ந்து பேசியும் எழுதியும் வருவோர் பலராவர்.

பொருளே உவமம் செய்தல் - பொருளையே உவமம் ஆக்குதல். 'முகம்' - பொருள் அல்லது உவமேயம். அதையே உவமை போல மாற்றுதல். 'முகமலர்' எனல். முகம் போன்ற மலரா, மலர் போன்ற முகமா? இரண்டிற்கும் வேறுபாடின்றி, இதை அதுவாகவும் அதை இதுவாகவும் மாற்றிச் சொல்லுதல். வாய்ப்பவளம், முகமதி, தாள்தாமரை என்பன போல வருதல். மருள் அறு சிறப்பினஃது - குற்றமற்ற சிறப்பினையுடைய அது. மிகு சிறப்புடையனவே உவமையாகக் கூறப்படும். தாமரை போன்ற தாள்களை (திருவடியை), 'தாள்தாமரை' என்றால் அத்திருத்தாளின் சிறப்பு மிகுகிறது. அதனைப் பிற்காலத்தார் உருவகம் என்றனர். உருவகமே வடமொழியில் 'ரூபகம்' ஆயிற்று. உரு (வகம்) - ரு என்பது ரூ ஆவதை உயிரிடம் பெயர்தல் என்பர். இலது - லேது, உலகம் - லோகம், அரசன் - ராசன் ஆவதை ஒப்பிடுக. உருவகமும் உவமையே - உவமையின் வேறு ஒரு வடிவமே என்பது தொல்லாசான் கருத்து.

**உவமையில் பெருமை, சிறுமை இரண்டும்**
**மனக் குறிப்பை வெளிப்படுத்தும்**

**பெருமையும் சிறுமையும் சிறப்பின் தீராக்**
**குறிப்பின் வரூஉம் நெறிப்பா டுடைய. (1231)**

உவமை கூறுங்கால் மிகப் பெரிதாகவும் மிகச் சிறிதாகவும் - அதாவது கரைகடந்து உயர்த்தியும் சிறிதாக்கியும் கூறலாமா? கூறலாம். ஆனால் அவை பொதுமை பற்றிய சிறப்பினால் சொல்பவரது மனக்குறிப்பின் வழித் தோன்றும் நெறியையுடையன. 'கடலன்ன காமம்' என்றால் கடல் எவ்வளவு பெரிது. சொல்பவர் காமத்தின் மிகுதியைச் சுட்ட, உயர்வு நவிற்சிபோல், மிகப் பெரிய ஒன்றை உவமை சொல்கிறார். அவரது மனக்குறிப்பின்வழி எண்ணிப் பார்த்தால், எல்லையற்ற மனத் தவிப்பை உணர்த்த அவ்வுவமையே பயன்படுகிறது. குளம் அன்ன காமம் என்றால் சிறப்புமாகாது; சொல்வோர் உணர்வும் வெளிப்படாது. 'நூலிடை' என்றால் - பெண்ணின் இடையை நூலை வைத்து ஒப்பிட்டுப் பார்க்கலாமா? சொல்வோர் குறிப்பின்வழி பார்த்தால், அது சரியே. அவ்வாறு சொன்னால்தான் பெருமையும் நுண்மையும் மனக் கண்ணிற்குத் தோன்றும்.

உவமை கூறுங்கால் அவ் உவமைகள் மிகப் பெரிதாகவும் மிகச் சிறிதாகவும் அமையின் பொருந்தாதன போல் தோன்றும். 'கடலன்ன, காமம்' என்றால். கடல் எவ்வளவு பெரிது? 'மலை போன்ற துன்பம்' என்றால், மலைக்கவைக்கவில்லையா? 'நூலிடை' என்றால் மகளிர் இடை நூல்போலானால் என்னாகும்? இப்பெருமை சிறுமைகள், சொல்வார்தம் மனக் குறிப்பின்வழி நிகழ்வன. 'சிறப்பு'ப் பற்றி உவமை வருமென்பதை (1225) நினைவூட்டி, இவை கூறுபவர் தமது 'ஆசையோடு உவமித்தலின்', 'சிறப்புப் பற்றி வந்தன' என்பார் இளம்பூரணர். நெறிப்பாடுடைய - சில நெறிகளுக்கு உட்பட்டன. அவரவர் கண்டபடி உவமிக்கவியலாது. இதுவும் உலகம் ஒப்புமாறு, உலக வழக்கையும் இலக்கிய மரபையும் ஒட்டி வரவேண்டும்.

## உவம உருபுகள்

**அவைதாம்**
**அன்ன ஏய்ப்ப உறழ ஒப்ப**
**என்ன மான என்றவை எனாஅ**
**ஒன்ற ஒடுங்க ஒட்ட ஆங்க**
**என்ற வியப்ப என்றவை எனாஅ**
**எள்ள விழைய இறப்ப நிகர்ப்பக்**
**கள்ள கடுப்ப ஆங்கவை எனாஅக்**
**காய்ப்ப மதிப்ப தகைய மருள**
**மாற்ற மறுப்ப ஆங்கவை எனாஅப்**

**புல்ல பொருவ பொற்ப போல**
**வெல்ல வீழ ஆங்கவை எனாஅ**
**நாட நளிய நடுங்க நந்த**
**ஓட புரைய என்றவை எனாஅ**
**ஆறுஆறு அவையும் அன்ன பிறவும்**
**கூறுங் காலைப் பல்குறிப்பினவே. (1232)**

*உவம உருபுகள்*

தொல்காப்பியர் 36 உவம உருபுகளைச் சிறப்பாக எடுத்துக் கூறுகிறார். இவை அவர் காலத்துப் பெருவழக்கினவாக இருந்திருத்தல் வேண்டும். மேலும் அன்றைய இலக்கியப் பரப்பும் வளர்ச்சியும் முதிர்ச்சியும்கூட இதனால் அறியற் பாலன. ஏதோ ஒரு காரணம் பற்றி அவர் ஆறு ஆறாக, ஆறு வகைகள் கூறுகின்றார். 'அன்ன ஏய்ப்ப உறழ ஒப்ப என்ன மான' (6). ஒன்ற ஒடுங்க ஒட்ட ஆங்க என்ற வியப்ப (6). எள்ள விழைய இறப்ப நிகர்ப்ப கள்ள கடுப்ப (6). காய்ப்ப மதிப்ப தகைய மருள மாற்ற மறுப்ப (6). புல்ல பொருவ பொற்ப போல வெல்ல வீழ (6). நாட நளிய நடுங்க நந்த ஓட புரைய (6). இவை ஆறு x ஆறு = முப்பத்தாறு. அவையும் அவை போல்வன பிறவும் உவம உருபுகள். இவை உவமை கூறுங்கால் சொல்லாலும் பொருளாலும் பல குறிப்பினையுடையன.

இளம்பூரணரும் பேராசிரியரும் 'அன்ன பிறவும்' என்பதனால் கூறும் உவம உருபுகள் : நோக்க நேர அனைய அற்று இன் ஏந்து ஏர் சீர் கெழு செத்து ஏர்ப்ப ஆர துணைப்ப மலைய அமர.

இவை பெயரெச்சம் வினையெச்சம் வினைமுற்று இடைச்சொல் எனச் சொல்லால் பல குறிப்பினவாக வரும். கயல் வென்ற கண் - அழகால் வென்றுவிட்டது என்றும் பொருள். 'கிளை செத்து மொய்த்த தும்பி'. செத்து – கருதி எனவும் பொருள். இவை போல்வன பொருளால் பல குறிப்பின.

**தொல்காப்பியர் சிறப்பாக எடுத்துக் கூறும் உவம உருபுகள் 36:**

**அன்ன ஏய்ப்ப உறழ ஒப்ப**
**என்ன மான ...................... 6**
**ஒன்ற ஒடுங்க ஒட்ட ஆங்க**
**என்ற வியப்ப ...................... 6**
**எள்ள விழைய இறப்ப நிகர்ப்ப**
**கள்ள கடுப்ப ...................... 6**

காய்ப்ப மதிப்ப தகைய மருள

மாற்ற மறுப்ப ...................... 6

புல்ல பொருவ பொற்ப போல

வெல்ல வீழ ...................... 6

நாட நளிய நடுங்க நந்த

ஓட புரைய ...................... 6

ஆறாறு - முப்பத்தாறு. அன்ன பிறவும் - அவை போல்வன பிறபலவுள. பல் குறிப்பின - பலவகைப் பொருட்குறிப்பின; பலவகை ஆட்சிக் குறிப்பின.

இளம்பூரணர் 'அன்ன பிற' என்பதனால் குறிப்பிடும் உவம உருபுகள் நோக்க, நேர, அனைய, அற்று, இன், ஏந்து, ஏர், சீர், கெழு, செத்து, ஏர்ப்ப, ஆர.

பேராசிரியர் மேலும் தருவன: துணைப்ப, மலைய, அமர, ஐந்தாம் வேற்றுமைபற்றி வருவனவும் 'என' என்னும் எச்சங்கள் பற்றி வருவனவும் கொள்க என்று பேராசிரியர் குறிப்பிடுகிறார்.

இவை உவம உருபுகளேயாயினும் கூர்ந்து நோக்கின், துணை நிழற்பொருளும் தருவன. கயல் வென்ற கண் என்றால், அதனை அழகால் வென்ற எனவும் கருதலாம். (வெல்ல எனும் உருபு வென்ற என வந்தது.) கண்களைக் 'கிளை செத்து மொய்த்த தும்பி' எனும்போது வண்டு, தன் இனமென்று கருதி எனவும் கொள்ளலாம். இதுவே, பல் குறிப்பின எனப்பட்டது.

இனி உவம உருபுகள் பெயரெச்சத் தன்மையுடனும் (புலி போன்ற சாத்தன்), வினையெச்சம் போலவும் (புலி போலப் பாய்ந்தான்), வினைமுற்றுப் போலவும் (அவன் புலிபோலும்) இடைச்சொல்லாகவும் (புலி அன்ன மறவன்) வரும் என்றும் விளக்கப்படுகின்றன.

தொல்காப்பியர் குறிப்பிடும் இவ் உவம உருபுகளில் சில, அவர் காலத்தில் வழங்கி, பின்னர் மறைந்தன. 'நளிய, நந்த என்பன இக்காலத்து அரிய போலும். அவை வந்தவழிக் கண்டு கொள்க' என்பார், பேராசிரியர்.

இவை உவமை உருபுகள் எனப்படுவது, குறிப்பால் உணரப்படுவதேயாம். ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளுடையன. அவை உவமைத் தன்மை பெறுதலால், உவமை உருபு எனப்படுகின்றன.

'வேல் ஒன்று கண்'. ஒன்றுதல் - ஒற்றுமைப்படுதல். வேலுடன் ஒற்றுமைப் படும் கண் என்பது, வேல் போலும் கண் என உணரப்படுகிறது. 'வேயொடு நாடிய தோள்' என்றால், வேய்போல ஆக விரும்பியதோள் என்றாகும். நாடிய - என்பது கருத்தால் உவமை உருவாகிறது. 'மணி நிறம் மாற்றிய மாமேனி' - என்றால் மணியின் நிறத்திற்கு மாற்றாக அமைந்த மேனி, அதாவது மணி போன்ற மேனி.

போல, அன்ன என்றாற்போல நேரே உவமை உருபாக வருவன ஒருவகை. எள்ள, விழைய என்றாற்போலக் கருத்தால் உவம உருபெனக் கொள்ளப்படுவன ஒருவகை. அதனால் இது மேன்மேலும் விரிந்து செல்கின்றது.

கயல் போலும் கண் - நேரே சொல்வது. கயலை வென்ற கண், கயலும் விழையும் கண் என்றாற் போல்வன, கருத்தால் உவமையாகின்றன.

**அவற்றுள் வினைஉவம உருபுகள்**

**அன்ன ஆங்க மான இறப்ப**
**என்ன உறழ தகைய நோக்கொடு**
**கண்ணிய எட்டும் வினைப்பால் உவமம். (1233)**

*வினை உவம உருபுகள்*

வினை (செயல்) எனப்படும் பொதுமைக்குரிய உவம உருபுகள் எட்டு.

அன்ன ஆங்க மான இறப்ப
என்ன உறழ தகைய நோக்கு என்பன

'கொன்றன்ன (கொலை செய்தாற் போன்ற) இன்னா செயினும்' - அன்ன வினை உவம உருபு.

தொல்காப்பியர் உவம உருபுகளைத் தொகுத்தது மட்டுமன்றி, இன்ன இன்ன உருபுகள் இந்தப் பொதுப் பண்புவகைக்கு உரியனவாகும் எனக் குறித்திருப்பது வியப்பளிக்கிறது. 'பாடலுள் பயின்றவை நாடுங் காலை', 'நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறே' என்றெல்லாம் கூறும் அவர், எத்துணை இலக்கியப் பயிற்சி இருந்திருந்தால் இங்ஙனம் பகுத்திருப்பார் என்று எண்ணத் தோன்றுகிறது.

'வினை' எனும் பொதுத்தன்மை வகைக்குரியவை எட்டு உருபுகள் :

அன்ன ஆங்க மான இறப்ப
என்ன உறழ தகைய நோக்கு

இவற்றுள் நோக்கு, முன்னைய பொது நூற்பாவில் கூறப்படாதது. 'ஞாயிறு கடற்கண் டாங்கு', முருகன் மயில் மீது தோன்றுவது. ஆங்கு - வினையுவமம் ஆகிறது.

**அவற்றுள் அன்ன என் உருபு**

**அன்ன என் கிளவி பிறவொடும் சிவணும். (1234)**

'அன்ன' - உவம உருபாகிய இடைச்சொல் பிற பொதுமையிலும் இடம் பெறும். 'மழை அன்ன கொடை' - பயனுவமம்.

'அன்ன' - உருபு பிற பயன், வடிவம், வண்ணத்துடனும் வரும். 'மழை அன்ன கொடை' - பயனுவமம்.

**பயன் உவம உருபுகள்**

**எள்ள விழையப் புல்லப் பொருவக்**
**கள்ள மதிப்ப வெல்ல வீழ**
**என்றாங்கு எட்டே பயனிலை உவமம். (1235)**

*பயன் உவம உருபுகள்*

பயன் பற்றிய உவம உருபுகள்:

எள்ள விழைய புல்ல பொருவ
கள்ள மதிப்ப வெல்ல வீழ.

விண் பொரு புகழ் - விண்ணை ஒத்த புகழ். பயனுவம உருபு - பொரு (பொருவ).

'பயன்' உவமம் எட்டு: என்ன விழைய புல்ல பொருவ கள்ள மதிப்ப வெல்ல வீழ. (மழை விழை தடக்கை - பயன் உவமம். விழை - உருபு.)

**மெய் (வடிவ) உவம உருபுகள்**

**கடுப்ப ஏய்ப்ப மருளப் புரைய**
**ஒட்ட ஒடுங்க ஓட நிகர்ப்ப என்று**
**அப்பால் எட்டே மெய்ப்பால் உவமம். (1236)**

*மெய்வடிவ உவம உருபுகள்*

வடிவம் பற்றிய உவம உருபுகள்:

கடுப்ப ஏய்ப்ப மருள புரைய
ஒட்ட ஒடுங்க ஓட நிகர்ப்ப

வேய் மருள் பணைத்தோள் - மூங்கில் போன்ற பருத்த தோள். மருள் - வடிவ உவம உருபு.

**வடிவ உவம உருபுகள்:** கடுப்ப ஏய்ப்ப மருள புரைய ஒட்ட ஒடுங்க ஓட நிகர்ப்ப. (வேய் - மூங்கில்) புரை மென் தோள். புரை - உருபு.

### உரு (வண்ண) உவம உருபுகள்

**போல மறுப்ப ஒப்பக் காய்த்த**
**நேர வியப்ப நளிய நந்த என்று**
**ஒத்து வரு கிளவி உருவின் உவமம். (1237)**

*வண்ண உவம உருபுகள் (உருஉவமம்)*

வண்ணம் பற்றியன.

போல மறுப்ப ஒப்ப காய்த்த
நேர வியப்ப நளிய நந்த

'நேர' பொதுப்பட்டியலில் இல்லாதது. அன்னபிறவும் என்பதால் வந்தது. பொன் போல நிறமுடையாள் - நிறம் பற்றியது.

**வண்ண உவம உருபுகள்:** போல மறுப்ப ஒப்ப காய்த்த நேர வியப்ப நளிய நந்த. ஒத்து வரு கிளவி - உவமை (தண்தளிர் வியப்பத் தகை பெறும் மேனி. வியப்ப - உருபு).

### உருபுகளின் பொருத்தமும் பொருளும்

**தத்தம் மரபின் தோன்றுமன் பொருளே. (1238)**

வினை பயன் மெய் உருவிற்கு, இவ்விவ்வுருபு வருமென்ற இது தொல்காப்பியர் காலத்தில் பெருவழக்காக இருந்தவை. பின்னர்ச் சங்க காலத்தில் இவற்றுட் பல வேறு பொதுமைக்கு மாறி வந்ததை இளம்பூரணர் எடுத்துக்காட்டுகிறார். தத்தம் மரபு பற்றி, அதாவது அவ்வவ் உருபுக்குரிய பொருளை வைத்து, வெவ்வேறு விதமாக மாறியும் வரும். இதைப் பேராசிரியர் மேலும் தெளிவு படுத்துவார். 'விழைய' என்றால் விரும்ப என்றும், 'புல்ல' என்றால் ஒன்றுபட்டுப் பொருந்த என்றும் மதிப்ப என்றால் உயர்த்தி எண்ண என்றும் கள்ள

என்றால் கவர்ந்து கொள்ள (கதுவ) என்றும் இவ்வாறு இவ் உவம உருபுகளுக்குத் தனிப் பொருள்களும் உண்டு. அவை குறிப்பால் பெறப்படும். அப்பொருள் அடிப்படையிலும் இவை பயன்படுத்தப்படும். 'மா வென்ற மடநோக்கின்' என்றால் மாவடுவைப் போன்ற என்பது மட்டுமன்றி, அதை வென்ற - அதனினும் சிறந்த கண்கள் எனவும் பொருள்படும். மாரி வீழ் இருங்கூந்தல் என்றால் வீழ் உவம உருபு மட்டுமாகாது. மேகம் விழுவது போல் - தொங்குவதுபோல் கீழே தாழும் கரிய கூந்தல் எனவும் குறிப்புப் பொருளொன்றும் தோன்றும். வீழ் என்பதற்கு விழைவு, விருப்பம் என்றும் பொருளுண்டு. கார் முகிலும் இதுபோன்ற கருப்பும் செறிவும் நீட்சியும் தனக்கும் வேண்டுமென விரும்பும் கூந்தலெனவும் பொருள் கொள்ளலாம். இதையே தத்தம் மரபிலும் பொருள் தோன்றும், எனப் பேராசிரியம் விளக்குகிறது.

தத்தம் மரபு - வினை பயன் மெய் (வடிவம்), உரு (நிறம், வண்ணம்) என ஒவ்வொன்றற்கும் அவ்வவ் உருபுகள் பொருந்தி வருவது, அவை இலக்கியங்களில் எடுத்தாளப்பட்ட மரபு பற்றியதாகும். உருபுகளுக்கும் நிழற் பொருளிருத்தலால், இவை தொல்காப்பியர் காலத்து, அவ்வவற்றிற்கு மாறாது இருந்தனவேயாம். 'புலி பாய்ந்தாங்குப் பாய்ந்தான்' எனலாம். இது வினையுவமம். 'தளிராங்குச் சிவந்த மேனி' எனில், உரு உவமத்திற்கு ஆங்க உருபு பொருந்தவில்லை. எனினும் தொல்காப்பியர் காலத்திற்குப் பிறகு இவை சில மாறிமாறி வந்தனவெனச் சங்கப்பாடல்களை உதாரணம் காட்டியுள்ளனர். மேலும் வீழ, மதிப்ப, வெல்ல, கள்ள என்றால் அவ்வச் சொற்பொருளும் குறிப்பினால் கொள்ளப்படுதலுண்டு. அவ்வுருபின் குறிப்புப் பொருள்தான் காரணம். இதனையே, உருபுகள் தத்தம் மரபில் பொருள் தரும் என்றார் ஆசிரியர்.

## உவமப் பொருளை உணரும் நெறிமுறைகள்
## மெய்ப்பாடு எட்டின் அடிப்படையில் உவமை அமைதல்

**நாலிரண் டாகும் பாலுமா ருண்டே. (1239)**

உவமைகள் நகை அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்ற மெய்ப்பாடு எட்டன் அடிப்படையிலும் தோன்றும். உவகை - காதல் அடிப்படையில் காதலன் அழகிய உவமைகளைக் கூறிக் காதலை வெளிப்படுத்துவான். அவலம் ஒப்புமைப்படுத்தப் படும்போது, அழுகை கூடுதலாகும். அதனால் அது ஒப்பு, ஒப்பாரி எனப்பட்டது. 'என் உயிரனையாள்' என்பது உவகைச் சுவையில் பிறப்பது.

நால்இரண்டாகும் - எட்டு மெய்ப்பாடுகளுக்கும் உரியனவாக, இவ் உவமைகளைப் பகுத்துணரவும் வாய்ப்புண்டு. நகை உவமை, அவல உவமை, இளிவரல் உவமை என இவ்வாறு கொள்ள வேண்டும்.

**பெருமை சிறுமை முதலியன மெய்ப்பாட்டு அடிப்படையின**

**பெருமையும் சிறுமையும் மெய்ப்பாடு எட்டன்**
**வழி மருங்கு அறியத் தோன்றும் என்ப. (1240)**

சிலசமயம் காதலாலோ, சினத்தாலோ, பிறவற்றாலோ மிக உயர்வு நவிற்சிபோல் உவமை கூறப்படும். அல்லது மிக நுண்மை அல்லது சிறுமை பற்றியும் உவமை தோன்றும். அது முற்கூறிய எட்டுவகை மெய்ப்பாட்டைத் தோற்றுவிக்க வருபவை. அம்மெய்ப்பாடுகளால் தோன்றுபவையுமாம். நீ செய்த உதவி கடலைப்போல் பெரிது, நாய் குரைப்பது போல் கத்தித் தொலைக்கின்றான், கழுதை கத்துவதுபோல் உச்சத் தொனியில் கத்துவது இசையாகுமா? இவை உள்ளத்துணர்வுகள் மெய்ப்பாடுகளாக வெளிப்படுவதை உணர்த்தும் உவமைகள்.

முன்னர் பெருமை சிறுமை என்பன உவமை கூறுவோரது ஆசை காரணமாகச் சிறப்பித்துச் சொல்லப்படும் என்றார் (1231). 'கடல் அன்ன காமம்' என்பது பெருமை அடிப்படையுடையது. அது காமம் காரணமாக எழுந்த அவலச் சுவை பற்றிச் சொல்லப்பட்ட உவமை. 'நூல் போன்ற இடை' என்பது தலைவன் தன் காதல் மிகுதியால் சொல்லும் 'சிறுமை' (நுண்மை) பற்றியது. உவகைச் சுவை சார்ந்தது. எனவே இவை போல்வன எட்டு மெய்ப்பாடுகளும் விளங்கும்படி கூறப்படுவனவாம். முன் சூத்திரத்தில் கூறியவாறு எண்வகை மெய்ப்பாடும் பற்றி எட்டுவகை உவமை கூறப்படும் என்பது புலனாகிறது. உள்ளத்து எழும் மனக்குறிப்பு வேறுபாடுகள் இதற்குக் காரணம் ஆகின்றன.

**உவமையால் உவமிக்கப்படும் பொருளின் தன்மைகளை உய்த்தறிதல்**

**உவமப் பொருளின் உற்றது உணரும்**
**தெளிமருங்கு உளவே திறத்திய லான. (1241)**

உவமத்தைக் கொண்டு அதனால் உணரப்படும் பொருளுக்குப் பொருந்தியனவற்றை, அவற்றின் திறமறிந்து உணரக்கூடியனவும் பலவுள்ளன. வட மொழியாளர் எனத் தம்மைக் கருதிக்கொண்டு, தம்மைத் தமிழுக்கு அயன்மைப் படுத்திக்கொண்டு, தமிழ் மண்ணில் பிறந்து பரம்பரையாய் வாழ்ந்தும் இன்றும்

தமிழுக்கு எதிராகவும் வடமொழிக்கும் தமிழல்லாத, பிறமொழிகளுக்கும் மட்டுமே ஆதரவாகவும் உடன்பிறந்தே கொல்லும் நோய்போல், மிகச் சிலர் வாழ்ந்து வருகின்றனர். பாவேந்தர் பாரதிதாசன், "நமையெல்லாம் வடமொழி தூக்கிடும் தாம்பு, நம் உரிமைதனைக் கடித்தது அப்பாம்பு" எனப் பாடியுள்ளார். இதில் நாம் உணர வேண்டிய எத்தனையோ செய்திகள், பல நூல்களாக விரிக்கத்தக்கவை அடங்கியுள்ளன. காலங்காலமாகத் தமிழிலிருந்த அனைத்தையும் சமற்கிருதமயமாக்கிய வரலாறு அது. இதுவே உவமத்தைக் கொண்டு, பொருளை அதன் திறமெலாம் அறிந்து தெளிவதாகும்.

உவமப் பொருளின் - உவமையால் ஒப்புமைப் படுத்தப்பட்ட பொருளின் (உவமேயத்தின்) உற்றது உணரும் - அவ்வாறு உவமிக்கும் பொருளுக்கு உற்றது அனைத்தையும், திறத்தியலான் - ஆய்ந்து அறியும் நெறிமுறையால். தெளி மருங்கு உள - தெளியுமிடங்களும் உள்ளன. இது அகப்பாடல்களில் வரும் உவமைகள் எட்டுவகை மெய்ப்பாடுகளுடனும், பிற குறிப்புப் பொருள்களுடனும் வருவதை அறிய வேண்டும் என விளக்குகிறது. தலைவி, 'களவு உடம்படுநர் போலத் தலை கவிழ்ந்து, நிலம் கிளையா நின்றாள்' என்னும்போது, கையும் களவுமாக அகப்பட்டவர் நிலைமை எல்லாம், தலைவிபால் நிகழ்தலை உணர்த்துகிறது. உவமைகள் இவ்வாறு உவமேயமாம் பொருளின் நிலைமைகளைத் தெளிவுபட உய்த்துணர வைப்பனவாதலை இந்நூற்பா விளக்குகிறது.

**அவ்வாறு உய்த்தறியும்போது, உலக வழக்கினை அறிந்து அதன்படி உணரவேண்டும்**

**உவமப் பொருளை உணருங்காலை**
**மரீஇய மரபின் வழக்கொடு படுமே. (1242)**

அங்ஙனம் உவமத்தின் பொருளை - உவமத்தால் உவமிக்கப்பட்ட பொருளின் திறத்தை உணரும்போது, அது நிலைபெறப் பொருந்தி வந்த வரலாற்று மரபின்படி, வழங்கிவந்த வழக்கின்பாற்படும். 'இது நனைத்துச் சுமப்பது போன்ற காரியம்' என்றால், அது பற்றிய உலக வழக்கு அனுபவம் உள்ளவர்க்குத் தெளிவாக விளங்கும். 'தேட்கடுப்பன்ன நாட்படு தேறல்' என்றால் தேள் கொட்டிக்கடுப்பதும் நாட்பட ஊறவைத்த மதுவின் தெளிவை உண்டதால் ஏற்படும் கடுப்பும் பற்றிய உலக வழக்கைத் தெரிந்திருக்க வேண்டும். முன் உலக வழக்கு அனுபவம் உள்ளவர்க்கே புலனாவன மிகப் பல உவமைகளாகும்.

உவப் பொருள்ளை - மேற்கூறியவாறு உவமத்தால், அதனால் உவமிக்கப்படும் பொருளை. 'உணருங்காலை' - அதன் இயல்புகள் பலவற்றையும் உய்த்துணரும்போது நெடுங்காலமாக மருவி வழங்கிவரும் வழக்கை வைத்தே உணர வேண்டும். 'களவு உடம்பட்ட கள்வர்போலத் தலைவி நின்றாள்' என்றால், அங்ஙனம் கையும் களவுமாக அகப்பட்டவர் நிலையை, உலக வழக்கிற்கண்டு அறிந்தவர்கள், அவ்வாறு நிற்றலை உணரவேண்டுமே தவிர, தாம் வேண்டியவாறு பொருள் கொள்ளுதல் கூடாது.

**உவமை இரட்டைக் கிளவியாயின் 'பொருளும்' அவ்வாறே அமையும்**

**இரட்டைக் கிளவி இரட்டை வழித்தே. (1243)**

உவமையை இரண்டு சொற்கள் இணைந்துவரும் தொடராகச் சொன்னால் உவமிக்கப்படும் பொருளையும் அவ்வாறே இரண்டு சொற்கள் சேர்ந்த இணையாகச் சொல்லவேண்டும். 'விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோடு ஏனை யவர்' (410). 'துனியும் புலவியும் இல்லாயின் காமம் கனியும் கருக்காயும் அற்று' (1306). இனி 'இரட்டைக் கிளவி' என்பதனை, இருபொருள் படக் கூறுங்கூற்று எனலும் பொருந்தும். உள்ளுறை உவமம் போல, வெளிப்படையான ஒரு பொருளும் அதனுள் பொருந்திய குறிப்புப் பொருளும் என இரு நெறிகளை உடையது என்று அது பொருள்படும்.

இரட்டைக் கிளவி - இரண்டு சொற்கள் இணைந்து வரும் உவமை. இரட்டை வழித்து - அவ்வாறே இரண்டு சொற்கள் இணைந்துவரும் பொருளொடு பொருந்திவரும். 'விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோடு ஏனையவர்' (410) எனும் குறளில் விலங்கும் மக்களும் என்ற இரட்டைச் சொற்கள், இலங்கு நூல் கற்றாரோடு ஏனையவர் எனும் இரட்டைப் பொருள்களுக்கு உவமையாயின. இவை இடைக்கால உரையாசிரியர்களின் விளக்கம். அதனினும் பொருள் கொள்ளும் முறைமையில், உள்ளுறை உவமப் பொருளைக் கொள்ளும் முறை பற்றியது இது என்பதே. பொருத்தமாகப் படுகிறது. கிளவி - கூற்று. இரட்டைக் கிளவி - இரண்டு பொருள்படும்படி அமைந்த கூற்று. இரட்டை வழித்து - வெளிப்படத் தெரியும் ஒரு பொருளும் உள்ளுறை பொருளும் என்ற அவ்விரண்டின்வழி உணரப்படும்.

### உள்ளுறை உவமத்தினை அறியும் முறை

**பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி**
**முன்ன மரபின் கூறுங் காலைத்**
**துணிவொடு வரூஉம் துணிவினோர் கொளினே. (1244)**

*உள்ளுறை உவமம்*

உள்ளுறை உவமப் பொருளை, அது அகப் பாடலில் அமைந்து கிடப்பதை அறியவழி: பிறவற்றோடு பொருந்தாது, பாடலில் வரும் கருப்பொருள்களாம் உயிரினங்களின் பிறப்பியல்பொடு நோக்கவேண்டும். 'முன்னம்' எனப்படும் இலக்கிய மரபுப்படி அது கூறப்பெற்றிருக்கும். அங்ஙனம் கூறப்பட்டுள்ள அதை, அவ்வாறு ஐயமற அறியவல்ல திறனாளிகள் அல்லது கேட்பவர்கள் தெளிவு பெற அறிவரேல், அவ்வுட் பொருளை அறிய இயலும். முன்னம் - குறிப்பால் உணர்த்துவது. தலைவனை வண்டு, எருமை, வாளைமீன், நீர்நாய் போன்றவற்றோடும் தலைவியை முல்லை, நெல், நெய்தல்பூ போன்றவற்றோடும் பரத்தையைத் தாமரை, கரும்பு, மாங்கனி போன்றவற்றோடும் பொருத்தி உள்ளுறை உவமம் கூறப்படும். இது 'பிறப்பொடு நோக்கி, முன்ன மரபில்' கூறப்படுகிறது. தலைவனை வண்டு என்றால் அவனுக்கும் வண்டுக்கும் உள்ள 'பிறப்பொடு' தோன்றியது போன்ற பிறவி ஒற்றுமை இயல்புகளை மனங்கொண்டே அவ்வாறு கூறப்படுகிறது. இதனை, அவ்வொன்றுபட்ட இயல்பை வைத்துத் துணிய வேண்டும்.

அகத்திணைக்கே உரியதெனக் கூறப்பட்ட உள்ளுறை உவமத்தின் இலக்கணமும் அதன் பொதுத் தன்மைகளாலான வகைமையும் விளக்கப்படுகின்றன. (அகத்திணையியல் 992, 993, 994, 995, பொருளியல் 1188, 1189, 1190, 1191 ஆகியவற்றின் தொடர்ச்சி இது.)

முன்ன மரபில் - சொல்வான் உட்கருத்தொடு பொருந்த இது கூறப்படும். முன்னம் - குறிப்பு. உட்கருத்து. பிறிதொடு படாது - அவரவர் நினைத்தபடி வேறுபட்ட கருத்துடன் பொருந்தாது. பிறப்பொடு நோக்கி - அவ்வுவமையைத் தோன்றிய இடத்தொடு சார்த்தி. துணிவொடு வரூஉம் - துணிந்து இதற்கு இதுவே உட்பொருளென உணரப்படும். எப்போது? துணிவினோர் கொளின் - அங்ஙனம் உவமையின் உள்ளுறையும் பொருளை உலக வழக்காலும் இலக்கிய மரபாலும் அறிந்து, துணியக் கூடியவர்கள் பொருள் கொள்ளும்போது.

எனவே, உள்ளுறை உவமப் பொருளை உணர இரண்டு தகுதிகள் வேண்டும். ஒன்று: அது தோன்றிய கருப் பொருளின் பிறப்பியல்பு தெரியவேண்டும். இரண்டு : வழக்கும் மரபும் பற்றிய தெளிவு வேண்டும். துணிவுடைமை - தெளிவுடைமை. பிறப்பொடு நோக்குதல் - தலைவனை வண்டு, எருமை, வாளைமீன், நீர் நாய் போன்றவற்றோடும் தலைவியை நெல், நெய்தல் பூ போன்றவற்றோடும் பரத்தையைத் தாமரை, கரும்பு, மாங்கனி போன்றவற்றோடும் பொருத்தி உள்ளுறை உவமை கூறுதல். அவை அம் மாந்தர்தம் இயல்பு நோக்கிக் கூறப்பட்டு, படிமமாக ஆகியவை. துணிவினோர் தாம் இவற்றைத் துணிதல் சாலும். அதாவது உலக இயல்பும் இலக்கிய மரபும் அறிந்தவர்களே உள்ளுறை பொருளை உணர முடியும்.

**உள்ளுறை அல்லது உவமப்போலி ஐந்து வகைப்படும்**

**உவமப் போலி ஐந்தென மொழிப.** (1245)

உள்ளுறை என்பது வெளியே சொல்லப்பட்ட ஒன்றை வைத்து, உட்பொருளை அறிவது. அவ் உள்ளுறை ஐந்து வகைப்படும் என்றார் முன்பு (1188). உள்ளுறை உவமையும் ஐந்து வகைப்படும் என்கிறார். உள்ளுறை உவமையை, உவமப் போலி என்பது, அது உவமை போல் ஒன்றுக்கொன்று பொருத்தி, உட்பொருளை அறியும் ஒருபுடை ஒப்புமையுடைமையினாலேதான்.

உள்ளுறை உவமை உட்பொருளுடையது. வெளியே சொல்லப்பட்ட தொடர்களால், உட்பொதிந்ததை அறிய வைப்பது. இதனை 'உவமை' என்றதன் அடிப்படை, ஒன்றற்கு ஒன்று இயைத்துப் பார்க்கும் முறையினால் மட்டுமே. எனவே இது உவமப்போலி எனப்பட்டது. உவமத்தைப் போன்றது; அவ்வளவே. இது ஐந்து வகைப்படும்.

**பொதுமைகளால் அமையும் உள்ளுறை உவமப்போலி வகைகள்**

**தவலருஞ் சிறப்பின் அத்தன்மை நாடின்**
**வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்**
**பிறப்பினும் வரூஉம் திறத்தியல் என்ப.** (1246)

குறையற்ற சிறப்பினையுடைய அதன் தன்மையை ஆராய்ந்தால், உள்ளுறை உவமை கூறுதற்குரிய பொதுமைகள் ஐந்தாகும். வினை, பயன், உறுப்பு (மெய், உடல்), உரு (நிறம்,குணம்), பிறப்பு (முன்னே சுட்டிய பிறப்பியல்பு).

இவற்றை முறையே வினையுவமப் போலி, பயனுவமப் போலி, உறுப்பு (மெய்) உவமப் போலி, உருவுவமப்போலி, பிறப்புவமப் போலி எனல் வேண்டும். 'கரை சேர் வேழம் கரும்பிற்பூக்கும் துறை கேழ் ஊரன்' (ஐங். 12) என்றால் வேழமாகிய பொய்க் கரும்பையும் நல்ல கரும்பையும் ஒருங்கேவுடைய ஊரன் என்றாகும். அதாவது தலைவன் பரத்தையையும் தலைவியையும் இன்ப நுகர்ச்சியில் சமமாகக் கருதுவதை இது சுட்டிக்காட்டுவதால் 'பயனுவமப் போலி' என்பர்.

'கரும்புநடு பாத்தியில் கலித்த தாமரை, சுரும்பு பசி களையும் பெரும்புனலூர' (ஐங். 65) என்றால், காதற்பரத்தை. இற்பரத்தை போல்வன கரும்பும் தாமரையும்; சுரும்பு - தலைவன்; தலைவி தான்மட்டுமன்றி இவையும் சுரும்பின் பசி தீர்க்கும் என்று தலைவன்து ஒழுக்கக் கேட்டைக் குறிப்பதால் இது வினையுவமப் போலி என்பார், பேராசிரியர்.

'பொய்கைப் பள்ளிப் புலவுநாறு நீர்நாய், வாளை நாளிரை பெறூஉம் ஊர' (ஐங். 63) என்றது, நீர்நாய் புலவுநாறும் வாளை மீனைத் தின்று அத்தீய நாற்றத்தையே மேன்மேலும் விரும்புவதுபோலத் தலைவனும் தனது உயர்ந்த குலத்திற்கேற்ப ஒழுகாது பரத்தையரை நாடி, இழிவுபடுதலையே மேன்மேலும் விரும்புவதைக் குறிக்கிறது. இதைப் பிறப்புவமப் போலி என்பார் பேராசிரியர். இவ்வாறே பிறவற்றையும் கொள்ளவேண்டும் என்பதைப் பேராசிரியர் விளக்கவுரையால் நன்கு அறியலாம்.

உள்ளுறை அகத்திணைக்கே உரியது. இவ்வுள்ளுறையும் உவமமும் திணையை உணர்த்திச் சிறப்பிக்கும் என முன்னரும் கூறப்பட்டது (992). தவல் அரும் சிறப்பு - குறையற்ற அரிய சிறப்பு. அதன் தன்மையை ஆராய்ந்தால், ஐந்து வகையாக வரும் திறனுடையது அது. அவை வினை, பயன், உறுப்பு (மெய்), உரு (நிறமும் குணமும்), பிறப்பு (வண்டு, வாளைமீன் போலத் தனிப் பிறப்பியல்புடையவை.)

கரும்புநடு பாத்திக் கலித்த தாமரை
சுரும்புபசி களையும் பெரும்புனல் ஊர (ஐங். 65)

இது தலைவிகூற்று. 'புதல்வனை ஈன்ற எம்மைத் தழுவாதே, அது நின் மார்பிலணிந்த சந்தனம் முதலியவற்றைச் சிதைத்து விடும்' என்று அவள் ஊடல் கொள்ளுமிடம் இது. கரும்பு - காமக்கிழத்தி. அது விளையுமிடத்தில் தாமரையும் இடையே பூத்தது. தாமரை - பரத்தை. பசிகளைதல், தலைவன் காமக் கிழத்தியுடன் மட்டுமல்லாது பிற இளம் பரத்தையருடனும் இன்பம் நுகர்வதைச் சுட்டுகிறது. இத்தகையவனுக்கு

ஒரு மகனையும் பெற்று வாழ்கிறேனே என வருந்துகிறாள் தலைவி. இதை 'வினையுவமப் போலி' என்பார், பேராசிரியர். அதாவது 'வினை' (செயல்) பொதுண்மப் பண்பாக அமைந்த உள்ளுறை உவமை இது. பிறப்புவமைப்போலி என்பது, பிறத்த குடிவழிக் குலத் தன்மையைச் சுட்டிச்சொல்வது. இவை ஐந்தனுக்கும் பேராசிரியர் உதாரணங்கள் தருகின்றார்.

## தலைவியும் தோழியும் உவமை கூறுவதற்குரிய எல்லைகள்

**கிழவி சொல்லின் அளவறி கிளவி**
**தோழிக்காயின் நிலம் பெயர்ந்து உரையாது. (1247)**

*அகமாந்தர் உவமை கூறுதற்குரிய இடச்சூழல்கள்*

தலைவி உவமை கூறினால், அவள் அறிந்த அளவிலான இடச்சூழல் அளவுக்குள்ளேயே, காணப்படும் பொருள்களை வைத்தும், அவளது அறிவு அனுபவ எல்லைக்குட்பட்டும் கூறுவாள்.

தோழி உவமை கூறினால் அவள் வாழும் குறிஞ்சி, முல்லை முதலான நில எல்லைகளுக்குட்பட்ட கருப்பொருள்களை வைத்தே கூறுவாள். நிலம் பெயர்ந்து, வேற்றுநிலப் பொருள்களை வைத்து உவமை கூறுவதாக அமையாது. அதாவது பாடல்களில் அவரவர் உவமை கூறுவதாகப் பாடும் புலவன் இந்த எல்லைகளை மீறாது அவர்கள் உவமை கூறுவதாகப் புனைய வேண்டுமென்பது கருத்து.

கிழவி - தலைவி. அவள் அறி கிளவி - தனது நிலத்துள்ளும் தானறிந்த இட எல்லைவரையே அல்லது தானறிந்த கருப்பொருள்களால் மட்டுமே உவமை கூறுவாள். உவமைகூற அதுபற்றிய அனுபவம் வேண்டுமல்லவா? தோழி தன் நிலம் பற்றி அனைத்தும் அறிந்தவள். தனது நிலம் தவிர்த்துப் பிற நிலத்துக்கருப்பொருள்களைக் கொண்டு உவமை கூறாள். அவ்வாறு கூறியதாகப் பாட இயலாது; பாடக்கூடாது. பாடின் வழுவாகிவிடும்.

குறிஞ்சி நிலத் தலைவி, அந் நிலத்துள் தான் அறிந்தவை எவையோ அவற்றின் துணை கொண்டே உவமையோ, உவமப்போலியோ கூறுவாள். குறிஞ்சித் தோழி அந்நிலத்துக் கருப்பொருள்கள் எதன் அடிப்படையிலும் உவமை கூறுவாள்.

### தலைவனும் பிறரும் உவமை கூறுதற்குரிய எல்லைகள்

**கிழவோற் காயின் உரனொடு கிளக்கும்**
**ஏனோர்க் கெல்லாம் இடம்வரை வின்றே. (1248)**

தலைவன் உவமை கூறுவதாகப் புனையும்போது, அவனுக்கு நில எல்லைகள் இல்லை. அதாவது அறிவுடைமை, அனுபவங்கட்கு ஏற்ப உவமை கூறுவான். பிற அக மாந்தர் அனைவருக்கும் இவ்வாறு இடவரையறை ஏதுமில்லை. அவரவர் தாம்தாம் அறியுமாற்றால் உவமை கூறுவர்.

தலைவன் உவமை கூறுவதாகப் பாடல் புனையும்போது, அவனது அறிவுடைமைக்கு ஏற்பச் சொல்லப்படும். உரன் - அறிவுடைமை. ஏனைய பாங்கன், பாணன் முதலானோர்க்கு எல்லை வரையறுக்கப்படவில்லை. அவர்கள் தாங்கள் அறியுமாற்றால் கூறப்பெறுவர்.

### இவ்வுவமைகளில் இனிமைதரும் கூற்றும் வருத்தந்தரும் கூற்றும் வெளிப்படும்

**இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும்**
**உவம மருங்கின் தோன்றும் என்ப. (1249)**

உவமைகளைக் கூறுங்கால், அவை இனிமைதரும் மகிழ்ச்சிச் சூழல்களைத் தருவனவாகவோ, வருத்தத்தைத் தரும் பிரிவுபற்றிய புலவித் தொடர்பான சூழல்களாகவோ அமையும். அகப்பாடல்களில் இன்பச் சூழலும் துன்பச் சூழலுமே உவமை தோன்றும் இடங்களாகும்.

உவம மருங்கில் - உள்ளுறை உவமம், உவமை போன்றவற்றில் இனிதுறு கிளவி - சில கூற்றுக்கள் மகிழ்ச்சியுடன் பொருந்தி இனிமை பயக்கும் கூற்றுக்களாயிருக்கும். வேறு சில மனவருத்தத்தைப் புலப்படுத்தும் கூற்றுக்களாக இருக்கும். துனி - வருத்தம், ஊடல், மன வேறுபாட்டுச் சூழல்.

### தலைவி உள்ளுறை உவமம் கூறுதற்குரிய இடம்

**கிழவோட்கு உவமம் ஈரிடத்து உரித்தே. (1250)**

தலைவி முன்னர்ச் சுட்டிய இனிதுறு கிளவி, துனியுறு கிளவி ஆகிய இரண்டு இடங்களிலும் உவமை அல்லது உவமப்போலி கூறுவாள்.

தலைவி முன்னர்ச் சுட்டிய இரண்டு இடங்களிலும் அதாவது இனிதுறு கிளவி (மகிழ்ச்சிச் சூழல்), துனியுறு கிளவி (வருத்தச் சூழல்) ஆகியவற்றில் உவமை அல்லது உள்ளுறை உவமம் கூறுவாள்.

## தலைமகன் உள்ளுறை உவமம் கூறுதற்குரிய இடம்

**கிழவோற் காயின் இடம்வரை வின்றே. (1251)**

தலைவன் உவமப்போலி (உள்ளுறை உவமம்) கூறுதற்கு, இன்ன சூழல் என்ற வரையறை இல்லை.

இடம் வரைவு இன்று - இன்ன இடத்தில் உள்ளுறை உவமை கூற வேண்டுமென்ற வரையறை இல்லை.

## தோழியும் செவிலியும் உள்ளுறை உவமம் கூறுதற்குரிய இடம்

**தோழியும் செவிலியும் பொருந்துவழி நோக்கிக்**
**கூறுதற் குரியர் கொள்வழி யான. (1252)**

தோழியும் செவிலியும் உவமப் போலியைப் பொருந்தும் இடம் நோக்கி, கேட்போர் நன்கு உணரும்படி கூறுதற்குரியர்.

பொருந்துவழி - காலமும் சூழலும் பொருந்தும் இடம். கொள்வழியான - கேட்போர் உய்த்துணர்ந்து கொள்ளும்படி.

## உவமையை வெவ்வேறு முறைகளில் கூறுதல்

**வேறுபட வந்த உவமத் தோற்றம்**
**கூறிய மருங்கின் கொள்வழிக் கொளாஅல். (1253)**

*உவமைகளை வெவ்வேறு விதமாகக் கூறுதல்*

நடையமைப்பிலும் சொல்லும் விதத்திலும் பல்வேறு வகைகளாக உவமைகள் தோன்றும். உவமையைப் பொருளாக்கிப் பொருளை உவமையாக்கிக் கூறுதல், இரண்டை அடுக்கிக் கூறி ஒன்றை உவமித்து, மற்றதை உவமிக்காது உணரும்படி விடுதல் (ஏகதேச உருவகம்), பலவற்றைச் சேர்த்து ஒன்றற்கு உவமை கூறுதல், ஒன்றற்குப் பலவற்றை உவமை கூறுதல் எனப் பலவித நடைகளிலும் முறைகளிலும் உவமை கூறப்படும். அவை கூறப்பட்டுள்ள முறையை அறிந்து, பொருள் கொள்ளுதல் வேண்டும்.

வேறுபட வருதல் - உவமை வெவ்வேறு உருவில் கூறப்படுதல்.

உவமைக்கும் பொருளுக்கும் ஒப்புமை மாறுபடக் கூறுதல், இரண்டை அடுக்கிக் கூறி ஒன்றை உவமித்து மற்றதை உவமிக்காது விடுதல், பலவற்றைச் சேர்த்து ஒன்றற்கு உவமை கூறுதல் என இவ்வாறு கூறப்படுவன யாவும் உவமையுள் அடங்கும். கூறிய மருங்கின் கொள்வழிக் கொளாஅல் - அவ் உவமை கூறப்பட்டுள்ள விதத்தை

அறிந்து, அதற்கு ஏற்பப் பொருளுணர்ந்து கொள்ள வேண்டும். பிற்காலத்தில் உவமை, உருவக வகைகளாகக் கூறுவன பல இதிலடங்கும்.

**உவமை ஆகுமோ என மறுப்பதும் உவமையுள் அடங்கும்**

**ஓரீஇக் கூறலும் மரீஇய பண்பே. (1254)**

'இதற்கு இது உவமையாகுமோ?' என மறுத்துக் கூறலும் ஒருவகை உவமையாக மரபுவழி பொருந்திவந்த வழக்கமேயாகும்.

'கடந்தடு தானைச் சேரலாதனை, யாங்ஙனம் ஒத்தியோ வீங்கு செலல் மண்டிலம்?' (புறம். 8) ஞாயிறே நீ சேரலாதனுக்கு எவ்வாறு ஒப்பாவாய் எனக் கேட்கும் இது ஒரீஇக் கூறுவது. ஒப்பாகாது என்பதுபோல் கூறினும் இது உவமையேயாகும்.

'இதற்கு இது உவமையாகுமோ?' - 'முகத்திற்கு மதி உவமை ஆகுமோ?' இவ்வாறு கூறுதல். ஒரீஇக் கூறல் - மறுத்துக் கூறுதல். மரீஇய பண்பே - மருவி வரும் வழக்காறேயாம்.

**உவமத்தின் தன்மையைச் சிறப்பித்தலும் ஒருவகைப் பயன்பாடுடையதே**

**உவமத் தன்மையும் உரித்தென மொழிப**
**பயனிலை புரிந்த வழக்கத் தான. (1255)**

உவமைத் தன்மைபட எப்படிக் கூறினாலும், அது உவமையாவதின் பயனை விளைக்குமானால், உவமையின்பாற்படும். உவமைத் தன்மை - உவமையாகாமல் அதன் தன்மை மட்டும் கூறப்படுவது இது. ஆனால் அது உவமையின் பயனை விளைவிக்கவேண்டும். "பாரி பாரி என்றே புகழ்கிறீர்கள். பாரிமட்டுமன்று, உலகு புரப்பதற்கு மாரியும் உண்டு" (புறம். 107). இதில் உவமையாகக் கூறப்படவில்லை. உலகு புரப்பதற்கு மழையும் இருக்கிறது என்பதால், எவ்வாறோ உவமைத்தன்மை அதில் வந்து விடுகிறது. ஒரீஇக் கூறல், உவமைத்தன்மை கூறல், தடுமாறிக் கூறல் எல்லாம் வேறுபட வந்த உவமத் தோற்றத்தில் அடங்குமாயினும், இவை மட்டும் சிறப்புக் கருதி வேறு பிரித்து ஓதப்பட்டுள்ளன.

**ஓங்கிலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் - ஆங்கவற்றுள்**
**மின்நேர் தனிஆழி வெங்கதிர் ஒன்று ஏனையது**
**தன்நேர் இலாத தமிழ்.**

இதில் உவமையின் தன்மை முழுவதும் விரித்துரைக்கப்பட்டுளது. ஆயினும் உவமை வடிவில் இல்லை. எனினும் இதுவும் உவமையுள் அடங்கும்.

உவமத்தன்மை - உவமையின் இயல்பு. பயனிலை புரிந்த வழக்கத்தான - அவ்வாறு சொல்வதால் உவமையின் பயன்பாடு உண்டாகும் வழக்குண்மையால் அவ்வாறு கூறப்படும். 'பாரி மட்டுமன்று, உலகு புரக்கும் மாரியும் உண்டு' என்பதே உவமையின் தன்மை கூறுதல். உவமையை அதன் தன்மை முழுதையும் விவரித்துக் கூறுதலும் உண்டு. பொதுவாக உவமைத் தன்மைபட, இயல்பாகக் கூறுவன எல்லாம் உவமையுள் அடங்கும். அவை உவமையின் பயனை விளைவித்தால், அதுவே போதும்.

**ஐயப்படுவது போன்ற நடையிலும் உவமைவரும்**

**தடுமாறு உவமம் கடிவரை இன்றே. (1256)**

இதுவோ, அதுவோ என ஐயப்பட்டுக் கூறுவது உவமையாகாதது போல் தோன்றும். ஆயினும் ஐயப்படுதலும் ஒருவகையில் உவமமே. வண்டு கண்போல் மலர்ந்த பூவையும் பூப்போல் மலர்ந்த கண்ணையும் தெளியாது, எதில் மொய்ப்பதெனத் திகைக்கும் என்பதும் ஐயமே. இவ்வாறு தடுமாறுவதாக வருவனவும் நீக்கப்படா. 'கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல், நோக்கம் இம்மூன்றும் உடைத்து' (1085), இதுவும் ஐய உவமை எனப்படும்.

இதுவோ அதுவோ உவமையாகத் தக்கது என ஐயப்பட்டுக் கூறுவது, தடுமாறுவமம், அவ்வாறு கூறலும் உவமையே; உவமையில்லை என நீக்கப்படாது.

'இவள் கண்கள் கூற்றமோ, மானோ, மீனோ' என ஐயுற்றாற்போலக் கூறினும், இவை அவ்வுவமைகள் போல்வனவே என்பது பெறப்படும். தடுமாறுதல் - ஐயப்படுதல்.

**அடுக்கிய உவமை**

**அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே. (1257)**

உவமைகளை ஒன்றன்பின் ஒன்றாக அடுக்குதல் தவறு. பால் போலும் வெண் கொக்கு; வெண் கொக்குப் போலும் சுண்ணம் (சுண்ணாம்பு), சுண்ணம் போலும் வெண்மதி; வெண்மதி போலும் வாண்முகம் - இவ்வாறு அடுக்கிக் கூறுதல் தவறு. அதைத் தவிர்த்தலே நல்லது. உவமைக்கு உவமைதான் அடுக்கக் கூடாது. பல உவமைகள் அடுக்கி வரலாம். மலர் போன்ற கண், மதிபோன்ற முகம், சங்குபோல் கழுத்து - இவை பல உவமைகள் அடுக்கி வந்தன. ஓர் உவமைக்கே இன்னொரு உவமை என அடுக்கி வருவதே தப்பு. 'மதி போன்ற முகம்போலும் தாமரை' - என அடுக்குவதே தவறு.

உவமையை ஒன்றோடு ஒன்று அடுக்குவதைக் கைவிட வேண்டும். அது குழப்பமாகும். பால்போலும் கொக்குப் போன்றது வெண்மை என அடுக்கிக் கொண்டே போவது தவறு. அவ்வாறு பாடுவதைத் தவிர்க்க வேண்டும்.

**நிரல்நிறை முதலியன அடுக்கி வரலாம்**

**நிரல் நிறுத்தமைத்தல் நிரல்நிறை சுண்ணம்**
**வரைநிலை வைத்த மூன்றலங் கடையே. (1258)**

அடுக்கிய தோற்றம் எவ்வெவ்விடத்தில் வரலாம் என்பது இனிக் கூறப்படுகிறது.

நிரல் நிறுத்து அமைத்தல் - நிலம் நீர் வளி விசும்பு என்ற நான்கின், அளப்பரியையே (பதிற். 14).

நிரல் நிறை -

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. (45)

சுண்ணம் - உவமையைத் தனித்தனியே துண்டித்து, பொருளையும் துணித்து ஒட்டுதல். இது முரண்நிரல்நிறை போல்வது.

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனையவர். (410)

மக்களொடு விலங்கனையர் என மாற்றிப் பொருள்கொள்ள வேண்டும்.

நிரல் நிறுத்தமைத்தல் - ஒரு பொருளுக்குப் பல உவமைகளை வரிசையாக அமைத்தல். 'நிலம் நீர் வளி விசும்பு என்ற நான்கின்அளப்பரியையே' என வருதல் (புதிற். 14). நிரல் நிறை - உவமை பலவும் சேர நிறுத்தி, அவற்றுக்கான பொருள்களை வரிசைப்படி, நிரலே நிறுத்துதல் (அமைத்தல்). இனிய உளவாக இன்னாத கூறல், கனியிருப்பக் காய்கவர்ந் தற்று (100). பொருளை முன்னே நிறுத்திய வரிசைப்படி உவமை பின்னே நிறுத்தப்பட்டுள்ளது. சுண்ணம் - ஒருவகைப் பொருள்கோள் போன்றது இது. வரைநிலை வைத்த - ஒரு வரையறை நிலையில் வைக்கப்பட்டவை. இம் மூன்றும் தவிர, பிறவாறு அடுக்கி வருதல் தவறு.

## மெய்ப்பாட்டியல், உவமையியல்
## நூற்பா முதற்குறிப்பு அகரநிரல்

எண் - நூற்பா எண்


அடுக்கிய 1257
அணங்கே 1202
அல்குல் 1209
அன்ன ஆங்க 1233
அன்ன என் 1234
அன்ன பிறவும் 1213
அவைதாம், அன்ன 1232
அவையும் உளவே 1215
ஆங்கவை 1206
இரட்டை 1243
இளிவே 1199
இனிதுறு 1249
இன்பத்தை 1216
உவமத்தன்மை 1255
உவமப் பொருளை உணரும் 1242
உவமப் பொருளை உற்றது 1241
உவமப் போலி 1245
உவமையும் 1229
உயர்ந்ததன் 1224
உறுப்பறை 1204
எள்ளல் இளமை 1198
எள்ள விழைய 1235
ஓஇ 1251
கடுப்ப 1236
கண்ணினும் 1221
கல்வி 1203
கிழக்கிடு 1226
கிழவி 1247
கிழவோட்கு 1250
கிழவோற்கு இடம் 1251
கிழவோற்கு உரன் 1248
கூழை 1208
சிறப்பே 1225
சுட்டிக்கூறா 1228
செல்வம் 1205
தத்தம் 1238
தடுமாறுவமம் 1256
தவலரும் 1246
தெய்வம் 1218
தெரிந்து 1211
தோழியும் 1252
நகையே 1197
நாவிரண்டாகும் 1196
நாவிரண்டாகும் (உவமையியல்) 1239
நிம்பிரி 1220
நிரல் நிறுத்து 1258
பண்ணை 1195
பாராட்டு 1210
பிறப்பே 1219
பிறிதொடு 1244
புதுமுகம் 1207
புதுமை 1201
புறஞ்செய 1212
பெருமையும் உடைய 1231
பெருமையும் என்ப 1240
பொருளே 1230
போல மறுப்ப 1237
முட்டுவயின் 1217
முதலும் 1227
மூப்பே 1200
விரவியும் 1223
வினையயன் 1222
வினையுயிர் 1214
வேறுபட 1258